Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

ரூபா 30.00
மார்ச்
03 - 09, 2016
பக்கம்24
முரசு 1159



## மெதுவாகச் சாத்தப்படுகிறது போர்க்குற்ற விசாரணைக் கதவு!





## பறை மேளக்கூத்தும் அதன் இன்றைய நிலையும்

## இடையில் முறிவடையும் திருமணங்கள்



## பெண்ணுக்கே உரியவை



## ஈவிரக்கமற்ற ஈனப் படுகொலைகளும் தாக்குதல்களும்

## ஓம் செய்வினை தோசத்தை விரட்ட...

முதலில் குலதெய்வத்துக்குக் காணிக்கை எடுத்து வைக்கவேண்டும். 27 எலுமிச்சைப் பழம் எடுத்து, அதனைச் சாறு பிழிந்து ஒரு பாத்திரத்தில் எடுக்க வேண்டும்.

(சாறோடு தேவையான அளவு தண்ணீர் கலந்து வைத்துக் கொள்ளலாம்) பிழியப்பட்ட சாறை, உங்கள் வீட்டைச் சுற்றியும், வியாபார இடத்தைச் சுற்றியும் வெளிப்புறமாக ஊற்றுங்கள். சாறு பிழியப்பட்ட எலுமிச்சைத் தோல்களை உங்கள் வீட்டு முன்பு வைத்து, அதனோடு 27 அரசங்குச்சிகளைச் சேர்த்து எரிக்கவேண்டும். அது சாம்பலானபின், அந்த சாம்பலை உங்கள் வியாபார ஸ்தலம், உங்கள் வீடு முதலிய இடங்களில் தூவி விடுங்கள்.

செய்வினை பறந்தோடிவிடும். யோக நரசிம்மரின் படத்தை வீட்டில் வைத்து தினமும் காலையில் நீராடிய பின்பு 12 தடவை வலம்வந்து வணங்கி வாருங்கள் செய்வினை தோஷம் இருந்தால் யோக நரசிம்மரின் சக்தியால் அது முறிந்துவிடும்.

## பாறையில் விழுந்த விதைகள்!

இயேசுவின் உவமைகளில் நன்கு அறிமுகமான ஒன்று விதைப்பவன் உவமை. இதில் இயேசு இறைவார்த்தையைக் கேட்கும் மக்களை நான்கு விதங்களில் வகைப்படுத்துகிறார். அவற்றில் இரண்டாவது வகையான பாறை நிலம் பற்றி இன்று சிந்தித்து, நம்மை ஆய்வுசெய்வோம். பாறைமீது விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். சிறிதுகாலமே நிலைத்திருப்பவர்கள்.

இறைவார்த்தையின் பொருட்டு இன்னலோ, இடுக்கண்ணோ நேர்ந்த உடனே அவர்கள் தடுமாற்றம் அடைவார்கள் என்கிறார் ஆண்டவர் இயேசு. இறைவார்த்தையின்மீது உங்களுக்குள்ள ஆர்வத்தின் காரணமாகத் தான் நீங்களும், நானும் இந்நேரம் இந்த இணையத்தளத்தில் இணைந்திருக்கிறோம். மகிழ்ச்சியோடு இறைச்செய்தியை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இயேசு கூறியபடியே துன்பங்கள் வரும்பொழுது வார்த்தையில் நிலைத்திராமல் தவறிவிடுகிறோம். இதை உணர்வோம். என்ன நேர்ந்தாலும் இறைவார்த்தையின்படி வாழ்கின்ற அருளை வேண்டுவோம்.

## ஜிகாத் என்பதன் உண்மைப் பொருள்

சரித்திர ஏடுகளை நாம் புரட்டிப் பார்க்கும் பொழுது, 'ஜிகாத்' என்ற மார்க்க யுத்தம் நடந்ததைக் காணமுடிகிறது. இப்படிப் பல யுத்தம் நடந்துள்ளன. ஆனால், இவை அனைத்தும் தற்காப்பு யுத்தங்களாகவே நடந்துள்ளன என்பதையே நம்மால் காண முடிகிறது.

புண் இருவகையில் உண்டு. ஒரு வகை:- அதன்மேல் மருந்தைப் பூசி ஆற்றிவிடலாம். மற்றொரு வகை, அதனைக் கீறிச் சுத்தப்படுத்தி ஆற்றவேண்டிய நிலையிலுள்ளது. அதற்கு ஆயுதம் தேவைப்படுகிறது. ஜிகாத் நிலையும் இப்படித்தான் இருந்தது.

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பூண்டோடு அழித்துவிடக் கங்கணம்கட்டிச் சதி செய்தவர்களோடு போரிட்டே பாதுகாப்புப் பெறவேண்டியிருந்தது.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

# தேன் கிண்ணம்



## உலக அழகியே!

கார் கால மேகத்துடை கருவிழிகள் கொண்டே - நின்
கணை எய்திடும் இப்பிரபஞ்சப் பேரழகை
காண்போர் மனம் நெகிழ்ந்துடன் தவித்திட
கயல்வழியால் மயக்கிச்செல்லும் இப்பாவையாரோ?

தேவலோகத்துயர் சிற்பி செதுக்கிய சிற்பமே! - நின்
தேகத்தின் அழகையாளும் சிற்றிடையின்
அழகை என் சொல்வேன்.
விழிகளிலே வேல்கொண்டு அழகுப் போர் தொடுக்கவரும்
வீரத் தமிழ் பா உரைக்கும் உலகழகு நீயே!

மென்மையே நாணும் உன் அழகுத் தேகம் தனிலே
விரலிலே அழகுக் கிரீடம் ஆளுகின்றது இப்பேரழகை.
பெண்ணெனும் மகத்துவம் கொண்டே இப்பெருநிலம்
வந்தவளே!
விண்ணும், மண்ணும் ஆளும் உலகழகு நீ ஒன்றே.

அழகினுள்ளும் இழகா கற்பின் தனித்துவம் கண்டவளே!
அழகுத் தமிழுரைக்கும் அருமைப் பெண்ணும் நீதான்.
கூந்தலின் சுருளும் சுருதி சேர்த்திடும் நின் அழகிற்கு.
மாட மயில் நளினம்போல் மெல்ல நடந்தே - அழகின்
மஞ்சத்திலுறங்கும் உலகப் பிரபஞ்ச அழகு என்றும் நீதான்.

**சி.அரவிந்ராஜ், ஆலங்கேணி.**

## அன்பு



அன்பு உண்மையானது
அன்பு தூய்மையானது
அன்பு அன்பானது
அன்பு அடக்கமானது
அன்பு அறிவானது
அன்பு புரியக் கூடியது
அன்பு இன்பமானது
அன்பு துன்பமறியாதது
அன்பு ஆழமானது
அன்பு ஆழ்கடல் போன்றது
அன்பு அசிங்கம் இல்லாதது
அன்பு அளவற்றது
அன்பு வேறுபாடு இல்லாதது
அன்பு ஆண் பெண் அறியாதது
அன்பு பொறாமை அற்றது
அன்பு ஆபத்து இல்லாதது
அன்பு நேர்மையானது
அன்பு அற்புதமானது
அன்பு வேசமற்றது
அன்பு பாசம் கொண்டது
அன்பு மோகம் இல்லாதது
அன்பு மேன்மையானது
அன்பு வடிவமற்றது
அன்பு தெய்வமானது
அன்பு மதிக்கவேண்டியது.

**S.J.ஜெயரூபி,**
**சங்கரத்தை.**

## காதல்!!!

காதலைத் தவிர
எல்லா விடயங்களிலும்
என் கவனக் கலைப்பை
கச்சிதமாக செய்த காதல்.
பரீட்சைத் தாள் முழுவதிலும்
உன் பெயரை எழுத்த வைத்த
பலனில்லாத காதல்.
முழித்திருக்கும் போதும்
உறங்கியிருக்கும் போதும்
முட்டாள்த் தனமாக
அவளை நினைக்கச் செய்த
மோசமான காதல்.
பெற்றோரையும், கற்றோரையும்
கலங்க வைத்த காதல்.
மற்றவர்கள் எல்லாரையும் மறந்து
உன்னை மட்டும் நினைத்ததால்
இன்று என்னை மட்டும்
மிதிக்கும் காதல்
என் நண்பன் செத்தபோதுகூட
தாங்கிக் கொண்டேன்.
என் காதல் செத்ததை
தாங்க முடியாமலுள்ள காதல்.
என் காதல் தோல்வியை
ஏற்றுக் கொண்டதால்தான்
மனம் வைராக்கியமாக இருக்கின்றது.
பழம் அழுக அழுக்த்தான்
விஷம் ஊறும்
நானும் அழுது கொண்டே...
அழுகிக் கொண்டிருக்கின்றேன்
உன் மோசமான காதலினால்.



**மு.கா.முகம்மது அஸ்வர்,**
**திருகோணமலை.**

## எங்கே நீ!

என்னவளே!
எங்கே நீ
உன் விழியில்
என் முகம் என்றாய்!
உனக்குள் நான் என்றாய்!
விரல்தொட்டுப் பேசினாய்
சொல்வதெல்லாம் உண்மையென்றாய்!
ஆனால்? முடிந்ததே உன் திருமணம்.
இனியாவது உண்மையைச் சொல்லிவிடு
உன் கணவனிடம்.



**கே.வாலேந்திரன்,**
**கொள்ளுப்பிட்டி.**

தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262,**
**0774150799**





**மார்ச் - 18**

**குற்றம் புரிந்தவனைத் தூக்கிலிடாதே; அவன் குற்றங்கள் புரிவதற்கான காரணங்களைத் தூக்கிலிடு!**

ரூசோ

# வடமாகாண முதலமைச்சருக்கு எதிராக நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு



வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் மற்றும் விவசாய அமைச்சருக்கு எதிராக நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சர் சீ.ஐங்கரநேசன் ஆகியோருக்கு எதிராக இவ்வாறு குற்றம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது. மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் முறைப்பாடு செய்ய உள்ளனர். கடந்த காலங்களில் அமைச்சின் ஊடாக கோடிக்கணக்கில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வடமாகாண முதலமைச்சர் விவசாய அமைச்சரை பாதுகாக்க முயற்சிப்பதாகவும் விசாரணை நடத்த ஆர்வம் காட்டுவதில்லை எனவும் மாகாண சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். சுமார் 20 பேர் அடங்கிய மாகாணசபை உறுப்பினர்கள் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர். மாகாண அமைச்சரை பாதுகாக்க முயற்சிப்பதனால் மாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகிய இருவருக்கு எதிராகவும் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

# மங்கள - மைத்திரி முறுகல் முற்றியது

சிறிலங்காவின் ஜனாதிபதிக்கும், வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் முறுகல்நிலை உருவாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கில ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. யுத்தக்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச பங்களிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று சிறிலங்காவின் ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துவருகிறார். ஆனால் அமெரிக்காவுக்கு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் இதற்கு புறம்பான கருத்தை கூறியிருந்தார். தமிழ் மக்களுக்கு உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையை ஏற்புடுத்துவதற்கு, சர்வதேச பங்களிப்பை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவர்கள் இருவருக்கும் இடையில் இந்த விடயத்தில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஆரம்பமானது ஐ.நா கூட்டத் தொடர்! இலங்கையை மறந்த அல் ஹூசேன்...?

ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 31ஆவது அமர்வில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட்ராட் அல் ஹூசேன் தொடக்கவுரை நிகழ்த்தியிருந்தார். இதன்போது, அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தனது உரையில் எதுவும் குறிப்பிடாமல் மௌனம் காத்துள்ளார். அவர் தனது உரையில், பல்வேறு நாடுகளின் மனிதஉரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார். எனினும் இலங்கை தொடர்பாக எதையும் சுட்டிக்காட்டவில்லை. அவர் தனது உரையில், தனது இலங்கைப் பயணம் தொடர்பான விபரங்களை வெளியிடுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும், அவர் அதுதொடர்பாக மௌனம் காத்துள்ளார். இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 31ஆவது



அமர்வில், இலங்கை குறித்த விவாதங்கள் எதுவும் நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனக்கலவரமொன்று ஏற்பட இடமளிக்கமாட்டோம் - ஜே.வி.பி. தலைவர்

நாம் இந்த நாட்டில் பலமாக இருக்கும்வரையில், இந்த நாட்டில் எந்த தோற்றத்திலும் இனக் கலவரமொன்று ஏற்பட இடமளிக்கமாட்டோம் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். சிங்க இரத்தம், தமிழ் இரத்தம், முஸ்லிம் இரத்தம் என சொல்கிறார்கள். இருப்பினும், எம்மிடம் இருப்பது மனித இரத்தம் ஒன்று மட்டுமே. ஒருவரை ஒருவர் கோபத்துடனும், குரோதத்துடனும் பார்க்கும் ஒரு சமூகம் எமக்குத் தேவையில்லை.

சிங்கள, தமிழர், முஸ்லிம், பேகர், மலே ஆகிய சகல இன மக்களும் ஒற்றுமையாக மனிதத்துவத்துடன் வாழும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எமக்கு இந்நாட்டில் இனவாதத்துக்கு எதிராக ஒரு போராட்டம் உள்ளது. எமது நாடு 30 வருட யுத்தத்துக்கு முகம் கொடுத்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை இதுவரை கூறமுடியாதுள்ளது. அழிந்த சொத்துக்கள் எவ்வளவு எனத் தெரியாது. இந்த நாடு இரத்தத்தால் நனைந்தது. கண்ணீரினால் கழுவப்பட்டது. வரலாற்றில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்நாட்டில் சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம், முஸ்லிம் இனவாதம் என உருவாக்கப்பட்டன. இதற்காக, வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் சாதாரண தாய், தந்தையின் பிள்ளைகள் பொறுப்பாளர்கள் அல்லர்.

வடக்கினதும், தெற்கினதும் அதிகாரத்தை பெறுவதற்காக இனவாதத்தை தூண்டி விட்டனர். யுத்தமொன்றுக்கு இழுத்துச் சென்றனர். இந்த யுத்தத்தினால் இறந்தவர்கள் சாதாரண தாய், தந்தையின் பிள்ளைகள். வடக்கில் மாத்திரம் யுத்தத்தினால் விதவையானவர்கள் 40 ஆயிரம் பேர் உள்ளனர். தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகள் 2500 பேர் உள்ளனர். இந்த யுத்தம் மனிதநேயத்தையும், ஒற்றுமையையும், பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியது. இவை அனைத்தும் பொது மக்களுடையது. ஆட்சியாளர்கள் இந்த இனவாத யுத்தத்தில் உயிரைவிடவில்லை. அவர்கள் இனவாதத்தை தூண்டியவர்கள் மட்டுமே. பிரச்சினையை ஏற்படுத்துபவர்கள் மாத்திரமே. அவர்கள் ஆட்சியை மாத்திரமே எதிர்பார்க்கின்றனர். இது இவ்வாறிருப்பதனால், இந்த நாட்டில் இதன்பின்னர் ஒரு யுத்தம் ஏற்பட இடமளிக்கக் கூடாது எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போது கூறினார்.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த ஆங்கில தினம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த ஆங்கில தினமானது 22.02.2016 அன்று ஆங்கில மன்றத்தினால் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக திரு. சரவணபவ ஐயர் (யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் - ஆங்கில மொழித்துறை) அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு.ஐ.செல்வராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம், வடமராட்சி) அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. சி.சுந்தரேஸ்வரன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் தலைவர், ஆங்கில மொழித்துறை அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வானது காலை 9.00 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆரம்பித்து மாலை 1.00 மணியளவில் கல்லூரி கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது.



# இந்த ஆட்சியை குழப்பவேண்டாம் என மேற்குலம் இந்தியாவும் கோருகிறது

## கஜேந்திரகுமார்



இந்த ஆட்சியை நாம் விரும்பியே கொண்டு வந்துள்ளோம். இதனை குழப்பவேண்டாம் என மேற்குலகமும், இந்தியாவும் எங்களிடம் கோருகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தல் கூட்டத்தில் வவுனியாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு தீர்வுத் திட்டத்தை நாம் பெற்றுக்கொண்டாலும்கூட அது எந்தளவிற்கு நின்று பிடிக்கும் என்ற கேள்வி இருக்கிறது. ஒரு தலைப்பட்சமாக சிங்கள இனம் இதை மீறவெளிக்கிட்டால் என்ன செய்வது. ஏனெனில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் மீறும் போது அதனை கண்காணித்து ஆதரவு வழங்கிய சர்வதேச சமூகம் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது போல இங்கும் வருமா என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்பட்டது.

குறிப்பாக அரசியலை எப்படி பார்க்க வேண்டும் என்றால் பலத்தின் அடிப்படையில் பார்க்கவேண்டும். விசேடமாக இன்று இருக்கின்ற அரசியல் நிலைமைகள் குறிப்பாக சர்வதேச அரசியலை எடுத்து பார்த்தால் ஆட்சி மாற்றம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி ஏற்பட்டபின்னர் மேற்கு தூதரகங்கள், இந்தியா போன்ற நாடுகள் எங்களிடம் கேட்பது இந்த ஆட்சியை குழப்ப வேண்டாம். அரசாங்கத்திற்கு அதிக நெருக்கடியை கொடுக்கவேண்டாம். ஏனென்றால் இருந்த ஆட்சி மிகவும் மோசமான ஆட்சி. ஆனால் தற்போது வந்துள்ள ஆட்சி மேற்குலகமும், இந்தியாவும் விரும்பிய ஆட்சி. அதனால் தயவுசெய்து குழப்பவேண்டாம் என கேட்கிறார்கள்.

ஆனால், குழப்புவது எமது நோக்கமல்ல. எமது நோக்கம் மஹிந்த ராஜபக்ஸவை மீண்டும் கொண்டு வருவதல்ல. எங்களுக்கும் சில தேவைகள் இருக்கின்றது. அந்த தேவைகளை சர்வதேச சமூகம் எமது நியாயமான விடயங்களை விளங்கிக் கொண்டு ஒரு தீர்வைப் பெற்றுத் தாருங்கள். நாங்கள் சில விட்டுக் கொடுப்புக்களை செய்துள்ளோம். உங்கள் நாடுகளில் உள்ள சமஸ்டி முறையையே நாம் கோருகின்றோம். நாங்கள் உலகத்தில் இல்லாத ஒரு ஆட்சியை கேட்கவில்லை.

ஆகவே இங்கு உண்மையில் பிரச்சினையாக இருப்பது சிங்கள தேசியவாதம். இந்த நியாயமான பிரச்சினைகளை புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஒன்றுபட்டு இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்புக்காட்ட வெளிக்கிட்டால் அது உங்களுக்கு ஒரு இடைஞ்சலாக இருக்கும்.

மக்கள் பேரவை கட்டியெழுப்பப்படும் எனவும் தெரிவித்தார்.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முழுமை பெறுமா? இந்த அரசியல் சாசன மாற்றம்

இன்றைய அரசியல் சூழலில் இது ஒரு முக்கிய கருப்பொருளாக உருவெடுத்துள்ளது. ஒருபுறம் தமிழ் மக்கள் பேரவை அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக பல முன்வைப்புக்களை அங்குரார்ப்பணம் செய்கின்றது. மறுபுறம் அரசு பலகருத்துக் கணிப்புக்களைப் பிரதேசரீதியாக மேற்கொண்டு வருகின்றது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இது தொடர்பாக பல நம்பிக்கைகளை வெளியிட்டுள்ளார். இவ்வாறிருக்கும் போது இந்த அரசியல் சாசனம் முழுமை பெறுமா? அதன் மூலம் தமிழ் மக்களிற்கான ஒரு தீர்வு கைகூடுமா? எனும் ஐயப்பாடுகள் எல்லாம் மேலெழுந்துள்ளது.

புதிய அரசியலமைப்பின் மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ள நிலையில் அப்பணிகளை யாரும் குழப்புவதோ அல்லது காலதாமதப்படுத்துவதோ கூடாதென எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அரசியல் கட்சிகளிடத்தில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றுவது குறித்த பிரேரணை மீது இடம்பெற்ற விவாதத்தின் போது ஆளும் தரப்புக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக நாம் இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 1978ம் ஆண்டு அரசியலமைப்பை கைவிட வேண்டும். அதில் உள்ள பல விடயங்கள் ஏற்புடையனவல்ல. அதனால் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அவ்விடயம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான இணக்கப்பாடும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. அத்துடன் நிறைவேற்று அதிகார முறையை நீக்குதல், புதிய தேர்தல் முறை உருவாக்கம் போன்ற விடயங்கள் குறித்தும் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே இதனை யாரும் குழப்பவோ, தாமதப்படுத்தவோ கூடாது என்றார்.

மறு புறத்தில் பிரதமர் கருத்து வெளியிடும் போது வடக்குக் கிழக்கு இணைவோ அல்லது தமிழர்க்கான சமஷ்டித் தீர்வென்பதோ ஒரு போதும் கிடைக்காது. ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வு. இதுவும் புதிய அரசியல் சாசன விடயத்துள் உள்ளடங்காது. முதலில் அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக மட்டுமே பேசப்படும் பின்னர் தமிழ் மக்களிற்கான தீர்வு நிலை தொடர்பாக சிந்திக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கூறும் அதே விடயத்தைத்தான் பிரதமரும் தற்போது கூறுகின்றார். அப்படியானால் தமிழ் தேசிய கூட்டமைபின் தலைவர் சம்பந்தரால் கிளிநொச்சியில் முன்வைக்கப்பட்ட சமஷ்டி தொடர்பான கருத்து தமிழ் மக்களை வளைத்துப் போடுவதற்கான பழைய புஸ்வானமா?....

அரசியலமைப்பு யோசனைகளை முன்வைக்குமாறு கூறும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வடக்கு கிழக்கை இணைக்க முடியாது, சமஷ்டி கொடுக்க முடியாது, ஒற்றையாட்சிக்குள்ளே தீர்வு எனக் கூறிவருகின்றமையானது, புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழக் கோரிக்கை சாத்தியப்படாத நிலையில் போரிற்குப் பின்னர். தமிழ் மக்களுடைய கோரிக்கை என்ன என்பதை தெளிவாக முழுமையாக முன்வைக்காத ஒரு சூழல் இருந்து வந்தது. இதனால் அரசாங்கம் ஒரு அரசியல் சாசன சபையை உருவாக்க சிந்தித்தது. அதனால் அந்த சபைக்கு தமிழ் மக்களின் தேவைகள் என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருந்தது. தற்போது அதியுச்ச சமஷ்டித்தீர்வு எனும் முன்வைப்புக்களை ஒரு புறம் தமிழ் தேசிய கூட்டமைப்பு வைத்துவிட்டு மறுபுறம் சமஷ்டியை நிராகரிக்கும் அரசோடு புகுந்து விளையாடுகின்றது? இதுவே தற்போது பல நம்பிக்கையீனங்களை ஏற்படுத்துகின்றன.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைபை அரசு பரிசீலனை செய்யுமா? அதற்கு தமிழ் கூட்டமைப்பு இடங்கொடுக்குமா? இது தற்செயலாக புறக்கணிக்கப்பட்டால் அது தொடர்பான அடுத்த கட்ட நகர்விற்கு தமிழ் மக்கள் பேரவைக்கு என்ன அரசியல் அங்கீகாரம் உள்ளன? மாகாண முதலமைச்சரின் அரசியல் அந்தஸ்து மத்திய அரசின் தீர்மானங்களிற்கு வலுச்சேர்க்குமா? என்கின்ற சிக்கல்கள் எல்லாம் மறுபுறத்தில் உள்ளன.

தமிழ் மக்கள் சார்பான அமைப்புக்களை தீர்வு யோசனைகளைக் கொண்டு வாருங்கள் என பிரதமர் கூறிவிட்டு அதற்கு முன்பாக அவர்கள் வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது, சமஷ்டியைக் கொடுக்க முடியாது, 13 திருத்தம், ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்றால் அவ் அமைப்புக்கள் மறுபுறத்தில் எதைத்தான் கொண்டுவருவது. எதைத்தான் நடைமுறைப்படுத்தவது?

தற்போதைய நிலையில் ஒரு அரசியல் சாசன மாற்றம் முழுமையாக வருமா? அல்லது தற்போதைய ஒற்றையாட்சி சாசனத்தில் சில திருத்தம் கொண்டு வரப்படுமா? என்பது கேள்விக்குறியே. ஏனென்றால் சில நாட்களுக்கு முன்னர் நடந்த பாராளுமன்ற விவாதத்தில் புதிய அரசியல் சாசனம் என்பதில் புதிய என்ற வார்த்தை நீக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனம் மாற்றம் என்றே பேசப்படுகிறது.

அரசியல் சாசன சபையை நிறுவுவது தொடர்பாக கடந்த மாதம் இரண்டு நாட்கள், இந்த மாதம் இரண்டு நாட்கள் சபையில் விவாதங்கள் நடந்தும் இன்னும் வாக்கெடுப்புக்கு செல்லவில்லை. அடுத்த மாதம் தான் வாக்கெடுப்புக்கு வரும் என்று கூறப்படுகிறது. வாக்கெடுப்புக்கு போகும் முன்னரே தமிழ் தேசிய இனப்பிரச்சனை என்று குறிப்பிடப்பட்ட பந்தி எல்லாம் நீக்கப்பட்டுள்ளது. தற்போது ஆளும் கட்சி இரண்டும் சேர்ந்து கொண்டு வரப்போகின்ற அரசியல் சாசன சபை ஒரு புதிய அரசியல் அமைப்பை கொண்டுவரப்போகிறதா அல்லது இருக்கின்ற அரசியல் சாசனத்தில் ஒரு மாற்றத்தை கொண்டுவரப்போகின்றதா என்பது பெரிய கேள்வியாகவுள்ளது.

# மெதுவாகச் சாத்தப்படுகிறது போர்க்குற்ற விசாரணைக் கதவு!



நாளுக்கு நாள் நல்லாட்சியெனும் பெயரை உச்சரித்துவரும் நம்மக்கள் வார்த்தையில் மட்டும் சில வசந்தங்களைத் தேடுகின்றனரே தவிர வாழ்க்கையில் எதுவும் நடக்கவில்லை. நல்லாட்சி என்பது தமிழரைப் பொறுத்தவரையில் வார்த்தையில்தான் மலர்ந்திருக்கிறதே தவிர, அரசியல் செயற்பாடுகளில் அல்ல. தமிழ் மக்களின் தெரிவுகளும் மாகாணத்தில் இருந்து மத்திவரை முரண்பாட்டையும், சுயலாபங்களையும் சுமந்து வாழ்கின்றதே தவிர பொது நலத்துடன் தீர்வின் திசைமுகங்களைத் தேடும் நோக்கம் அவர்களிற்குமில்லை.

வார்த்தைக்கு வார்த்தை தமிழ் அரசியல் தலைவர்கள் மைத்திரியின் நல்லாட்சி பற்றி என்னதான் புகழ்ந்தாலும், அந்த நல்லாட்சியால் முழுமையாக நன்மைபெறுவது பெரும்பான்மையின சிங்கள மக்களே ஆவர். இறையாட்சியை தவிர எந்த ஆட்சிவந்தாலும் தமிழர்நிலை ஒருபோதும் மாறாது என்பதைத் தமிழர் தரப்பு முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பாக அண்மையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்தியாவின் புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த விசேட பேட்டியிலும், பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியிலும் "போர்க்குற்ற விசாரணை பற்றி தற்போது பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவைதவிர வேறு பல விடயங்கள் உள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது குறித்து உங்கள் கருத்து என்ன..? எனக் கேட்டபோது இலங்கையில் போதியளவு நீதிபதிகள் உள்ளதாலும், சுதந்திரமான நீதித்துறை உள்ளதாலும் வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை. இதற்கு நாமே விசேட நீதிமன்றம் அமைத்து விசாரணை செய்வோம் எனக்கூறியுள்ளார்.

இதேவேளை அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடொன்றில் கருத்து வெளியிடும்போது, சர்வதேச நீதிபதிகளின் உதவியுடன் திட்டமிட்டபடி விசாரணை இடம்பெறும் என மீண்டும் கூறியுள்ளார். இவ்வாறு போர்க்குற்ற விசாரணை தொடர்பாக அரசு உள்நாட்டிற்குள் ஒரு முகத்தையும் வெளிநாட்டிற்குள் வேறோர் முகத்தையும் காட்டிவருகின்றது.

இதை ஐ.நா உட்பட சர்வதேச நாடுகள் தெளிவாகப் புரிந்தும்கூட இந்த விடயத்தில் சர்வதேசம் நல்லாட்சியரசுக்கு ஆதரவாக மென்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவரின் சுயாதீன அத்துமீறிய செயற்பாடுகளிற்கு முடிவுகட்ட போர்க்குற்ற விசாரணையை சர்வதேசம் ஆயுதமாகப் பயன்படுத்தியது. இதில் வெற்றி பெற்ற சர்வதேசம் மகிந்தவின் கொட்டத்தை அடக்கியபின் தனது போர்க்குற்ற விசாரணைக் கதவை மெதுவாக சாத்திவருகின்றது. இதன் பின்னணிகள் தெரியாமல் எம்மவர்கள் ஏதே பிரசாரம் செய்ய நாமே தமிழர்க்காக சர்வதேசம் கண்ணீர் வடிக்கின்றது. காலஓட்டத்தில் எமக்கான ஒரு தீர்வை சர்வதேசம் தேடித்தருமென்றெல்லாம் கனவு காண்கின்றோம். ஆனால் சர்வதேச நிலைப்பாடு தற்போது அதுவல்ல. தனது ஆளுகைக்குள் நாடுகள் இருந்தால்போதும் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை நல்லாட்சி அரசின் வெளிவிவகார அமைச்சர் தெளிவாக சர்வதேச முன்றலில் முன்வைத்து வருகின்றார். இதனால் சர்வதேசம் நாட்டின் இறைமைக்குள் தலை கொடுப்பதை மெதுவாக நிறுத்திவருகின்றது.

அண்மையில் சர்வதேச பிரதிநிதிகள் பலர் வந்தனர் ஏதேதோ சொன்னார்கள். ஆனால், இதுவரை எது நடந்தது...? கைதிகள் விடயத்தில் முடிவில்லை... வடக்கு மீனவர் விடயத்தில் முற்றில்லை... மாகாணத்தில் மட்டுப்படுத்திய அதிகாரங்கள் விடுவிக்கப்படவில்லை... காணாமற்போனோர் தொடர்பாக எந்த முடிவுமில்லை... மத்தியில் கொண்டுவர உள்ள அரசியல் தீர்வுப் பொறிமுறைக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு சேர்த்துக் கொள்ளப்படவில்லை... குற்றவாளிகள் அரசியல் தேவைக்காக தண்டிக்கப்படுகின்றார்களே தவிர இன அழிப்பிற்கான தண்டனையாக அது அமையவில்லை...

தமிழ் மக்களிற்கான தீர்வின் தேவையினைத் தற்போது பெரும்பான்மையின பொது அமைப்புக்களே உணர ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அரசோ அல்லது எம்மவர்களோ அதை அரசியல்மயப்படுத்தித்தான் சிந்திக்கின்றார்கள்.

மைத்திரி - ரணிலின் காலத்திலேனும் தமிழ் மக்களிற்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம்மூலம் தெரிவித்துள்ளதாக அம்பாறை மாவட்ட சர்வமத அமைப்பின் உபதலைவர் ரன்முத்துகல சங்கரத்ன தேரர் கூறியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை, சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள், சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருப்பது குறித்து, பௌத்தமதத் தலைவர்களில் ஒருவர் என்றவகையில், பெரும் கவலைகொள்வதாகவும் மனம் திறந்து தெரிவித்துள்ளார் அவர்.

தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின் விளைவுகளை, இந்த நாடு பெருமளவில் சந்தித்துவிட்டது. இனியும் அத்தகைய கசப்பான சம்பவங்கள் தொடர்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும் சிங்களமொழியை, இங்கு வாழும் தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதேபோன்று சிங்கள மக்களால் தமிழ்மொழியைப் புரிந்துகொள்ள இயலவில்லை. அதனால் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலிடம் வழங்கப்படவேண்டும் என்றும் தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படும் அரசமைப்பின் மூலமாகவேனும், சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைக்குத் தகுந்த, உகந்த நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட்டாகவேண்டும் எனத் தாம் அனுப்பிவைத்துள்ள, அவசரக் கடிதம் ஒன்றில், மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

இவ்வாறாக தேவைப்பாடுகள் இருந்தும் அது நிறைவேறவில்லை என்கின்ற உணர்வலைகள் பலமாக பலர் மத்தியில் எழுந்தும்கூட அரசியல் தலைவர்கள் இடையே அந்த சிந்தனை இஸ்திரமடையவில்லை. தற்போது ஏற்றங்களிற்கு மாறாக ஏற்படும் மாற்றங்களில் பல கதவுகள் ஒவ்வொன்றாக மெதுவாக சாத்தப்படுகின்றனவே தவிர திறக்கப்படவில்லை.

இதில் ஒன்றுதான் சர்வதேச போர்க் குற்ற விசாரணை.





# மாற்றம் மலர்வதற்கு மனதில் வழிவிடுங்கள்!

மனமாற்றம் நிகழ்ந்தால்தான் வாழ்வில் முன்னேற்றம் நிகழும். மாற்றமே முன்னேற்றத்திற்கு முதல்படி. ஒரு கவிதை விதை யாகவே உள்ளது. எந்தவித மாற்றமும் இல்லை என்றால் அது செடியாக வளராது என்பது எவ்வளவு உண்மையோ இதுவும் அவ்வளவு உண்மை. இருவிதமான மாற்றங்கள் நம்மில் நிகழ்கின்றன. ஒன்று, உடல்ரீதியான மாற்றம். மற்றொன்று, மன ரீதியான மாற்றம். உடல்ரீதியான மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே உள்ளது. மேலும் உடல்ரீதியான மாற்றம் நமது கட்டுப்பாட்டில் அவ்வளவாக இல்லை.

ஆனால், மனரீதியான மாற்றம் முழுமையாக நமது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. மேலும், நாம் நினைத்தால்தான் மனரீதியான மாற்றத்தை நிகழ்த்த முடியும். மனதில் மாற்றம் ஏற்படுவதற்கு நீங்கள் சிறந்த கருத்துக்களை மனதில் தூவிக்கொண்டே இருக்கவேண்டும். எவ்வாறு, நிலத்தில் புதைந்த விதை, ஈரம் கிடைத்ததும் முளைத்து விடுகிறதோ அதுபோல மனத்தில் விழுந்த கருத்தும் அதற்கென உரிய நேரம் வரும்போது விழித்துவிடுகிறது. அவ்வாறு மனம் விழிக்கும்போது மனமாறுதல்கள் நிகழ்கின்றன. மேலும், அவை உங்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாகவும் மாறிவிடுகிறது. ஏனென்றால் மனதில் தோன்றும் கருத்துக்களின் வெளிப்பாடே வாழ்க்கை. நல்ல கருத்துக்களின் விளைநிலமாக உங்கள் மனம் விளங்கும்போது வளமான வாழ்க்கை தன்னிச்சையாகவே மலர்ந்துவிடுகிறது.

மனமாற்றமே வெற்றிக்கு விதை. மேலும் புதிய மாற்றங்களைத் தோற்றுவிப்பவராகவும், புதிய மாற்றங்களை ஏற்றுக் கொள்பவராகவும், நீங்கள் விளங்கவேண்டும்.

**புதிய கருத்துக்களை உள்வாங்குங்கள்**

உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாக இல்லாமல், புதிய கருத்துக்களுக்கும் செவி கொடுங்கள். பழைய கருத்துக்களில் உங்களுக்கு நம்பிக்கையும் பிடிப்பும் இருப்பதால் தவறு இல்லை என்றாலும் புதிய கருத்துக்களுக்கு வழிவிடுங்கள். புதிய நீர் ஊறிக்கொண்டே இருப்பதால்தான் நதி நகர்ந்துகொண்டே இருக்கின்றது. அவ்வாறு புதிய நீர் உற்பத்தி ஆகவில்லை என்றால் நதி ஏது? கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். ஆகவே, ஆயிரமாயிரம் கருத்து மலர்கள் மலரும் பூஞ்சோலையாக உங்கள் மனம் மாறட்டும். அதில் பல்வேறு மாறுதல்கள் மலரட்டும். மாறுதல்கள் மலர்வது உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாகவும் செயலுக்கு வேகம் கொடுப்பதாகவும் இருக்க வேண்டும். உங்கள் இயக்கத்தை முடக்கிவிடுவதாக மாறுதல்கள் இருந்துவிடக்கூடாது. ஆகவே மாற்றம் ஆக்கமாக மலரட்டும்.

**கருத்துக் கருவூலம்**

பல்வேறு நூல்களைப் படிப்பதாலும், அறிஞர்களின் உரைகளைக் கேட்பதாலும் புதிய கருத்துக்களை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும்போது அவற்றை அப்படியே உள்வாங்கிக் கொள்ளக் கூடாது. மாறாக புதிய கருத்துக்களுக்கும் ஏற்கனவே உங்களிடம் உள்ள கருத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமை ஆகியவற்றை அலசி ஆராய்ந்து பாருங்கள். மேலும், புதிய கருத்துக்கள் உங்கள் இலட்சியத்தை அடைவதற்கு எந்த அளவுக்கு உபயோகமாகவும் உறுதுணையாகவும் இருக்கும் எனவும் எண்ணிப் பாருங்கள். பிறகு, புதிய கருத்துக்களின் செயலாக்கம் உங்களுக்கு உதவுமாயின் அவற்றைக் கடைப்பிடியுங்கள். அவ்வாறு இல்லையெனில் அக்கருத்துக்களை தள்ளிவிட்டு, ஏற்கனவே நீங்கள் கொண்டுள்ள கருத்துக்கள் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுங்கள்.

**மனம் திறக்கட்டும்**

எப்பொழுதும் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள உங்கள் மனம் திறந்தநிலையிலேயே இருக்கட்டும். நமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று எண்ணுவதால் மனம் இறுக்கநிலைக்கு சென்றுவிடுகிறது. அதனால் முன்னேற்றம் தடைப்படுகிறது. ஆகவே, புத்தம்புதிய கருத்துக்கள், மாற்றுக் கருத்துகள் என எத்தகைய மாற்றத்தையும் உள்வாங்கிக்கொள்ளும் உயர்ந்த நிலையில் உங்கள் மனம் மலர்ந்திருக்க வேண்டும். மாற்றம் மலர்ந்தால் புதிய மார்க்கம் தென்படும். ஆகவே, தற்பொழுது நீங்கள் வாழும் வாழ்க்கை முறையை, செயல் முறையை, பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். மேலும், இது இப்படித்தான் இருக்க வேண்டும். அது அப்படித்தான் இருக்கவேண்டும், என்னும் எதிர்பார்ப்புக்களோடு எதையும் அணுகக்கூடாது. அவை எப்படி உள்ளதோ அதற்குத் தக்கவாறு அவற்றை அணுகி உங்கள் இலட்சியத்தை அடைவதற்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ள வேண்டும்.

**புதியன விரும்புவோம்**

நீங்கள் உண்ணும் உணவில், உடுக்கும் உடையில், அவ்வப்போது மாறுதல்களைச் செய்யுங்கள். எனக்கு இதுதான் பிடிக்கும், இது பிடிக்காது, என்ற மனநிலையில் இருந்து விடுபட்டு எனக்கு எதுவும் பிடிக்கும் எதன் சுவையையும் நான் விரும்புவேன், என புதுப்புது உணவு வகைகளையும் உடை வகைகளையும் ஏற்றுக்கொள்ளுங்கள். மேலும், உங்கள் அறையில் மாறுதல்களை அவ்வப்போது செய்யுங்கள். அதாவது பொருட் களின் இடத்தை மாற்றுங்கள், இவ்வாறு செய்தால் மனம் மாறுதல்களை தாங்கும் வலிமையையும், மாறுதல்களைத் தோற்றுவிக்கும் வல்லமையையும் பெறுகின்றது. மனதில் மாற்றம் நிகழும்போது சிந்தனையில் மாற்றம் மலர்கிறது. சிந்தனை மாறும்போது செயலும் வாழ்க்கை முறையும் மாறுதல்களைச் சந்திக்கிறது. இத்தகைய மாற்றமே முன்னேற்றத்தின் முகாந்திரமாக அமைந்துவிடுகிறது.

மேலும், மாற்றத்தை தோற்றுவிக்கும் ஆக்க சிந்தனையின் உறைவிடமாக உங்கள் மனம் திகழும்போது எந்தப் பிரச்சினையையும் சந்தித்துத் தீர்க்கும் ஆற்றல் உங்களுக்கு வருகிறது.

ஆகவே, மாற்றம் மலர்வதற்கு மனதில் வழிவிடுங்கள்.




# திணித்து வருவதல்ல திறமை!


குழந்தை வளர்ப்பு என்பது. வேறு. குழந்தையை உருவாக்குதல் என்பது வேறு. இந்த வேறுபாடு பல பெற்றோருக்குப் புரிவதில்லை. அறிவதும் இல்லை. குழந்தை வளர்ப்பு என்பது, குழந்தைக்குத் தேவையான உணவு, உடை, மருத்துவம், பொழுதுபோக்கு, உடற்பயிற்சி, அன்பு, ஆதரவு, பிணைப்பு, பாசம் இவற்றைக் கொடுத்து பிறந்தது முதல் வளர்ப்பது. ஆனால், குழந்தை உருவாக்கம் என்பது வாழ்க்கை வடிவமைப்பு. நடைமுறையில் பல பெற்றோர்கள் இந்த இரண்டையுமே முழுமையாக தாங்களே தீர்மானிக்கிறார்கள். "சந்தோஷ் சுப்பிரமணியன்" என்ற ஒரு திரைப்படத்தில் இது மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. பிள்ளையின் வாழ்வை பெற்றோரே வாழ்வதுபோல அது ஆகிவிடும்.

ஒரு வாகனத்தை ஓட்டுநர் செலுத்துவதுபோல, பிள்ளைகளை பெற்றோர் செலுத்தும் நிலை வந்துவிடும். பிள்ளைகள் வாகனம் அல்ல. அவர்கள் உயிருள்ள, உணர்வுள்ள, நோக்குள்ள, விருப்பம் உள்ள, மானமுள்ள, மரியாதை விருப்பும், புகழ் விரும்பும் மனிதர்கள். இதை உணராத, அறியாத காரணத்தால் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் என்ன விரும்புகிறார்கள், என்ன எண்ணுகிறார்கள், என்ன கூறுகிறார்கள் என்பதை அறியமுற்படுவதும் இல்லை. காதுகொடுத்துக் கேட்பதும் இல்லை. நான் சொல்வதைச் செய்! (Do what I say!) என்பதே நடப்பில் பெற்றோரின் அணுகுமுறையாக உள்ளது. ஆனால், இந்த அணுகுமுறை குழந்தைகளை அடிமைப்படுத்த, அடக்கியாள அல்ல. மாறாக, பிள்ளைகளின்மீதும் அவர்களின் வளர்ச்சிகளின்மீதும் உள்ள அளவுக்கதிமான அக்கறையினால். அந்த அன்பும், அக்கறையும் பிள்ளைகளின் விருப்பங்களை, நோக்கங்களை, சாதனைகளை, தன்னெழுச்சியைத் தகர்த்துவிடுகின்றன என்பதை பெற்றோர் தவறாது கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

பிள்ளைகளின் தன்னெழுச்சியான, தன்னார்வத்துடனான, தன் விருப்ப இலக்கு நோக்கிய வாழ்வை வாழ பெற்றோர் பின்வருவனவற்றைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். குழந்தைகளை குழந்தைகளாக வாழ விடவேண்டும்! குழந்தைகளுக்கென்று சில சிறப்பான இயல்புகள் இருக்கும். அதன்படி அவர்கள் செயல்பட அனுமதிக்கவேண்டும். ஒரு முதிர்ச்சி பெற்ற மனிதனின் வாழ்வை பிள்ளைகளிடம் எதிர்பார்க்கக்கூடாது.

ஆட்டம், பாட்டு, குறும்பு, கும்மாளம், ஓடுதல், குதித்தல், குழந்தைத்தனம்! அவற்றை அறவே பறித்து எறிந்து, அவர்கள் நம்மைப்போல வாழவேண்டும் எப்போதும் படிக்கவேண்டும், எழுதவேண்டும் என்று எதிர்பார்ப்பது அறியாமையாகும்.

# அரசியல் அமைப்பின் தேவையும் தெரிவும்



**அரசியலமைப்பு அதியுயர்வானது என்ற கோட்பாடு தொடர்பாக, இலங்கையின் அரசியலமைப்புக்களை உருவாக்கியவர்கள் எத்தகைய அர்ப்பணிப்புணர்வையும் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை இந்த 3 உறுப்புரைகளும் எடுத்துக்காட்டுகின்றன. புதிய அரசியலமைப்பு சர்வதேசத்தின் மிகச்சிறந்த நடைமுறைகளுடனும், அரசியல் அமைப்புவாதத்தின் அடிப்படை கோட்பாடுகளுடனும் பொருந்திச் செல்வதாகவும், நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறும் நிலை என்பவற்றை மேம்படுத்தக் கூடியதாகவும் இருந்து வரவேண்டுமானால், இந்த 3 உறுப்புரைகளும் புதிய அரசியலமைப்பின் பாகங்களாக இருந்து வரக்கூடாது.**

### அரசியலமைப்பு உண்மையிலேயே அதியுயர்வானதாக இருந்துவருதல் வேண்டும்

ஓர் அரசியலமைப்பு ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாக இருந்து வருகின்றது. ஆனால், இந்த அடிப்படை கோட்பாடும், முதன்மையான கோட்பாடும் இலங்கையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்களின் மூலகர்த்தாக்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

1978ஆம் ஆண்டின் அரசியல் சட்டஅமைப்பு ஒரு அரசியலமைப்பின் அதியுயர் நிலையை புறக்கணிப்பது மட்டுமன்றி, அரசியலமைப்புடன்கூடிய ஜனநாயகநாடுகளில் முன்னொருபோதும் இருந்துவராத விதத்திலான 3 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. அந்த உறுப்புரைகள் 16, 80 (3) மற்றும் 84 என்பனவாகும்.

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 16, தென்னாபிரிக்க அரசியலமைப்பின் உறுப்புரை 2-க்கு நேர்மாறான ஒரு கூற்றினை முன்வைக்கின்றது. தற்போதைய சட்டங்கள் அனைத்தும் “எழுத்து மூலமான சட்டங்கள் மற்றும் எழுதப்படாத சட்டங்கள் அனைத்தும்” இலங்கையின் அதியுயர் சட்டமான அரசியலமைப்புக்கு முரணானவையாக இருந்து வந்தாலும்கூட, செல்லுபடியானவையாகும்.

உறுப்புரை 80 (3), நாடாளுமன்றம் அரசியலமைப்புக்கு முரணான ஒரு சட்டத்தை உருவாக்கியுள்ளது என்ற அடிப்படையில் நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மக்கள் சவால் விடுப்பதனை தடுக்கின்றது. இது இந்தியா, நேபாளம், பங்களாதேஸ், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஐக்கிய அமெரிக்க, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் கொண்டிருக்கும் ஓர் உரிமையாகும். அனைத்து அரசியலமைப்புரீதியான ஜனநாயகங்களும் இதனை கொண்டிருப்பதுடன், இது மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அவர்களுடைய அரசியலமைப்பின் அதியுயர் தன்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. சோல்பரி அரசியலமைப்பின்கீழ் இருந்துவந்த இந்த உரிமை, 1972ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பை உருவாக்கியவர்களினால் அகற்றப்பட்டதுடன், தற்போதைய அரசியலமைப்பின் கீழும் அது அவ்வாறே இருந்து வருகின்றது.

நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 84, நாடாளுமன்றம் அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை எவ்வாறு அறிமுகம் செய்துவைக்க முடியுமென்ற விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குகின்றது.

அரசியலமைப்பு அதியுயர்வானது என்ற கோட்பாடு தொடர்பாக, இலங்கையின் அரசியலமைப்புக்களை உருவாக்கியவர்கள் எத்தகைய அர்ப்பணிப்புணர்வையும் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை இந்த 3 உறுப்புரைகளும் எடுத்துக்காட்டுகின்றன. புதிய அரசியலமைப்பு சர்வதேசத்தின் மிகச்சிறந்த நடைமுறைகளுடனும், அரசியல் அமைப்பு வாதத்தின் அடிப்படை கோட்பாடுகளுடனும் பொருந்திச் செல்வதாகவும், நல்லாட்சி மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றை மேம்படுத்தக் கூடியதாகவும் இருந்து வரவேண்டுமானால், இந்த 3 உறுப்புரைகளும் புதிய அரசியலமைப்பின் பாகங்களாக இருந்து வரக்கூடாது.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் எத்தகைய ஒரு ஆர்வத்தையும் காட்டியிருக்கவில்லை என்ற விடயம் வியப்பூட்டுவதல்ல. இந்த உறுப்புரைகள், அரசியல்வாதிகளின் செலவில் மக்களின் அதிகாரங்களை பலப்படுத்துவதுடன், அரசாங்கத்தின் அதிகாரம் எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டுமென்பது குறித்த அரசியலமைப்புரீதியான நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளை விதிக்கின்றது.

[தேவையும் தெரிவும் தொடரும்]

42



# முதுமையிலும் புதுவாழ்வு கண்ட மண்டேலா!!

மண்டேலாவோ சிடெல்ஸ்கி என்ன கூறப்போகிறாரோ, ஏது கூறப் போகிறாரோ? என்று மனதில் குறுகுறுப்புடன் தடுமாற்றமும் நிறைந்தவனாக அவரை சந்திக்க சென்றான். அவரோ “நெல்சன், நீ கோருடன் அதிகம் சுற்றுகிறாய் என்று நன்றாகப் புரிகிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவனுடன் அதிகம் தொடர்பு வைத்துக்கொள்ளாதே. அது உன் இலட்சியத்திற்கு எவ்வித உபயோகமுமில்லை. அரசியல், போராட்டம், புரட்சி இதெல்லாம் நமக்கானதல்ல. நீ வழக்கறிஞர் ஆகவேண்டும். நீ அரசியல் ஈடுபாடு கொண்டால், அரசாங்கத்தையும் காவல் துறையையும் பகைத்துக் கொள்ள வேண்டிவரும். அவர்கள் நம் நண்பர்கள்.

அவர்களின் உதவி உன் இலட்சியப் பயணத்திற்கு தேவை. அவர்களிடம் மோதினால், நீ உன் வாழ்க்கையை சிறையில்தான் கழிக்க வேண்டிவரும். நீ வழக்கறிஞராக மாறி நியாயமுறையில் வாதாடி உன் இன மக்களை காப்பாற்று. அதை விட்டுவிட்டு அரசியல்தான் வழி என்று நினைத்து அரசியல் சாக்கடையில் விழுந்துவிடாதே. நான் திரும்ப திரும்பக் கூறியும் நீ கேட்காமல் கோருடன் சேர்ந்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கூட்டங்களுக்கு செல்கிறாய் என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. இனியாவது புத்தியாக நடந்துகொள்” என்று சற்றுக் கடுமையான தொனியில் ஒரு குட்டி பிரசங்கத்தையே நடாத்தி முடித்து விட்டார். அது அறிவுரை மட்டுமல்ல எச்சரிக்கையும்கூட என்று மண்டேலாவுக்கு புரிந்துவிட்டது. மண்டேலாவோ தலையை தொங்கவிட்டபடி மௌனியாக இருந்து அவரின் அறிவுரையை கேட்டுவிட்டு அங்கிருந்து மெதுவாக நழுவிச் சென்றான்.

அவர் இவ்வளவு கூறியும் மண்டேலாவின் உள் மனதோ சிடெல்ஸ்கி கூறுவது முற்றிலும் தவறு, கோரின் அணுகுமுறைதான் சரி என்று வாதாடியது. “அவர் கூறுவது சரி என்றால் பேருந்துப் போராட்டம் தோற்றுப் போயிருக்கவேண்டுமே! அரசாங்கத்தை எதிர்த்து அரசாங்கத்தின் ஆணையை மீறி நடந்த அந்தப் போராட்டம் மாபெரும் வெற்றியை அல்லவா ஈட்டித் தந்திருக்கிறது. அப்படி பார்க்கும்போது கோரின் அணுகுமுறைதானே சரி.” என்று அவன் மனதில் நினைத்துக் கொண்டான். இவ்வாறு ஆயிரமாயிரம் விடைதெரியா வினாக்கள் அவன் மனதில் தோன்றி மறைந்தன.

அவன் மனம் குழப்பங்களின் குட்டையாகியது. யார் கூறுவது சரி, யாரை பின்பற்றவேண்டும் என்ற குழப்பம் அவன் மனதில் பேரலையாக உருவெடுத்து உள்ளத்தை உலுக்கியது. இவனது உள்ளத்தை அறிந்த உற்ற தோழன் சிசுலு மண்டேலா விடம் “நாம் அரசியலில் களமிறங்கினால்தான் நம் இன மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை விரைவாக பெற்றுக்கொடுக்க முடியும். சிடெல்ஸ்கி கூறும் வழி முறையானது, ஒற்றையடி பாதை கண் முன் இருக்க, எங்கோ கண்காணா தொலைவில் இருக்கும் மலையை சுற்றி வலம்வந்து வழிதெரியாமல் விழி பிதுங்கி இறுதியில் மற்றவர்மீது பழிசொல்லும் வழிமுறையே ஆகும்.” என்று கூறி முடிக்க மண்டேலா அவனையே உற்றுநோக்கினான்.

மண்டேலாவுக்கு பி.ஏ. பட்டம் கிடைத்த பிறகும்கூட நிர்வாகம் அவனுக்கு பதவியுயர்வு அளிக்காததால் அவன் பல மனக்கஷ்டங்களுக்கு உள்ளானான். இதை சிசுலு வாயிலாக அறிந்த கோர் மண்டேலாவை அழைத்து “நெல்சன் நீ பி.ஏ. பட்டம் பெற்ற பிறகும்கூட நம் நிர்வாகம் உன் பதவியை உயர்த்தாதது கவலைக் குரிய விடயம்தான். நானும் நிர்வாகத்துடன் எவ்வளவோ கதைத்துப் பார்த்தேன். பலன் பூஜ்ஜியம்தான். நியாயப்படி நீ இப்போது சட்டஉதவியாளராக மாறியிருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு ஒரு-வகையில் நானும் காரணம் என்று நினைக்கின்றேன். அதாவது நான் இந்த அலுவலகத்தில் இருக்கும்வரை உனக்கு அந்தப் பதவி கிடைக்கப் போவதில்லை. என்னைத்

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

தனிப்பட்ட வகையில் நிர்வாகம் விரும்பாவிட்டாலும் என்னை தேடி ஆபிரிக்கர்கள் பலர்வருவது அவர்களுக்கு இலாபகரமானது. அதனால் என்னிடத்திற்கு உன்னை கொண்டுவர நிர்வாகம் விரும்பாது.

ஆகவே நான் வேலையை விட்டுவிடலாம் என்று முடிவு செய்து விட்டேன்.” என்றதும் அதுவரை அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருந்த மண்டேலா “கோர் அவசரப்படாதே நீ எனக்காக உன் பதவியை விடுவது எந்தவகையில் நியாயமாகும்? நான் இதற்கு ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை.” என்று ஆவேசம் பொங்கக் கூற “நெல்சன், அவசரப்படாமல் நான் சொல்வதை முழுமையாகக் கேள். நான் இந்த நிர்வாகத்தை விட்டு வேறொரு நிர்வாகத்திடம் சென்று பணியாற்றப் போகிறேன். அதனால் எனக்கு எந்தவொரு பாதிப்புமில்லை.

(தொடரும்)

# மாவீரன் அலெக்சாண்டர்

## கி.மு.356 முதல் 323 வரை

மாமன்னன் அலெக்சாண்டர் மாசிடோனியா நாட்டின் தலைநகரான பெல்லா (pella) என்ற இடத்தில் 2 ஆம் பிலிப்ஸ் மன்னருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது தந்தை மிகுந்த மதிநுட்பமும் வீரமும், முயற்சியும் மிக்கவர். எனவே, அவர் தனது மகனை அறிவிலும் ஆற்றலிலும், மெய்ஞானத்திலும், தன்னம்பிக்கையிலும் சிறந்த ஒரு துடிப்புள்ள இளைஞனாக்க விரும்பினார். அலெக்சாண்டருக்குப் பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பியதும் 2ஆம் பிலிப்ஸ் மன்னர் தன் மகனைத் தக்க ஆசிரியரிடம் ஒப்படைத்தார். அப்படி, இவருக்கு ஆசிரியராக அமைந்தவர்தான், மாபெரும் தத்துவமேதை அரிஸ்டோட்டில். அரிஸ்டோட்டில் தம்மிடம் கல்வி கற்க விரும்பிய மாணவர்களுக்கு அறிவியல், அரசியல், தத்துவம், தர்க்கவியல், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளைக் கற்றுக்கொடுத்தார். இளவயதிலேயே தந்தையின் குறிக்கோளையும், மாசிடோனிய அரசை உலகில் மிகப்பெரிய அரசாக மாற்ற எண்ணி அவர் பல வெற்றிகளை ஈட்டியதையும் கண்டு ஊக்கம் பெற்றார்.

அரிஸ்டோட்டிலிடம் பயின்ற அலெக்சாண்டர், பின்னர் மாசிடோனியாவை ஆண்டபோதும் சரி, அங்கிருந்து பாரசீகம், ஆப்கானிஸ்தான், இந்துகுஷ் மலைப் பிரதேசங்கள், இந்தியாவின் வடமேற்குப் பகுதிகள் ஆகியவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக வென்று மாபெரும் பேரரசாகத் தன் நாட்டை மாற்றிய போதும் சரி, இவரது படைக்குத் தலைமை தாங்கியவர் களும், இவரைப் பின்தொடர்ந்தவர் களும் வேறுயாருமல்லர், அரிஸ்டோட்டிலின் கல்விக்கூடத்தில் இவருடன் உண்டு, உறைந்து கல்வி பயின்றவர்கள் - இவரது உயிர் நண்பர்கள்.

ஒத்த கருத்துடையவர்கள் பலரும் ஒன்றிணைந்து செயல்படும்போது அங்கு விளைவது வெற்றிக்கனி மட்டும்தான். ஆகவேதான், அலெக்சாண்டர் தன் வாழ்நாளில் ஒருமுறைகூடத் தோல்வியைத் தழுவியது இல்லை. அடுத்து அரிஸ்டோட்டிலின் வழிகாட்டுதலின் பேரில் இவர் கிரேக்க அறிஞர் ஹோமரின் புகழ் வாய்ந்த இதிகாசங்களான இலியட் மற்றும் ஒடிசி ஆகிய நூல்களைக் கற்றுத் தெளிந்தார். இந்நூல்கள்தான் இவருக்கு உந்தாற்றலாக அமைந்து வாழ்க்கையில் வெற்றிக்கு மேல் வெற்றிபெற அடிப்படைக் காரணமாக இருந்துள்ளன என்பதை வரலாறு உணர்த்துகிறது. இவர் போரின் நிமித்தமாகவோ அல்லது அரசியல் அலுவல்கள் காரணமாகவோ, அல்லது சேவை நோக்கத்துடனோ வெளியே செல்லும் போதெல்லாம் இந்த நூல்களை உடன் பயில எடுத்துச்செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பதையும் வரலாற்று முறையில் அறிகிறோம்.

### அலெக்சாண்டரின் அவா

இவரிடம் நாடுகளை வெல்லும் எண்ணம் மட்டும் இருந்ததாக யாரும் நினைத்துவிடக்கூடாது. உலக நாடுகள் அனைத்தையும் வென்று, தன் ஒரே குடைக்கீழ் அந்நாட்டு மக்களையெல்லாம் ஒருங்கிணைத்து, பின் தன் ஆசிரியர் அரிஸ்டாட்டிலின் வழியில் தனி நாகரிகம் உடையவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், மிக்க ஞானம் பெற்றவர்களாகவும் ஆக்கவேண்டும் என்பதே அவர் அவா.

### நட்பின் இலக்கணம்

அலெக்சாண்டருடன் இளம் வயதிலிருந்தே பயின்றவரும் - அவருடன் எல்லாச் செயல்களிலும் பங்கு கொண்டவரும் - உயிர்த் தோழராக விளங்கியவரும் - சிறந்த சான்றோருடைய மகனாய்த் தோன்றிய ஹெபாஸ்டியன் ஆவார். இவர் அலெக்சாண்டர் படை எடுத்துச் சென்ற நாடுகளிலெல்லாம் படைவீரர்களை முன்நடத்திச் சென்ற தளபதி. அலெக்சாண்டர் தன்னிடம் உள்ள இரகசியங்களை எல்லாம் இவரிடமே கூறுவது வழக்கம். இவ்விருவரும் ஓருயிர் ஈருடலுமாய் வாழ்ந்துவந்துள்ளனர். ஒரு முறை ஹெபாஸ்டியன் கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டான். செய்தி அலெக்சாண்டருக்கு எட்டியது. நண்பனைக் காண அவர் விரைந்து வந்தார். ஆனால், அவர் வருமுன்னரே ஆருயிர் நண்பன் தன் இன்னுயிர் துறந்தான். செய்தி அறிந்த அலெக்சாண்டர் துடிதுடித்தார். செய்வதறியாது திகைத்தார். இறுதியில் தன் நண்பனுக்கு 60 அடி நீளச் சிதையை மூட்டி அடக்கம் செய்தார். அச்சிதை 7 அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் அடுக்கிலும் ஒரு தனித்தன்மை மிளிர்ந்தது. எண்ணற்ற பொருட் செலவில் தன் நண்பனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி உண்மை நட்பின் இலக்கணத்தை உலகிற்கு உணர்த்தியவர் அலெக்சாண்டர். இதுவரை இவ்வளவு பொருட்செலவில் ஒரு நண்பனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியவர் வேறு எவரும் இல்லை எனலாம். இனிய நண்பரை இழந்த பின்னர் அலெக்சாண்டர் சிறிது காலம் மட்டுமே உயிர்வாழ்ந்து தமது 33 ஆம் வயதில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். தனது ஆசிரியர் அரிஸ்டோட்டில் போல இவரும் 80 ஆண்டு காலம் வாழ்ந்திருந்தால் இன்று உலகம் துண்டுபட்டுப் போயிருக்காது. பாரதிதாசன் பாடலுக்கு ஏற்ப உலகம் முழுதையும் ஒன்றெனக் கூட்டி - அதில் மானிட சமுதாயம் நன்றெனக் காட்டியிருப்பார். ஆனால், இயற்கை யாரைத்தான் விட்டுவைத்தது?

### மன்னிக்கும் மாண்பு

ஒரு முறை அலெக்சாண்டர் டியோஜனீஸ் என்ற கடற்கொள்ளைக் காரன் ஒருவனைச் சிறைப்பிடித்தார். தண்டிக்க நினைத்தார். அவனைப் பார்த்து, நீ எதை நினைத்துக் கொண்டு மக்களுக்கெல்லாம் பெருந்தொல்லை களை விளைவிக்கிறாய்? என்று



வினவினான். அதற்கு டியோஜனீஸ் சற்றும் அஞ்சாது, அலெக்சாண்டரைப் பார்த்து, நான் ஒரே ஒரு கப்பலை வைத்திருப்பதால்தானே, நீ என்னைச் சாதாரணமானவன் என்று நினைத்து இவ்வாறெல்லாம் பேசுகிறாய். நீ, பல கப்பல்களுக்குச் சொந்தக்காரன். ஆகையால், நீ எதை நினைத்துக் கொண்டு இவ்வுலக நாடுகளை எல்லாம் உன்வசம் கொண்டு வருகிறாய்? என்று எதிர்வினா எழுப்பினான். அதற்கு அலெக்சாண்டர் பதிலேதும் பேசாமல் அவனை மன்னித்து அனுப்பியதாக வரலாறு கூறுகிறது.

உயர்ந்த குறிக்கோளும் - ஓயாத உழைப்பும், தேர்ந்த மதிநுட்பமும், சிறந்த தத்துவ ஞானமும் வாய்க்கப் பெற்றவர்தான் மாவீரன் அலெக்சாண்டர். போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்களைக் கொன்று குவித்தவர் அல்லர் மாவீரர் என்பவர். தன்னொத்த மக்களை அன்பால், பண்பால் அணைத்துச் செல்பவரே மாவீரர். தனது மனிதநேயத்தால் மக்கள் மன்றத்தில் இடம்பிடித்தவர்தான் மாவீரன் அலெக்சாண்டர். அவர் வாழ்ந்து காட்டிய எளிய வழிமுறைகள் இங்கே கோடிட்டுக் காட்டப்படுகின்றன. பிஞ்சுகளே! படித்து மகிழுங்கள் அலெக்சாண்டருக்கு நிகராக வாழ்ந்து காட்டுங்கள்!

> ஒத்த கருத்துடையவர்கள் பலரும் ஒன்றிணைந்து செயல்படும்போது அங்கு விளைவது வெற்றிக்கனி மட்டும்தான். ஆகவேதான், அலெக்சாண்டர் தன் வாழ் நாளில் ஒருமுறைகூடத் தோல்வியைத் தழுவியது இல்லை. அடுத்து அரிஸ்டோட்டிலின் வழிகாட்டுதலின் பேரில் இவர் கிரேக்க அறிஞர் ஹோமரின் புகழ் வாய்ந்த இதிகாசங்களான இலியட் மற்றும் ஒடிசி ஆகிய நூல்களைக் கற்றுத் தெளிந்தார்.

### பொன் வேண்டுமா?

ஒருமுறை அலெக்சாண்டர் தாம் செல்லும் வழியில் வறியவன் ஒருவன் படுத்துக் கொண்டிருப்பதையும் தன்னைக் கண்டு எவ்விதச் சலனமும் இல்லாமல் இருப்பதையும் கண்டு வியப்புற்றார். தனது பெருமைகளை எல்லாம் பலவாறு எடுத்துச் சொல்லியும் அவன் தனக்கு எவ்விதத்திலும் அடிபணியவில்லை. இதனை அறிந்த அலெக்சாண்டர் அவனிடம், அய்யனே! உனக்கு என்ன வேண்டும்? சொல்! பொருள் வேண்டுமா? பொன் வேண்டுமா? பதவி வேண்டுமா? இல்லை....

எனக்குச் சொந்தமான நாடுகள் அனைத்தும் வேண்டுமா? அத்தனையும் உனக்கு ஒட்டுமொத்த மாகத் தருகிறேன், யாதுவேண்டும்? என்று வினவினான். அதற்கு அவ்வறியவன், எனக்கு இவற்றில் எதுவும் வேண்டாம்... கொஞ்சம் நகர்ந்து செல்லுங்கள், குளிரில் நடுங்கும் என்மீது வெதுவெதுப்பான சூரிய ஒளி படும் அளவுக்கு வழிவிட்டு நில்லுங்கள் என்று பதிலளித்தான். பொன்னையும், பொருளையும், சாம்ராஜ்யங்களையும் ஒரு பொருட்டாக மதிக்காத அந்த வறியவன் செயல் மாவீரன் அலெக்சாண்டரின் உள்ளத்தைத் தொட்டது.

உள்ளத்தில் புதிய எண்ணம் உதித்தது. நிலையாமையை உணர்ந்தார். அதன்பின்னர் அவருடைய இறுதிக்காலத்தில் ஒருவர் எத்தகைய பெருமைகளைப் பெற்றிருந்தாலும், எத்தனை நாடுகளைத் தன்வசம் கொண்டு மாபெரும் மன்னனாக வாழ்ந்து, ஒரு போதும் யாருக்கும் அடிபணியாத தளபதியாக வாழ்ந்தவராயினும் அவர் இறக்கும்போது எதையும் கொண்டு செல்வதில்லை என்பதை இவ்வுலக மக்களுக்கு உணர்த்த நினைத்தார். அதற்கேற்ப அலெக்சாண்டர் தான் இறந்தபின்னர் தனது உடலை ஒரு பேழைக்குள் வைத்து அடக்கம் செய்ய வேண்டும் என்றும், தன்னுடைய இரண்டு உள்ளங்கைகளும் திறந்த வண்ணம் பெட்டிக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இங்ஙனம் தமது இறப்பிலும் ஒரு புதுமையைப் புகுத்தி அழியாப் புகழ்பெற்றார்.

எத்தகைய புகழும், பொருளும் சிலநேரங்களில் பயனற்றுப் போகும் என்பதை அலெக்சாண்டர், தம் வாழ்நாள் அனுபவத்தில் உணர்ந்தார். அப்பட்டறிவுதான், அவரைப் பிற்காலத்தில் மெய்யறிவு வழியில் செலுத்தியது. மண்ணாசை துறந்தார்! மனிதநேயம் பூண்டார். இவர்தான் பிற்காலத்தில் மாவீரர் எனப் போற்றப்பட்ட நெப்போலியன் ஜூலியஸ் சீசர், மற்றும் அகஸ்டஸ் சீசர் போன்ற பலருக்கும் வழிகாட்டியாகவும், உந்தாற்றலாகவும் விளங்கினார். அதனால்தான் வரலாறு அவரை மாவீரர் அலெக்சாண்டர் (Alexzander the Great) என்று அழைத்துப் பெருமை கொண்டது.





# ஈவிரக்கமற்ற ஈனப் படுகொலைகளும் தாக்குதல்களும்

கிழக்கு மாகாணத்தின் முக்கிய வர்த்தக நகராக எந்நேரமும் பரபரப்பில் இயங்கும் கல்முனை நகரம் கடந்த சனிக்கிழமை (27.02.2016) பிற்பகல் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய்விட்டது.

காரணம், அன்றைய தினம் அந்த பரபரப்பு நிறைந்த நகரமத்தியில் இடம்பெற்ற உள்ளத்தை உருகவைத்து திகிலூட்டும்வகையில் இடம்பெற்ற படுகொலை தந்த அதிர்ச்சியும் சோகமும்தான்.

மாத இறுதி சனிக்கிழமையில் தமது வர்த்தக நிறுவனத்தின் எல்லா அலுவல்களையும் முடித்துவிட வேண்டும் என்ற கடமை ஒழுங்கின் அடிப்படையில் வழமைபோன்று அன்று அலுவலகத்திற்கு வந்த சர்வோதய அபிவிருத்தி நிதிக் கம்பனியின் உதவி முகாமையாளரான ராஜேந்திரன் சுலக்ஷனா திலீபன் (வயது - 33) வீடு திரும்பவேயில்லை.

வீட்டைவிட்டு அலுவலகத்திற்கு வரும்போது தனது தாயிடம் "நான் பகல் சாப்பாட்டிற்கு வருவேன், நீங்கள் பிள்ளைக்கு சாப்பாடு கொடுங்கள் அம்மா" என்றுசொல்லி விட்டுத்தான் வந்தார். அதுதான் அவர் வீட்டாரிடம் பேசிய கடைசி வார்த்தை.

ஆயினும், பகல் போஷனத்துக்குரிய நேரம்வந்தும், பசியிருந்தும் காலன் வடிவில்வந்த கொலையாளி அவரைச் சாப்பிடவும் வீடு செல்லவும் அனுமதிக்க வில்லை.

அம்பாறை மாவட்டம், கல்முனைப் பொலிஸ் பிரிவில் கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ளது சர்வோதய டிவலொப்மென்ற் பைனான்ஸ் என்கின்ற சர்வோதய அபிவிருத்தி நிதிக் கம்பனியின் நிதிச் சேவைகள் அலுவலகம். இப்படியான நிதிவழங்கும் நிறுவன அலுவலகங்களை சர்வோதய நிறுவனம் நாடுபூராகவும் நிறுவியுள்ளது.

அதில் ஒன்றுதான் சமீபத்தில் கல்முனையில் திறக்கப்பட்ட நிதி நிறுவனம். அந்த அலுவலகத்தின் புதிய உதவிமுகாமையாளராக கொல்லப்படுவதற்கு 10 தினங்களுக்கு முன்னர்தான் சுலக்ஷனா கடமைப் பொறுப்பேற்றார்.

அதுவரை அவர் மட்டக்களப்பிலுள்ள மேற்படி நிதி நிறுவன அலுவலகத்தில் முகாமையாளராகக் கடமையாற்றினார்.

கடமையில் மிகவும் சுறுசுறுப்பும் கண்ணியமும் வாடிக்கையாளர் நலன்களில் அக்கறையும் கொண்ட சுலக்ஷனா கல்முனை அலுவலகத்திற்குச் சென்ற 10 நாட்களுக்குள்ளாகவே பல முன்னேற்றங்களைக் காண்பித்து விட்டதாக அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் பெருமைப்பட்டிருந்தனர்.

ஆனாலும், அதிலுள்ள இருண்ட பக்கங்களை அவர் புரட்ட ஆரம்பித்த விடயம்தான் கொலையில் போய் முடிந்திருப்பதாக இப்பொழுது பேசப்படுகிறது. அதாவது அந்த அலுவலகத்தில் சுலக்ஷனா வருமுன்னர் உதவி முகாமையாளராகப் பணியாற்றிய தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேகநபரான நற்பிட்டிமுனை மயான வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் உதயகுமார் (வயது 41) அங்கு வாடிக்கையாளர்களுக்கு நிதி வழங்குதல்களில் பல தில்லுமுல்லுகளைச் செய்திருப்பதான விடயம் அந்நிறுவனத்தின் மேல் மட்டத்திற்கு தெரியவந்ததனால்தான் சந்தேகநபர் இத்தகைய ஒரு பாதகச் செயலுக்குத் திட்டமிட்டு இருக்கிறார் என்ற விடயங்களும் வெளிவரத் துவங்கியுள்ளன. குளோரி வீதி நற்பிட்டிமுனை, கல்முனையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமியின் தாயான சுலக்ஷனா வழமை போன்று சனிக்கிழமையும் காரியாலத்திற்குச் சென்று கடமையாற்றிக் கொண்டிருக்கும்போதே அங்கு அன்றைய தினம் கடமைக்கு வந்த சக அலுவலர்களில் ஒருவர் பிற்பகல் 1.30 மணியளவில் பகல் போஷனத்திற்காக வெளியில் சென்றுள்ளார். சுலக்ஷனாவுடன் சேர்த்து அன்று கடமைக்கு வந்த 5 பேரில் கடமை நிமித்தம் ஒரு உத்தியோகத்தர் அம்பாறை நகரிலுள்ள தலைமை அலுவலகத்திற்குச் சென்றுவிட, மற்றையவர்களில் இருவர் வெளிக்களப் பணிக்காக சென்றுவிட்டனர்.

எனவே, சுலக்ஷனாவுடன் அலுவலகத்திலிருந்த மற்றைய உத்தியோகத்தரும் பகல் போஷனத்திற்காக வெளியில் சென்றுவிட இப்பொழுது சுலக்ஷனா மாத்திரம் அலுவலகத்தில் தனியே இருந்துள்ளார்.

இந்தத் தருணத்தை கனகச்சிதமாக அவதானித்த கொலையாளி அலுவலகத்திற்குள் புகுந்து சுலக்ஷனாவை வெட்டிச் சாய்த்துவிட்டு தப்பியோடி உள்ளான். அதேவேளை சுலக்ஷனா கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடி, கை வளையல்கள் என்பனவும் அபகரிக்கப்பட்டுள்ளன. பகல் போஷனத்திற்காக வெளியில் சென்று மீண்டும் அலுவலகத்திற்கு வந்து பார்த்த வெளிக்கள உத்தியோகத்தர், சுலக்ஷனா கழுத்து வெட்டப்பட்டநிலையில் இரத்த வெள்ளத்தில் கீழே வீழ்ந்து கிடப்பது கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ. அப்துல் கப்பார் தலைமையில் அதிரடியாகச் செயற்பட்டு ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியதோடு குற்றச் செயல் இடம்பெற்ற பிரதேசத்தையும் நன்கு அவதானித்தனர்.

### தெய்வ நீதி குற்றவாளியைக் கொண்டு வந்து சேர்த்தது - பொலிஸ் அதிகாரி

இதனிடையே சம்பவத்தைக் கேள்வியுற்றதும் கல்முனை நகர மக்களும் ஆர்வலர்களும் அனுதாபிகளும் அங்கு ஆயிரக்கணக்கில் கூடிவிட்டனர். இதன்காரணமாக கல்முனை நகருக்கூடான போக்குவரத்தும் சிறிதுநேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

### காட்டிக் கொடுத்த தலைக்கவசம் காயமும்

சனநெரிசலுக்கும் ஆரவாரங்களுக்கும் மத்தியில் அங்கு நின்ற ஒருவர் தனது மோட்டார் சைக்கிளின் தலைக்கவசம் அலுவலகத்திற்குள் அகப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனினும், எவரையும் உள்ளே செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இந்த நபர் தலைக்கவசத்தைத் தேடுவது பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. தலைக்கவசம் அங்கு காணப்படவே தலைக்கவசத்துக்குரியவரின் விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி சக பொலிஸாரை கேட்டுக்கொண்டார். அப்போது பதற்றப்பட்ட சந்தேக நபர் தனது இடது கையை மறைத்துக் கொள்ள அதிக சிரத்தை எடுத்துள்ளார். அதனை உன்னிப்பாகக் கவனித்த பொலிஸார் அவரது இடது கையில் ஆங்கில எழுத்து "வி" வடிவிலான புதிய இரத்தக் காயம் ஒன்று காணப்பட்டதோடு விரல் நகத்தின் ஒரு துண்டு உடைந்து போயிருப்பதையும் கண்டு கேள்வி எழுப்பினர்.

அது வீட்டில் வேலை செய்தபோது ஏற்பட்ட காயம் என்று சந்தேக நபர் கூறியுள்ளார். அதிரடியாக சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அங்கு காயம் ஏதாவது ஏற்பட்டதா என்பது பற்றி விசாரித்துள்ளனர். அங்கு அவ்வாறான காயம் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது உறுதியாயிற்று.




தொடர் நடவடிக்கையாக கொல்லப்பட்ட சுலக்ஷனாவின் சடலத்தின் வாய்ப் பகுதியை பொலிஸார் பரிசோதித்தபோது வாயில் நகம் ஒன்றின் கிழிந்த மீதி இருக்கக் காணப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உடனடியாக முதலாவது சந்தேகநபராக இவர் கைது செய்யப்பட்டார்.

கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அப்துல் கப்பார் தலைமையிலான பொலிஸ் குழுவினருடன் இணைந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் அம்பாறையல் இருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட "குற்ற இடத்தில் பொலிஸார்" (SOCO) அணியினர் விசாரணையில் ஈடுபட்டனர்.

அந்த அலுவலகத்தின் ஏனைய ஊழியர்களும் சுமார் 4 மணிநேரம் சம்பவம் நடைபெற்ற இடத்தில் வைத்து பொலிஸாரால் விசாரிக்கப்பட்டனர் கல்முனை மாவட்ட நீதிவானும், பதில் நீதிபதியுமான வி. ராமகமலனின் உத்தரவுக்கமைய பிரேத பரிசோதனைக்காக சடலம் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### நிறுவனத்தில் பலவீனம்

இது ஒருபுறமிருக்க, சர்வோதயம் என்று நாடறிந்த நாமம் பதித்த இந்த நிறுவனத்தில் உள்ள சில பலவீனங்களும் இவ்வாறான ஒரு பாதகச் செயல் நடப்பதற்குரிய சூழ்நிலைக்கு உசாத்துணையாக இருந்துள்ளதா என்ற கேள்வியையும் அனுதாபிகள் பரவலாக எழுப்புகின்றனர்.

**-ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

அதாவது பெரிய ஒரு நிதி நிறுவனமாக தன்னைக் காட்டிக்கொண்டு வர்த்தக சந்தையில் காலடி எடுத்து வைத்துள்ள இந்த நிதி நிறுவன அலுவலகத்தில் ஒரு காவலாளி இல்லை, சீ.சீ.ரி.வீசி கமரா இல்லை, சிற்றூழியர் இருந்திருக்கவில்லை. இது இந்த நிறுவனத்தின் பாதுகாப்பு சம்பந்தமான விடயத்தையும் ஊழியர் நலன் சார்ந்த விடயங்களிலும் இந்த நிறுவனம் கொண்டுள்ள அக்கறையை கேள்வியாக எழுப்புகிறது. அத்துடன் நிறுவன நிருவாக முகாமைத்துவத்தில் ஊழியர்களுக்கிடையே எழும் போட்டி பொறாமையை சரியாக முகாமை செய்து நிருவகிப்பதற்கு இந்த நிருவாகம்தவறி விட்டதா என்கின்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

எவ்வாறாயினும் ஒரு சிறந்த அலுவலரை ஈனத்தனமான நடவடிக்கை கொன்றொழித்துவிட்டது என்பதே உண்மை. ஆயினும், இத்தகைய கொடுஞ்செயல்கள் இனி ஒரு தடவை இடம்பெறுவதற்கு எவரும் இடமளிக்கக் கூடாது.

### கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் மீட்பு

இது ஒருபுறமிருக்க, கடந்த 23.02.2016 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் தேவாலயத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்து சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. இச்சடலம் யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

குறித்த பெண் கொலை செய்யப்பட்டு இப்பகுதியில் கொண்டுவரப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

### சிறுவன் படுகொலை

இதனிடையே பகுதியாக மீள் குடியேற்றப்பட்டுள்ள திருகோணமலை சம்பூர் 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குகராசா தர்ஷன் (வயது 6) என்ற சிறுவன் 25.01.2016 அன்று இரவு 8.00 மணியளவில் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மாலை 6.30 மணிவரை அவர்களது தற்காலிக வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை அன்றிரவு இரவு 8.00 மணியளவில் வீட்டில் இருந்து 50 மீற்றர் தொலைவில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் காலனி நாடா ஒன்றினால் கல்லொன்று வயிற்றை வரித்து கட்டப்பட்டநிலையில் சடலமாக மீட்டனர்.

### சிறுமி படுகொலை

மிகச் சமீபத்தில் நடந்த சம்பவமாக வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் 13 வயது பாடசாலை மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் சிலாகித்துப் பேசப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி வீட்டில் தூக்கில் தொங்கிய அவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

### பெண்மீது கோடரி கொத்து

28.02.2016 அன்று இரவு ஏறாவூரில் நடந்த சம்பவம் ஒன்றில் ஏறாவூர் மீராகேணி கலந்தர் வீதியில் வசிக்கும் சுலைமாலெப்பை றஷ்வியா (வயது 28) என்ற பெண் ரகளை புரிந்த ஒருவனால் கோடரியால் தலையில் கொத்தப்பட்டு படுகாயமடைந்தநிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே, இது போன்ற ஈவிரக்கமற்ற ஈனச்செயல்களான வன்முறைகள் இனிமேலும் தொடர்ந்து இடம்பெறாமல் வழிவகைகளைக் காணவேண்டியது எல்லோர் மீதுமுள்ள பொறுப்பும் மனிதாபிமானக் கடமையும் ஆகும்.

# இடையில் முறிவடையும் திருமணங்கள்

தவா
தெஹிவளை

திருமணம் வலிதாகும் என்ற பொதுச் சட்டவிதி நியதிச் சட்டத்தால் செயலறுக்கப்பட்டுள்ளது. தியாகராஜா எதிர் குருக்கள் 20 பு.ச.சு.89 என்ற வழக்கில் 12 வயதுக்குட்பட்ட பெண்ணை மணம் முடித்த ஒருவர் (இந்து வழக்காறுகளின்படி) பெண் பருவமடைந்தவுடன் இணைந்து வாழ்ந்தால் அவர்கள் உறவினர்களாலும், நண்பர்களாலும், கணவன் மனைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஆனால் அத்திருமணம் பெண் 12 வயதை அடையமுன்னர் நிறைவேற்றப்பட்டதால் வலிதானதல்ல எனத் தீர்க்கப்பட்டது.

நியதிச் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாத விடயங்கள் பொதுச் சட்டத்தாலேயே ஆளப்படும். மனநோயாளருடைய திருமணத்தைப் பற்றி நியதிச் சட்டத்தில் ஒரு ஏற்பாடும் இல்லை. மனநோய் திருமணத்திற்குத் தடையில்லாததால் சட்டப்படி அவர்கள் திருமணம் செய்யலாம். ஒப்பந்தம் ஒன்று வலிதுடையதாவதற்கு உடன்பாடு அவசியம். அதாவது பெற்றோர் அல்லது பாதுகாவலர், உறவினர், நண்பர்கள் ஆகியோரது ஆலோசனையும் உடன்பாடும் இன்றி வயது வராதோரால் செய்யப்படும் இரகசியத் திருமணங்கள் கௌரவத்திற்கும் சட்டத்திற்கும் இழுக்கானவையாகும் எனப் பழைய ஜேர்மன் சட்டம், ஒல்லாந்தின் சட்டம் என்பன கண்டித்தன. இலங்கையில் வயது வராதோரின் திருமணத்திற்கு தந்தை அல்லது தாயின் சம்மதம் அவசியம். பெற்றோரிடையே கருத்தியல் முரண்பாடு காணப்படின் தந்தையின் முடிவே இறுதியானது ஆகும்.

தந்தை இல்லாத சந்தர்ப்பத்தில் தாயின் சம்மதம் அவசியமாகும். மேலும் இலங்கையில் இவ்விடயம் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவினால் ஆளப்படும். அதன்படி 18 வயதுக் குட்பட்டவருக்கு தந்தை அல்லது தாய் அல்லது பாதுகாவலரின் சம்மதம் அவசியம். இவர்கள் ஒருவரும் இல்லாதவிடத்து அல்லது சம்மதம் நியாயமற்ற முறையில் மறுக்கப்படுமிடத்து அவர்கள் வதியும் இடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றம் சம்மதம் வழங்கலாம்.

திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் 42ஆம் பிரிவு ரோமன் டச்சுச் சட்டத்தின் கொள்கையைப் பின்பற்றி இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட திருமணங்களில் சம்மதம் உண்டா, இல்லையா என்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டியதில்லை எனக்கூறுகிறது. மேலும் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு திருமணமானது, வலிதுடையதாவதற்கு திருமணம் நடைபெறவிருக்கும் ஆண், பெண் இருவரினதும் உறவுமுறை சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கவேண்டும். உதாரணமாக சகோதரர் அல்லது சகோதரியை மணம் முடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் தன் நாட்டைவிட்டு வேற்று நாட்டில் வதிபவராயின் பிறந்த நாட்டின் சடங்குகளைப் பின்பற்றி திருமணத்தை நிறைவேற்றலாமாயினும் திருமணம் செய்ய தகுதியுடையவரா என்பது வதியும் நாட்டின் சட்டத்தினாலேயே ஆளப்படும். இலங்கையை வாழிடமாகக் கொண்ட இந்தியத் தமிழருக்கு எத்தகைய உறவுமுறை திருமணத்திற்குத் தடையானது என்ற விடயம் இலங்கைச் சட்டத்தால் ஆளப்படும் எனக் கொள்ளப்படும்.

அடுத்த திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட இருவரும் முன்னர் திருமணம் முடித்தவர்களாக இருக்கக்கூடாது. அவ்வாறு முன்னர் திருமணம் முடித்திருப்பின் அத்திருமணமானது நியாயாதிக்கமுள்ள நீதிமன்றத்தால் இல்லாதாக்கப்பட்டிருக்க வேண்டும். (விவாகரத்து) அல்லது கணவன் அல்லது மனைவி இறந்திருப்பின் உயிர்வாழும் வாழ்க்கைத் துணை இரண்டாவது திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றலாம். இவ்வாறல்லாமல் முதலாவது திருமணம் முறையாக நிறைவேற்றப்பட்டு அவ் ஒப்பந்தம் முறையாகக் கலைக்கப்படாமல் இரண்டாம் திருமணம் செய்பவர்கள் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 362(B) இன் கீழ் இருதார விவாகம் (Bigomy) என்ற குற்றத்திற்கு ஆளாவார்கள்.

ஆனால் முஸ்லிம் சட்டத்தின்கீழ் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஆண் இரண்டாம் விவாகம் செய்யலாம். திருமணமானது பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தால் வலிதற்றதாகிவிடமாட்டாது. சரியான வழக்கங்களையும், கிரியைகளையும் பின்பற்றி செய்யப்பட்ட வழக்காற்றுத் திருமணங்கள் வலிதானவையாகும். பொதுவாக சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றுதலும் திருமணத்தின் வலிதாகுதன்மைக்கு அவசியமாகக் கருதப்படுகிறது.

திருமணம் நிறைவேற்றப்பட்ட பின் அதனால் பல சட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. திருமணத்தின் பின் பெண் 18 வயதை அடையாத போதும் வயது வந்தவராகக் கருதப்படுவார். உரோமன் டச்சுச் சட்டத்தின்கீழ் கணவன் திருமணத்தினால் அதிகாரம் பெறுவதனால் மனைவி, கணவனின் நிலையையும் மதிப்பையும் பெறுகிறார். இலங்கையில் பொதுவாக மனைவி, கணவனின் நிலையையும் மதிப்பையும் பெறுவதுண்டு. கணவனின் பெயரைப் பயன்படுத்தவேண்டும் என்பது அவசியமற்றபோதிலும் கணவனின் பெயரையே பயன்படுத்துவர். ஒரு பெண் தன் சொந்தப்பெயரில் பிரபலமடைந்தவராயின் சொந்தப் பெயரைப் பயன்படுத்தலாம்.

பொதுவாகக் கணவனும், மனைவியும் ஒருமைப்பட்டவர்களாதலின் மனைவி கணவனின் வாழுமிடத்தைக் கொள்வாள் என்றும் கணவனின் வாழிடம் மாறும்போது மனைவியின் வாழிடமும் மாறும் என்றும் கொள்ளப்படும். எனினும் இலங்கைப் பிரஜாவுரிமை கட்டளைச் சட்டத்தின்படி இலங்கையரை மணம் முடிக்கும் அந்நிய நாட்டுப் பெண் தானாகவே இலங்கைப் பிரஜாவுரிமையை பெற்றுவிட மாட்டார். விண்ணப்பித்தே பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் அந்நிய நாட்டு ஆணை மணம் முடிக்கும் இலங்கைப் பெண் இலங்கைப் பிரஜாவுரிமையை தானாகவே இழந்துவிடமாட்டார்.


கணவன், மனைவி, கூடிவாழும் காலத்தில் தமது அந்தஸ்திற்கேற்ப வாழவும், அதற்காக கணவன் பெயரில் அவசியமான பொருட்களைக் கடனாகப் பெறவும் மனைவிக்கு உரிமை உண்டு. நீதிமன்றன கட்டளையினால் பொது அறிவித்தல் கொடுத்தாலே இவ்வுரிமையை இல்லாதாக்கலாம். மனைவி காரணமின்றி கணவனை பிரிந்து வாழும் சமயத்தில் மனைவிக்கு அவசியமானவற்றைக் கொடுக்கவேண்டிய கடமை கணவனுக்கு இல்லை. சிவபாக்கியம் எதிர் நவமணி அம்பாள் 37 வழக்கில் கணவனின் பிழையால் படுக்கையிலிருந்தும், உணவில் இருந்தும் மனைவி விலகியிருப்பாராயின் அவருடைய அந்தஸ்திற்கேற்ப அவரைப் பராமரிக்கவேண்டும் எனத் தீர்க்கப்பட்டது.

மேலும் தற்போது பெண் தனிப் பெண்ணாக (Female Sole) கருதப்படுவதால் திருமணத்தின்பின் பெண் தனக்கு சொந்தமான அசையும், அசையாத ஆதனத்தை கணவனின் சம்மதமின்றி கையை மாற்றலாம். தேச வழமைக்குட்பட்ட பெண் தனக்கு சொந்தமான அசையாத ஆதனத்தைக் கைமாற்ற கணவனின் சம்மதம் அவசியமாகும்.

பெற்றோர் அல்லது பாது காவலர், உறவினர், நண்பர்கள் ஆகியோரது ஆலோசனையும் உடன்பாடும் இன்றி வயது வராதோரால் செய்யப்படும் இரகசியத் திருமணங்கள் கௌரவத்திற்கும் சட்டத்திற்கும் இழுக்கானதாகும் எனப் பழைய ஜேர்மன் சட்டம், ஒல்லாந்தின் சட்டம் என்பன கண்டித்தன.

தற்பொழுது திருமணமொன்று வலிதுடையதாவதற்கு அவசியமான நிபந்தனைகளை நியதிச் சட்டங்கள் ஆக்கியுள்ளன. 1907ஆம் ஆண்டின் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தினால் செய்யப்பட்ட மாற்றங்களுடன் உரோமன் டச்சுச் சட்டம் இந்நாட்டின் திருமணம் பற்றிய சட்டமாக அமைந்துள்ளது. கீழ் நாட்டுச் சிங்களவர், தமிழர், பறங்கியர், இந்தியர் ஆகியோர் இச்சட்டத்தினால் ஆளப்படுகின்றனர். 1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கச் சட்டமான கண்டிய விவாக விவாகரத்துச் சட்டம் கண்டியின் பாரம்பரிய திருமண முறைகளை ஆளுகின்றது. முஸ்லிம்களின் திருமணம் 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் திருமணம் விவாக, விவாகரத்து விதிப்பினால் ஆளப்படுகின்றது. சட்ட முறைகளைப் பின்பற்றாது செய்யும் திருமணம் வலிதானதாகும் அல்லது வலிதாக்கப்படக் கூடியதாகும்.

வயது முதிர்ச்சிக் கட்டளைச் சட்டப்படி (Age maturity Ordinance)






18 வயதை அடைந்தோரே வயது வந்தோர் (Major) எனக் கூறுகின்றது. ஆனால் திருமண பதிவுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15 ஆண்டுகள் 16 வயதையும் பெண்கள் 12 வயதையும் அடையாதவிடத்து அல்லது ஐரோப்பியர் அல்லது பறங்கியரின் பெண் பிள்ளையாயின் 14 வயதை அடையாதவிடத்து அவர்கள் நிறைவேற்றும் திருமணம் வலிதற்றதாகும்.

இது எல்லாவித திருமணங்களுக்கும் பொருந்தும். வழக்காற்றுத் திருமணங்களில் திருமணத்தை நிறைவேற்றும் முறை மட்டும் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதே அன்றி வேறெதுவும் அன்று. வயது வருமுன் திருமணம் செய்யும் பெண் பருவமடைந்து ஒன்றாக வாழத் தொடங்கியவுடன்

# பறை மேளக்கூத்தும் அதன் இன்றைய நிலையும்



மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரின் பிரசித்தம் வாய்ந்த அரங்க கலை வடிவங்களில் பறை மேளக்கூத்து தனித்துவமானது. இக்கலையானது மட்டக்களப்பு பிரதேசத்தில் பறையர் சாதியினர் வாழ்கின்ற கோளாவில், களுதாவளை, புன்னைக்குளம், ஆரையம்பதி, கல்முனை, வெல்லாவெளி, பிலாலிவேம்பு, மாவடிவேம்பு ஆகிய பகுதிகளிலே சிறப்பாக பேணப்பட்டுக் கொண்டு வருகின்றது.

பறையர் சமூகத்தின் பண்பாட்டினைப் பேணிவருகின்ற பறைமேளக் கூத்தினை வாழும் கலையாகத் தக்கவைத்துக் கொள்வதே கலைஞர்களின் கடப்பாடாகும். மட்டக்களப்பில் உள்ள பறையர் சமூகம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங்களுடையது. பறையர்கள் கிழக்கிலங்கையில் தென்றுதொட்டு இருந்துவருகின்ற தமிழ்த் தொல்குடிகளில் ஒரு பிரிவினராவார். பறையர்கள் வரலாறு பற்றி இரண்டு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. அதாவது பறையர்கள் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற தமிழர்கள் தொல்குடி என்றும் அவர்கள் இந்தியாவிலிருந்து வந்த மேட்டுமையினர்களின் படையெடுப்புக்களின்போது இடையில் வந்தனர் என்பதுவுமாகும்.

ஈழத்தமிழர்களது பறையர்களது சமூகம் தொல்குடியினர்களாக இருந்திருக்கவேண்டும் அல்லது இந்தியாவிலிருந்துவந்த படை யெடுப்புக்கள் அவர்களைக் கிளைப் படுத்தியிருக்கவேண்டும். எனவும், இதன்காரணமாக பறையர்கள் சமூகத்தினர் சிறைகளாக இருந்து தங்களது எஜமானர்களுக்கு தொண்டூழியம் செய்திருக்கின்றனர். தமிழ்நாட்டிலும் மேட்டுமையினருக்கு கீழ்சாதியினர் தொண்டூழியம் செய்து வந்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் பிராமணர், வெள்ளாளர், முக்குகர், கரையார், கைவினைஞர்கள் என சாதிப் படிநிலையினைக் காணலாம். இதில் உயர்சாதியாக பிராமணரை யும், இடைச்சாதிகளாக வெள்ளாளர், முக்குகர், கரையார் என்போரையும், கீழ்ச்சாதியாக கைவினைஞர்களையும் குறிப்பிடலாம். இவர்களில் மட்டக் களப்பிற்கு வெள்ளாளர்களும் முக்குகர்களும் கரையார்களும் வந்திருக்கின்றனர். இவர்களது வருகையுடன் தங்களது பணி விடைகளைச் செய்ய கீழ் சாதி யினரையும் கொண்டு வந்திருக்க வேண்டும். இதன்படி பறையர்களும் அவர்களுக்கு சேவகம்செய்து வந்திருப்பதால் பறையர்களும் இந்த மேட்டுமையினரின் வருகை யுடன் வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இத்தகைய கருத்து மேலும் பல சந்தேகங்களை எழுப்புவதால் மேலும் இவை ஆராயப்படவேண்டியவையாகும். ஈழத்தமிழர்களது தொல்குடிப் பாராம்பரியத்திற்கு உரியவர்களா யினும் அல்லது இந்தியாவிலிருந்து வந்தவர்களாயினும் இரண்டு நிலைகளிலும் கலந்து வளர்ந்த வந்தவர்களாயினும் பறையர் சமுகத்திற்கு மட்டக்களப்பில் நீண்ட வரலாற்று பாரம்பரியம் உண்டு.

மேட்டிமைச் சாதியினரிடம் இருப்பது போன்று பறையர்கள் சாதியினருக்கும் குடிமுறைகள் உள்ளன. இதனை கலிங்க மாகோன் பட்டயம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"வள்ளுவம் தொட்டி தோட்டி**
**வாஞ்சொலி சத்திரியன்**
**துள்ளும் வெட்டியானந்த**
**னோளாய்ச்**
**சுகித்திட வகுத்தவாறே**
**பள்ளுடன் கலந்தாலுங்கள்**
**வரன் முறை**
**குறையு மென்று வள்ளலார்**
**காலிங்க மாகோனும்**
**வகுத்திட்டாரே"**

இதில் பறையர்கள் குடி முறை கள் கூறப்பட்டு இந்தக் குடி முறை கள் பள்ளர்களுடன் கலந்ததால் பறையர்கள் வரன்முறை குறைந்து விடும் என உரைக்கின்றது.

பறையர்கள் சமூகத்தின் வரலாறு திருப்படைக் கோயில்களின் பழமை யுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டியது. தொல்குடிகளாக இருந்த பறைமேள இசைக்கலைஞர்கள் சிறைகளாக்கப்பட்டு திருப்படைக் கோயில்களுக்கு சேவகனை செய்ய வேண்டும் எனப் பணிக்கப்படுகின்றனர். இதனைப் பேணுவதால் மட்டக்களப்பில் திருப்படைக்கோயில்கள் முக்கியம் பெறுகின்றது. குறிப்பாக கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம் காணப்படுகின்றது. இதில் திருவிழா முடிந்தபின்னர் கஞ்சிமுட்டி கூறுதல் நிகழ்வு இடம்பெறும். இதில்


**யோ.நிசந்தராசன்**
நாடகமும் அரங்கியலும்
(சிறப்புக்கற்கை) விடுகை வருடம்


ஒவ்வொரு சாதியும் தங்களது தலை முறைகளைக் கூறி குலவிருதுகளை பெற்றுக்கொள்வர். இந்த நிகழ்வானது சாதியில் குறைந்த பறையர்களுக்கும் உண்டு. பறையர்கள் குலவிருது சின்னப்பறையாகும். இதனை பறையர்கள் தங்களது தலை முறையைக் கூறிப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த நிகழ்வு சாதியத்தினைப் பேணுவதற்காக அதனை ஆலயங்கள் நிலை நிறுத்துவதற்காகவும், வலிமை சேர்ப்பதற்காகவும் அமைந்து விடுகின்றன. இந்த சாதியத்தினை நிலை நிறுத்துகின்ற கடவுளர்களை யும் பறையர்கள் சமூகம் நிராகரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் சாதியத்திலிருந்து விடிவினைப் பெறமுடியும். பறை மேளக் கூத்தின் தோற்றப் பின்புலத்தினை எடுத்து நோக்கு வோமாயின் ஆரம்பகாலங்களில் கிராமங்களுக்கு வருகின்ற பெரியவர்களை வரவேற்பதற்கும், செய்திகளை எடுத்துச்சொல்வதற்கும் பறை அறைதல் எனும் செயற்பாடு இருந்தது. இவற்றினூடாக ஆட்டங் களையும் அபிநயங்களையும் உள்வாங்கி பறைமேளக்கூத்தாக உருவாக்கி இருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. இப்பறை மேளக்கலையானது ஆலயங்களிலே ஆலயத்தாளம், அபிஷேகத்தாளம், அழைப்புத்தாளம், சுற்றாலைத்தாளம், பெரியபூசைத்தாளம் என்பவற்றிற்கும் மரணத்திலே ஆரம்பத்தாளம், தெரியப்படுத்தும் தாளம், எடுத்துச் செல்லும் தாளம், சந்திகூடும் தாளம் என்பவற்றின் ஊடாகவும் ஆடம்பரத்திற்காக வரவுத்தாளம், கோணங்கித்தாளம், இராசதாளம், பல்லாக்குத்தாளம், நாலடித்தாளம், ஆறடித்தாளம், எட்டடித்தாளம், தட்டுமாறும்தாளம் என இவ்வகைத் தாளங்களுக்கு ஏற்ப பறைமேளம் இசைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

அடுத்து பறைமேளக்கூத்தினுடைய ஆற்றுகை பற்றி நேக்குவோமாயின், இருவர் அல்லது மூவர் பெரும்பறை கள், சிறுபறைகளைத் தாங்கியபடி ஒருவரை ஒருவர் எதிரெதிரே பார்த்தபடி ஆடி பறை ஒலி எழுப்புவர். வேறொருவர் சொர்ணாலி வாசிப்பார். இக்கூத்திற்கு தலைமை தாங்குபவரை மூப்பனார் என அழைப்பர். மூப்பனாரின் வழிகாட்டலிலே இக்கூத்தின் ஆற்றுகை இடம்பெறும். அவர்களது அரங்க அளிக்கை என்பது வெறும் வெட்டவெளியில் நடத்தப்படும். உடையென்பது அவர்களது அழகியலை வெளிப்படுத்தாது. அவர்களது அரங்க ஆற்றுகையின்போது உடை ஒப்பனை செய்யமுடியாது. (சமூகத்தில் அன்று அவர்களது குறிகளை மறைத்துக்கொள்ள மட்டுமே அங்கீகாரம் இருந்தது.) அவர்கள் பொருளாதாரத்தில் குறைந்திருந்ததன் காரணமாக உடை, ஒப்பனை என்பன சாதாரண மாகவே அமைந்திருந்தது.

பறையிசை சந்தமும் ஓசை ஒழுங்கின் மூலமும் இனிமையான இசையினை வழாங்குகின்றது. இந்த இனிமையான இசையோடு இந்த இசைக்கேற்ப ஆடுவதுமிணைந்தே பறைமேளக் கலையாகின்றது. நிகழ்துகையை முக்கியமாகக் கொண்டு உள்ள கலைவடிவம் இதில் அரங்கக்கலை அம்சங்கள் இரண்டாம் பட்சமானது. பறைமேளம் இசைக்கத் தெரிந்தவர் களும், பறைமேள ஆட்டவடிவங்கள் தெரிந்தவருமே அரங்க ஆற்றுகை செய்வதற்கு பொருத்தமானவர்கள். இவர்களுக்குத் துணையாக சொர்ணாளி, சின்னப்பறை இசைக்கப் படும் இவற்றின்மூலமே பறை மேளக்கலையின் அழகியல் வெளிப் படும். இவற்றோடு இணைந்ததாகவே பங்குபற்றுதல், ஒன்றிணைதல், பரஸ்பர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல் போன்றவற்றிற்கு பறைமேளக்கூத்து தனித்துவமான தோர் இடத்தினை பெறுகின்றது.

பறைமேளக்கூத்தின் ஆற்றுகை யாளர்களாக விளங்கும் பறையர் சாதியினரிடையே ஏற்படுகின்ற தாழ்வு மனப்பாங்கும், சாதி முறைமைக்குள் பறைமேளக்கலை இருப்பதுவும் இக்கூத்து மருவி வருவதற்கான காரணங்களாகக் குறிப்பிடலாம். அத்தோடு இளைஞர்கள் தாங்கள் பறைமேளத்தை பழகினால் சமூகத்தில் அந்தஸ்து கிடைக்காது என்று எண்ணுவதும், ஊர்களிலே பறைஅடிப்பதற்கு தடைவிதிப்பதும், பறையர் சமூகத்தினரை ஊர்களில் ஓதுக்கிவைப்பதும் இக்கூத்து மருவி வருவதற்கான காரணங்களாக குறிப்பிடலாம். போர்ச்சூழலும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களும், இதனால் மக்கள் மனங்களில் ஏற்பட்ட அபரீதமான மனஉளைச்சல்களும் கலைகளைப் பாதித்து நின்றது. இந்நிலையும் பறைமேளக்கூத்தின் வீழ்ச்சிக்கு ஓர் காரணம் என்று குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் பறைமேளக்கூத்து வீழ்ச்சியுற்ற நிலை இருந்தாலும் இன்றும் சடங்குக் கோயில்களிலே பறை அடிச்சத்தத்திற்கு ஏற்ப தெய்வங்கள் உருவேறி ஆடுகின்ற தன்மை காணப்படுகின்றது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

வாரமொரு வாழ்வியற்
## சிந்தனை

# கட்டிளம் பருவத்தினை கையாள்வது எப்படி?

**இளம் குற்ற தடுப்பு முறைகள்**

1. Super Ego Building-ஐ வலுப்படுத்தல்.

2. பிழை, தவறுக்கான பொறுப்பு புரிந்தவருடையதே என உணரச் செய்வதோடு, பிழையான நடத்தையை தானே மாற்றியமைக்கமுடியும் என உணரச் செய்தல்.

3. வீடும், பாடசாலையும் தமது பொறுப்பினை உணரும்படி செய்தல்.

4. வீட்டில் பிள்ளைகளின் மனவெழுச்சித் தேவைகளை பெற்றோருக்கு உணர்த்துதல், பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் உறவு சிறப்பாக அமைதல்.

5. போதுமான விளையாட்டு வசதிகள், மார்க்க மன்ற நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை ஏற்படுத்தல்.

6. குழந்தைகளுக்கான சிறுவர் கழகம் போன்றவற்றை ஏற்படுத்தல்.

கட்டிளமைப் பருவத்தினரின் சிக்கல் நடத்தைக்கான காரணம் பற்றிய சமூக சேவையாளர்களின் அனுமானங்கள்.

1. உணவு வகைகளில் உள்ள இரசாயனக் கலப்பு கிளர்ச்சியான எண்ணங்களை தூண்டமுடியும்.

2. திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தாக்கம், விளைவுகள்.

3. கையடக்கத் தொலைபேசிப் பாவனையின் மிதமிஞ்சிய அதிகரிப்பு, அசிங்கமான, கிளர்ச்சிகளை தோற்றுவிக்கும் எஸ்.எம்.எஸ் பரிமாற்றம்.

4. ஆன்மீக நாட்டக் குறைவு, ஆன்மீக வறுமை.

5. அடர்த்தியான, நெருக்கடியான வாழ்க்கைச் சூழல்.

6. தாய் - தந்தை உறவு விரிசல் உள்ள குடும்பப் பின்னணி.

7. துணைத் தேர்வில் குறிப்பாக பெண்களிடம் எதிர்பார்க்கப்படும் வெள்ளைநிற மணப்பெண், சீதனம், ஏற்றத்தாழ்வு, வயது எல்லை.

8. சமூக நிறுவனங்கள் (குடும்பம், பாடசாலை, சம வயதுக்குழு, சமூக மேம்பாட்டு நிறுவனங்கள், அரசியல், பொருளாதாரம்) என்பவற்றின் ஒழுங்கீனம் (Dysfunction) சமூக முறை (Social System) சரியாக இயங்காமல் போதலும்.

• பொதுமக்களிடம் காணப்படும் அபிப்பிராயம் முஸ்லிம் சமூகத்தின் பண்பாட்டை, ஒழுக்கத்தை கேடு உள்ளதாக மாற்ற நினைக்கும் முகவர்கள், முகவர் அமைப்புகளின் திட்டமிட்ட நீண்டநாள் செயற்பாடும், இதற்காக குறிப்பாக இளம்சாராரின் மனவெழுச்சிகளை தூண்டும்



விடயங்களையும் உரசவைக்கும் செயற்பாடும். கட்டிளமை அல்லது இளமைப் பருவத்தினர் தொடர்பான ஆய்வு முடிவுகள்

1. கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் பாலியல் நடத்தை என்பது கட்டிளமைப் பருவத்தினரின் ஒத்த பாலார் பற்றிய விடயங்களை அறிய முற்படுவது மட்டுமன்றி எதிர்ப்பாலார் பற்றிய அறிவையும் அறியத் தூண்டுகிறது.

2. கட்டிளமைப் பெண்கள் பாலியல் கல்வி, Birth Control, The Pill, Abortion, Pregnancy என்பனவற்றை அறிய ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர்.

3. கட்டிளமை ஆண்கள் Vanereal Disease, பாலியல் இன்பம், Inter Course, Family Planing பற்றிய தகவல்களை அறிய ஆர்வமாக உள்ளனர்.

4. இன்றைய கட்டிளமைப் பருவத்தினர் Sexually Very act.

5. Dating என்பது முன்னைய தலை முறைகளைவிட இப்போது கட்டிளமைப் பருவத்தினரிடம் முன்னமே (13 வயதில்) ஆரம்பித்துவிடுகிறது. 14 வயதில் இது தொடர்ச்சியான நிகழ்வாக மாறிவிடுகிறது.

6. Dating என்பது பொழுதுபோக்கு, இன்பமான விடயங்களை மகிழ்வாக உரையாடல், Courtship பற்றிய உரையாடல், Status தேர்வு பற்றிய விடயமாக உள்ளது.

7. Chilman (1980) என்பவரின் கருத்துப்படி 15 வீத கட்டிளமை ஆண்களும், 10 வீத கட்டிளமை பெண்களும் Homo Sexual அனுபவம் அல்லது தொடர்பு கொண்டுள்ளனர்.

8. Millman and Mosher என்பவரின் ஆய்வின்படி 11 வீத கட்டிளமை பருவத்தினர் 15 - 19 வயதில் மணம்செய்வதோடு விவாகரத்து வீதம் ஏனைய வயதில் திருமணம் முடித்தவர்களைவிட அதிகமாக இருப்பதாக குறிப்பிடுகிறார்.

9. கட்டிளமை வயதுத் திருமணம் பாடசாலை விலகல், வாழ்க்கைத் திறனின் குன்றிய நிலை, குறைந்த திருப்தியற்ற உழைப்பு அல்லது தொழில், குறைந்த வருமானம், அதிகூடிய விவாகரத்து போன்றவற்றுக்கு காரணமாகிறது.

குறிப்பு: கிழக்கு மாகாணத்தில் பெண்களின் கல்வியறிவு வீதம் 67 வீதம் மட்டுமே. குழந்தை போஷாக்கின்மை நாட்டின் சதவீதத்தைவிட கிழக்கில் மிக மிக அதிகமாக உள்ளது. சராசரியாக இலங்கையில் 40 வீதம் - கிழக்கில் 60 வீதம்.

10. Deliss Oroy, (1973) என்பாரின் கருத்துப்படி (Average age of 17.1 year) கட்டிளமைத் திருமணம் மகிழ்ச்சியற்றதாக கட்டிளமையினர் உணர்வதாகக் கூறுகிறார்.

மேலும் கட்டிளமை வயது ஆண்கள் அதிகமான பாலியல் நாட்டத்தை ஏற்படுத்துவதோடு இவர்களது பாலியல் திருப்தி 30 மாதங்களில் குறைவதாகக் கூறுகிறார். மேலும் கட்டிளமைப் பெண்கள் தொடர்ச்சியாக பாலியல் நாட்டம் உடையவர்களாக காணப்படுவதாகக் கூறுகிறார்.

இதன் தூர விளைவு, விவாகரத்து, அதிக எண்ணிக்கையான பிள்ளைகள், திருப்தியற்ற உழைப்பு, போதாத சம்பளம், பெற்றோரால் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் குழந்தைகள் என்பனவாகும்.

குறிப்பு: எமது சமூக அமைப்பில் இளம் குற்ற நடத்தை அல்லது தவறுகள் மிகவும் உணர்வுபூர்வமாக கையாளப்படுவதும், குற்றங்களின் அல்லது தவறுகளின் ஒட்டுமொத்த காரணம் பெண் எனக் காட்டப்படுவதும் ஆண் ஆதிக்க, அறிவை புறம் தள்ளிய, மனித குலத்துக்கு எதிரான தன்மை வாய்ந்ததாகவே உள்ளது.

பெண் சம்பந்தப்படும் விடயங்களில்...

1. பெண்களை மதித்து நடத்தல்

2. பெண்களின் விடயங்களை காது கொடுத்து கேட்டல்

3. தவறுகளை சூழ்நிலை மற்றும் உளவியல் பார்வைகளோடு நோக்குதல்

4. முடிவுகளில் பெண்களின் பங்கை உணர்த்துதல்.

5. பெண்களின் கௌரவத்துக்கு பங்கம் வராமல் பார்த்துக் கொள்ளல் போன்றவை கவனிக்கப்பட வேண்டும்.

இளம் பராயத்தினர் விடயங்களை உளவளத் துணையாளர்கள், உளவியலாளர்கள், சமூக பணியாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் (Multi disciplinary approach) என்ற கூட்டுக் குழுவே அன்றி எல்லோராலும் கையாளப்படுவதானது பிரச்சினைகள் வேறு வடிவம் எடுத்தல், விளைவுகள் அதிகரித்தல், உளவியல் சிக்கல்கள், தற்கொலை எண்ணங்கள், மன அதிர்ச்சி (Trauma), கலங்கம்(Stigma) Discrimination என்பனவற்றையே ஏற்படுத்தும்.

**ச.சசீந்திரன்,**
**ஆசிரியர்,**
Dip.in.teach,B.A,PGDE.

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

### குறுக்கெழுத்துப் போட்டி - 666

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | 34 | | |

### குறுக்கெழுத்துப் போட்டி 664 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | 2 ணி | 3 கா | 4 ச | 5 ல | 6 ம் |
| 7 மோ | | 9 சி | 10 யோ | 11 ப | 12 ன் |
| 13 த | 14 மி | | 16 னை | 17 ன் | 18 க |
| 19 ர் | 20 து | 21 வ | | | 24 ம |
| 25 ஆ | 26 க் | 27 கி | 28 ர | 29 மி | |
| 31 று | 32 க | 33 ரி | 34 அ | 35 சி | |

**மேலிருந்து கீழ்**

1. இரக்கம், துக்கம், கவலை.
2. பதுமராகம், வஞ்சகம், கரவு (முதலாம் எழுத்து இடம் மாறியுள்ளது)
3. பங்கு, பயிரிடுமேடை. (குழம்பியுள்ளது)
5. ஓர் பிசின், மிகவும் உறுதியானது. (குழம்பியுள்ளது)
6. காட்டு விலங்கு ஒன்று.
27. குளிர்.

**இடமிருந்து வலம்**

01. குதநோய்.
07. இறுதிச்சுற்று என்ற திரைப்படத்தின் கதாநாயகி.
13. பெரும் புரட்டன். மோசக்காரன். (மூன்றாம் எழுத்து இடம் மாறியுள்ளது)
19. இரண்டு. (திரும்பியுள்ளது)
22. காற்று. (குழம்பியுள்ளது)
25. கந்தற் சீலை. (குழம்பியுள்ளது)
31. பரிசுத்தம். (குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 14.03.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 666
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.664 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**அ.பவதாரணி,**
**தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.நிசாந்தன், கொள்ளுப்பிட்டி.
02. தி.சாரங்கன், பரந்தன், கிளிநொச்சி.
03. மு.சிவாஞ்சனா, வவுனிக்குளம், வவுனியா.
04. கா.தெய்வேந்திரம், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
05. ம.நிரஞ்சன், உடப்பு, புத்தளம்
06. து.கௌரி, ஏ-9, வீதி, பளை.
07. எம்.எம்.செய்த், நீர்கொழும்பு.
08. ஜோ.பிரோஸ்கான், நிந்தவூர், மட்டக்களப்பு.
09. எஸ்.கவி, ஹட்டன்.
10. கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், வட்டுக்கோட்டை.



## தெறி பாடல் வரிகளை வெளியிட்ட ஜி.வி.பிரகாஷ்

விஜய் நடிப்பில் தற்போது உருவாகியுள்ள படம் தெறி. இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துவருகிறார். இது இவரது 50ஆவது படமாகும். இதனால் இப்படத்தின் பாடல்கள்மீது ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு நிலவிவருகிறது. சமீபத்தில் இப்படத்திற்காக கடுமையாக உழைத்துவருகிறேன் என்று ஜி.வி.பிரகாஷ் கூறியிருந்தார். இந்நிலையில், இப்படத்தின் பாடல் வரிகளை ஜி.வி.பிரகாஷ் வெளியிட்டிருக்கிறார்.

ஜித்து ஜில்லாடி மிட்டா கில்லாடி மாமா டாலடிக்கும் கலரு கண்ணாடி.
தொப்பியில சிங்கத்த பாரேன், தோளுல ஸ்டார வாங்கும். பொலிஸ்காரன்...

என்ற பாடல் வரிகளை வெளியிட்டிருக்கிறார். மேலும் இந்த பாடல் மட்டும் விரைவில் வெளியாகும் என்றும் தெரிவித்திருக்கிறார். கலைப்புலி தாணு இப்படத்தை தயாரித்துவருகிறார். ஏப்ரல் மாதம் படத்தை வெளியிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

## என் அ...
## சூர்ய...

பி.வி.பி. சினிமா நிறுவ...
தமன்னா ஆகியோர் நடி...
வெளியீட்டு விழா, சென்...
சூர்யா கலந்துகொ...
நடிகர்கள் நாகார்ஜ...
கலந்துகொண்டு ...
நான் நடிக்கிற ...
பெறுவதாகவும்,...
என்றும் ரசிகர்...
தேவதை அ...
உண்மையி...
அவரை என்...
சொல்லலா...
கலந்துகொ...
அந்த பட...
இப்போது...
படத்தி...
இருக்க...
படைக்...

## 2 க...

கார்...
முக்க...
இன்...
சம்...
நி...





## சமந்தாவை தொடர்ந்து மீனா மகள்

விஜய் நடிப்பில் தற்போது உருவாகியுள்ள படம் தெறி. இதில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா மற்றும் எமிஜாக்சன் நடித்துள்ளார்கள். மேலும் விஜய்க்கு மகளாக பிரபல நடிகை மீனாவின் மகள் நைனிகா நடித்திருக்கிறார். அட்லி இயக்கியுள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். கலைப்புலி தாணு இப்படத்தை தயாரித்துவருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது இறுதிக்கட்ட பணிகளில் படக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சமந்தா இப்படத்தின் தனது டப்பிங் பணியும் முடிந்துவிட்டது. இவரை தொடர்ந்து தற்போது மீனாவின் மகளான நைனிகா டப்பிங் பேசி முடித்து இருக்கிறார். இவரை தொடர்ந்து படக்குழுவினர் டப்பிங் பேச இருக்கிறார்கள். ஏற்கனவே தெறி படத்தின் எடிட்டிங் பணிகள் முடிந்து விட்டன. மார்ச் மாதம் ஓடியோவையும், ஏப்ரலில் படத்தையும் வெளியிட படக்குழுவினர் முடிவுசெய்துள்ளனர்.

## திருநங்கையா... நடிக்கும் விக்ர...

விஜய் சேதுபதி தற்போது ஆனந்த் சங்கர் இயக்... இருமுகன் படத்தில் நடித்துவருகிறார். இதில் விக்ரமுக்... ஜோடியாக நயன்தாரா, நித்யாமேனன் நடித்து வருகிறார்கள். இதன் முதற்கட்ட படப்பிடிப்பு மலேசியாவி... நடைபெற்றது. தற்போது இரண்டாம்கட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி நடைபெற்றுவருகிறது.

இந்த படப்பிடிப்பில் பிரம்மாண்டமான சண்டைக்காட்சி ஒன்றை படமாக்கி வருகிறார்கள். இப்படத்தில் விக்ரம் இர... கதாபாத்திரங்களில் நடித்துவருகிறார். இ... ஒன்று திருநங்கை கதாபாத்திரம். இப்பட... மூலம் முதன்முறையாக திருநங்கை கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். இதற்காக திருநங்கைகளின் நடை உ... பாவனைகள், அவர்களின் பேச்சுமொழி உள்ளிட்ட விஷயங்களை தெரிந்து கொ... வருகிறார் விக்ரம்.

இப்போது "ரா" உளவுப்பிரிவு ஏஜெண்ட்... கதாபாத்திரத்திற்கான படப்பிடிப்பு மட்டு... நடத்திவருகிறார்கள். பின்னர், திருநங்கை... கதாபாத்திரத்துக்கு தன்னைத் தயார்ப்படு... தொடங்குவார் விக்ரம்.

## மிஷ்கின் இயக்கத்தில் விஷால்?

விஷால் தற்போது குட்டிப்புலி முத்தையா இயக்கத்தில் உருவாகிவரும் மருது படத்தில் நடித்துவருகிறார். இப்படத்தின் படப்படிப்புகள் சமீபத்தில் நடந்து முடிந்துள்ளது. இப்படத்தை தொடர்ந்து சண்டக்கோழி படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிப்பார் எனக் கூறப்பட்டது.

ஆனால், விஷாலே இந்த படத்தை கைவிட்டுவிட்டதாக தெரிவித்து இருந்தார். எனவே, அடுத்ததாக மிஷ்கின் இயக்கும் புதிய படத்தில் விஷால் நடிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

விஷாலுக்காக மிஷ்கின் எழுதிய கதையை தற்போது விஷால் படித்துவருவதாகவும், கூடிய விரைவில் இது உறுதியாகும் எனவும் கூறப்படுகிறது. அப்படி உறுதியானால் இப்படத்தின் படப்பிடிப்பை அடுத்த மாதம் தொடங்குவார்கள் என்றும் கூறப்படுகிறது.

மிஷ்கின் தற்போது ராம், பூர்ணா நடிக்கும் சவரக்கத்தி படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துவருகிறார். இப்படத்தில் நடிப்பதோடு மட்டுமில்லாமல், படத்தை தயாரிக்கவும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## கணிதன் திரை விமர்சனம்

**நடிகர் : அதர்வா, நடிகை : கேத்ரீன் தெரசா, இயக்குனர் : சந்தோஷ், இசை : டிரம்ஸ் சிவமணி, ஒளிப்பதிவு : அரவிந்த் கிருஷ்ணா**

தூர்தர்ஷன் சேனலில் செய்தி வாசிப்பாளராக இருக்கும் ஆடுகளம் நரேனுக்கு பி.பி.சி சேனலில் பணிபுரியவேண்டும் என்பது நீண்டகால ஆசை. ஆனால் அது நிறைவேறாமலே இருக்கிறது. இவரது மகனான அதர்வா இன்ஜினியரிங் படித்துவிட்டு மனோபாலா நடத்திவரும் தனியார் சேனலில் நிருபராக பணி புரிந்துவருகிறார். தந்தையின் நிறைவேறாத கனவை நிறைவேற்றும்பொருட்டு தான் பி.பி.சி சேனலில் சேரவேண்டும் என்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார் அதர்வா.

இந்நிலையில், மனோபாலாவின் மகளான கேத்ரின் தெரசாவுக்கும் அதர்வாவுக்கும் காதல் மலர்கிறது. ஒருநாள் போலி சர்டிபிகேட் மூலம் பல வங்கிகளில் பணம்வாங்கி ஏமாற்றியிருப்பதாக கூறி அதர்வாவை பொலிஸ் கைது செய்கிறது.

முதலில் எதுவும் புரியாத அதர்வாவுக்கு, பின்னர் தன்னுடைய சர்டிபிகேட் மட்டுமல்லாமல், பல இளைஞர்களின் சர்டிபிகேட்டுகளும் இதுபோல் போலியாக எடுத்து பல வங்கிகளில் பணத்தை கொள்ளையடித்திருப்பது தெரிய வருகிறது. செய்யாத தவறுக்கு ஜெயிலுக்கு செல்லும் அதர்வா, அங்கிருந்து வெளியே வந்து போலி சர்டிபிகேட்



காஷ்
.பிரகாஷ்
ந்தின்
பிருந்தார்.
றார்.

## என் அதிர்ஷ்ட நாயகன், சூர்யா – தமன்னா

பி.வி.பி. சினிமா நிறுவனம் தயாரித்து, நாகார்ஜுன் - கார்த்தி- தமன்னா ஆகியோர் நடித்துள்ள தோழா படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா, சென்னையில் நடந்தது. விழாவில், நடிகர் சூர்யா கலந்துகொண்டு பாடல்களை வெளியிட்டார். நடிகர்கள் நாகார்ஜுன், கார்த்தி, தமன்னா ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். தமன்னா பேசியதாவது:- நான் நடிக்கிற படங்கள் அனைத்தும் வெற்றி பெறுவதாகவும், எனவே என்னை அதிர்ஷ்ட தேவதை என்றும் ரசிகர்கள் கூறுகிறார்கள். நான், அதிர்ஷ்ட தேவதை அல்ல.

உண்மையிலேயே அதிர்ஷ்ட நாயகன், சூர்யாதான். அவரை என்னுடைய அதிர்ஷ்ட நாயகன் என்று சொல்லலாம். பாகுபலி படவிழாவில் சூர்யா கலந்துகொண்டு பாடல்களை வெளியிட்டார். அந்த படம் ரூ.600 கோடி வசூல் செய்தது. இப்போது நான் நடித்திருக்கும் தோழா படத்தின் பாடல்களையும் சூர்யா வெளியிட்டு இருக்கிறார். இந்த படமும் வசூலில் சாதனை படைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.





## 2 கதாநாயகர்கள் படங்களில் நான் நடிக்க யோசிப்பேன்

கார்த்தி பேசும்போது, "2 கதாநாயகர்கள் படங்களில் நான் நடிக்க யோசிப்பேன். யாருக்கு முக்கியத்துவம் இருக்கும்? என்ற சந்தேகம் எழும். தோழா, 2 கதாநாயகர்களின் படம் என்றதும், இன்னொரு கதாநாயகன் யார்? என்று கேட்டேன். நாகார்ஜுன் என்று சொன்னதும், உடனே நடிக்க சம்மதித்தேன். அவர் படங்களை பார்த்து ரசித்தவன், நான். படப்பிடிப்பின்போது அவர் எனக்கு நிறைய அறிவுரைகளை சொன்னார்" என்றார்.

நாகார்ஜுன் பேசும்போது, "சென்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் இங்கு வளர்ந்தவன். இங்குள்ள பள்ளி மைதானத்தில் கிரிக்கெட் விளையாடி இருக்கிறேன். கார்த்தி என்னை, அண்ணா என்றுதான் அழைப்பார். அவரிடம் இருந்து தமிழ் வசனங்களை பேச கற்றுக் கொண்டேன். படத்தின் கதைப்படி, என் கதாபாத்திரம் நாற்காலியிலேயே இருக்கும். என் கை - கால்களை கட்டிப்போட்டுவிட்டு, எனக்கு முன்னால் கார்த்தியும், தமன்னாவும் டூயட் பாடிக்கொண்டிருப்பார்கள். கார்த்தியை பார்க்க பொறாமையாக இருந்தது என்றார்.

விழாவில் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க தலைவர் எஸ்.தாணு, செயலாளர் டி.சிவா, நடிகர் சங்க துணைத்தலைவர் பொன்வண்ணன், நடிகர்கள் சிவகுமார், மனோ பாலா, உதயா, பிரேம்குமார், ஸ்ரீமன், நடிகைகள் குட்டி பத்மினி, லலிதகுமாரி, படஅதிபர்கள் கே.எஸ்.சீனி- வாசன், கே.ஈ.ஞானவேல் ராஜா, எஸ்.ஆர். பிரபு, தனஞ்செயன், சசிகாந்த், டைரக்டர்கள் சந்தானபாரதி, சுதா கோங்ரா, வம்சிபி, இசை யமைப்பாளர் கோபி சுந்தர், பாடல் ஆசிரியர் மதன் கார்க்கி, வசனகர்த்தா ராஜுமுருகன் ஆகியோர் கலந்து கொண்ட னர்.



## நகுலின் திருமணம் முடிந்தது

போய்ஸ் படத்தின்மூலம் இயக்குனர் ஷங்கரால் தமிழ் சினிமாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் நகுல். இவர் பிரபல நடிகை தேவயானியின் தம்பியும் ஆவார். போய்ஸ் படத்தை தொடர்ந்து, "காதலில் விழுந்தேன்", "மாசிலாமணி", "வல்லினம்" உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இந்நிலையில் நகுலுக்கும் ஸ்ருதி என்பவருக்கும் பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, கடந்த 28 ஆம் திகதி இவர்களது திருமணம் சென்னை எழும்பூரில் உள்ள ராணி மெய்யம்மை ஹால் கல்யாண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. சரியாக காலை 10.41க்கு நகுல், மணமகள் கழுத்தில் தாலி கட்டினார். இந்த திருமண விழாவில் மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் மற்றும் அவர் களது உறவினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். தயாரிப்பாளர் தாணு நேரடியாக இவர்களது திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், பல்வேறு சினிமா பிரபலங்களும் நேரிலும், போனிலும் மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



## திருநங்கையாக நடிக்கும் விக்ரம்

தி தற்போது ஆனந்த் சங்கர் இயக்கும் ல் நடித்துவருகிறார். இதில் விக்ரமுக்கு தாரா, நித்யாமேனன் நடித்து ன் முதற்கட்ட படப்பிடிப்பு மலேசியாவில் போது இரண்டாம்கட்ட

பிடிப்பு சென்னையில் தொடங்கி பெற்றுவருகிறது.

ந்த படப்பிடிப்பில் பிரம்மாண்டமான டைக்காட்சி ஒன்றை படமாக்கி றார்கள். இப்படத்தில் விக்ரம் இரண்டு பாத்திரங்களில் நடித்துவருகிறார். இதில் திருநங்கை கதாபாத்திரம். இப்படத்தின் முதன்முறையாக திருநங்கை பாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். காக திருநங்கைகளின் நடை உடை னைகள், அவர்களின் பேச்சுமொழி ளிட்ட விஷயங்களை தெரிந்து கொண்டு றார் விக்ரம்.

போது "ரா" உளவுப்பிரிவு ஏஜெண்ட் பாத்திரத்திற்கான படப்பிடிப்பு மட்டுமே திவருகிறார்கள். பின்னர், திருநங்கை பாத்திரத்துக்கு தன்னைத் தயார்ப்படுத்த டங்குவார் விக்ரம்.

## ர்சனம்

**ா, இயக்குனர் : சந்தோஷ், அரவிந்த் கிருஷ்ணா**

ப்பாளராக இருக்கும் ஆடுகளம் பவேண்டும் என்பது நீண்டகால ல இருக்கிறது. இவரது த்துவிட்டு மனோபாலா ராக பணி புரிந்துவருகிறார். றைவேற்றும்பொருட்டு தான் தற்கான முயற்சிகளில்

ளான கேத்ரின் தெரசாவுக்கும் ருநாள் போலி சர்டிபிகேட் ஏமாற்றியிருப்பதாக கூறி றது.

க்கு, பின்னர் தன்னுடைய ளஞர்களின் சர்டிபிகேட்டுகளும் த்து பல வங்கிகளில் யடித்திருப்பது தெரிய செய்யாத ஜெயிலுக்கு செல்லும் அதர்வா, அங்கிருந்து வெளியே வந்து போலி சர்டிபிகேட் மூலம் பணம் வாங்கிய கும்பலை கண்டுபிடித்தாரா? தனது இலட்சியமான பி.பி.சி சேனலில் சேர்ந்தாரா? கேத்ரின் தெரசாவை கரம் பிடித்தாரா? என்பதே மீதிக்கதை. படத்தின் முதல் பாதியில் நிருபராகவும் இரண்டாம் பாதியில் அக்ஷன் ஹீரோவாகவும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் அதர்வா. தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள இவர் எடுக்கும் முயற்சிகள் ரசிக்கும்படியாக உள்ளது. பாடல் காட்சிகளில் சிறப்பாக நடனமாடியிருக்கிறார்.

கேத்ரீன் தெரசா அவரது முந்தைய படமான மெட்ராஸ், கதகளி ஆகியவற்றில் பார்த்திராத ஒரு புத்துணர்ச்சியான கேத்ரீன் தெரசாவை இப்படத்தில் பார்க்க முடிகிறது. கவர்ச்சியில் தாராளம் காண்பித்து ரசிகர்களை கவர்ந்திருக்கிறார். நரேன், பாக்யராஜ், கருணாகரன் உள்ளிட்ட பலர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

வில்லனாக நடித்திருக்கும் தருண் அரோரா பார்வையாலேயே மிரட்டியிருக்கிறார். வில்லனுக்கு உண்டான தோற்றம்கொண்டு ஸ்டைலீஷாக நடித்திருக்கிறார். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அளவான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஊடகம்சார்ந்த கதையை எழுதி இயக்கியிருக்கும் இயக்குனர் சந்தோஸுக்கு பாராட்டு. ஒரு நிருபருக்கு ஏற்படும் சிக்கல்களை அவர்களின் திறமைகள் மூலம் எப்படி எதிர்கொள்வது என்பதை சிறப்பாக காண்பித்திருக்கிறார். நிருபர் கதாபாத்திரத்திற்கு. அதர்வாவை தேர்வு செய்தது சிறப்பு. போலி சான்றிதழ்களை வைத்து வைத்து செய்யும் தில்லுமுல்லுகளை அழகாகவும் தைரியமாகவும் சொல்லியிருக்கிறார். டிரம்ஸ் சிவமணியின் இசை படத்திற்கு பெரும் பலம். இவருடைய இசையில் பாடல்கள் அனைத்தும் அருமை. அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் சிறப்பாக அமைந்திருக்கிறது.

மொத்தத்தில் கணிதன் தேர்ச்சி.

# மாணவர்கள்சார் பெற்றோரின் வகிபாகம்!

கல்வி முன்னேற்றமும் மாணவர்களின் - ஒழுக்கவாழ்வும் சம அளவில் முன்னேறவேண்டும் என்பதே கல்வித்துறை சார்ந்தவர்களதும் பொதுமக்களினதும் எதிர்பார்ப்பாகும். கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்திற்கு தவிர்க்கமுடியாத பங்கு இருக்கின்றது. மாணவர்களின் ஒழுக்கத்தில் முன்னேற்றத்தை நிரூபிக்காத பாடசாலை அதன் வேறு எந்த முன்னேற்றத்தைப் பற்றியும் பெருமைப்படமுடியாது. அந்தளவு கல்வி என்ற கருத்தோடு மாணவர்களின் ஒழுக்கமும் சம்பந்தப்பட்டுள்ளது. நல்லொழுக்கம், மனிதப் பண்புள்ள நல்ல நடத்தைகள், ஆளுமை வளர்ச்சி எல்லாவற்றையும் பாடசாலை ஊடாக பெறுவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். நவீன கல்வியும் அவ்வாறுதான் மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சிக் காகவும் பல திட்டங்களை வகுத்துள்ளது.

ஆனால், மாணவர்களின் ஒழுக்கம் என்பதை ஒரு தனிக் கருத்தாக ஆராயும்போதும் ஆளுமை வளர்ச்சி பற்றி நோக்கும்போதும் அதில் பாடசாலையை மட்டும் குறை காண்பது பொருத்தமானது அல்ல. பெற்றோர்களினதும் சமுதாயத்தினதும்



பங்கு முக்கியமானதாகும். பாடசாலையைவிட அதிகமான நேரத்தை ஒரு பிள்ளை பெற்றோர்களோடும் குடும்பத்தவர்களோடும் செலவிடுகின்றது. பாடசாலைக்கு வெளியே உள்ள நண்பர் குழாமும் சமுதாயமும் ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்துவதை நாம் உணர்வோம்.

கல்வி அறிவும் ஒழுக்க வளர்ச்சியும் ஒன்றாக சேர்ந்து வளரக்கூடிய ஒரு குடும்ப சமூக அமைப்பு எமக்குத் தேவை குழந்தைகளின் எதிர்காலம் சமூகம் என்றவகையில் எமது கைகளில் ஒப்படைக்கபட்டுள்ளது. ஒரு பிள்ளை

தொகுப்பு: பண்டிதர்

அடைகின்ற வெற்றியும் தோல்வியும் எம்மைச் சார்ந்துள்ளது. ஒரு குழந்தை எதிர்காலத்தில் என்னவாக இருக்கப் போகின்றது என்பது நாடும் சமூகமும் நாங்களும் வழங்கும் சேவைகளில் தான் தங்கியுள்ளது.

அதாவது ஒரு குழந்தையின் எதிர்காலம் சமூகத்தின் கைகளில் தங்கியுள்ளது. பாடசாலை முக்கிய மானது. அதிபரின் தலைமைத்துவம் இன்றியமையாதது. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் கவலையும் மிக முக்கியமானது. எல்லாவற்றையும்விட பெற்றோரினதும் சமூகத்தினதும் பொறுப்பு மிக முக்கியமானதாகும்.

பாடசாலை மற்றும் கல்வி மாணவர் களின் முன்னேற்றம் என்ற விடயங் களை சரியாக உணர்ந்து அவற்றில் போதுமான வெற்றிகளைப்பெறுவதற்கு சமூகம் அதிக பொறுப்புக்களையும் சேவைகளையும் ஆற்றவேண்டியுள்ளது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், தலைமைத்துவ மோகம், அரசியல்வாதி களின் ஆதிக்கம், குறுகிய நோக்கங்கள் என்பவற்றில் இருந்து விடுபட்ட ஒரு கல்விச் சூழல் அவசியமானதாகும். இதைத்தான் வளர்த்தெடுக்க நாம் பாடுபடவேண்டும். கல்வி முன்னேற்றம் என்ற ஒரு பொது நோக்கம்தான் எங்கள் இலட்சியமாக இருக்கவேண்டும்.

கல்வி வளர்ச்சியில் மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி முக்கியமானது என்று நாம் பார்த்தோம். மாணவர்கள் படித்தவர்களாகவும் நல்லவர்களாகவும் வருவார்களா? இதுதான் பிரதான கேள்வி. மாணவர்களிடம் நல்ல பழக்கவழக்கங்களை உருவாக்குவதில் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் அதிக பொறுப்பு உள்ளது. சாதகமான நடத்தைப் பண்பு மாணவனில் அல்லது ஒரு மாணவியில் உருவாக்க முயற்சிகள் வேண்டும். இன்னொரு வகையில் சொல்வதானால் ஒழுக்க அறிவு விளக்கத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய இயல்தகைமை உள்ளவர்களாக மாணவர்கள் ஒழுக்க ரீதியில் பயிற்றப்படவேண்டும். இதை நாங்கள் ஆங்கிலத்தில் Moral Reason-ing என்று கூறுவோம். ஒழுக்கம் என்று கூறுவதன் முக்கிய பகுதி இதில்தான் அடங்கியுள்ளது. 8ம் வகுப்பு வரை ஒரு வித கிளிப்பிள்ளைப் பாடமாக ஒழுக்கம் பயிற்றப்பட்டு வந்தாலும் மாணவனுடைய ஒழுக்கஅறிவு வளர்ச்சிக்கு அது போதுமானது அன்று. ஒழுக்கஅறிவு விளக்கம் அல்லது

Moral Reasoning என்பதை நோக்கி அவனுக்கு பயிற்சி ஓரளவாவது தரப்படவேண்டும். ஏனெனில் இதுதான் மாணவர்களுக்கு நல்வாழ்க்கையை உருவாக்குவதற்கு தீர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய அல்லது மேற்கொள்ளக்கூடிய ஆற்றலை வழங்குகின்றது.

ஒழுக்கப் பெறுமானங்கள் தொடர்பில் moral reason ஒரு பாரிய முன்னேற்றத்தை உருவாக்கும். ஆனால் அதற்கான பாடநெறிகளோ, பயிற்றுவிப்புக்களோ பாடசாலையிலும் சமூகத்திலும் இன்று இல்லை. ஆனால் அனுபவமுதிர்ச்சியின் ஊடாக இதனை தற்போதைய நிலையிலும் ஆரம்பிக்க வாய்ப்புக்கள் உள்ளன. அதேவேளை இதற்கான கல்வித்துறை ரீதியாக ஒழுக்க பயிற்றுவிப்புக்களை ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெற்றுத் தரக்கூடிய பயிற்சிகள் தேவையாக உள்ளது.

அதாவது ஒழுக்கத் தீர்மானங்களும் ஒழுக்கப் பிரச்சினைகளும் 40 அல்லது 50 வருடங்களுக்கு முற்பட்டவிதத்தில் இன்று சமூகத்தில் இல்லை. குறிப்பாக இன்றையை பாடசாலை மாணவன் அல்லது மாணவி எதிர்நோக்கும் ஒழுக்கரீதியான பிரச்சினைகளும் சவால்களும் 40 அல்லது 50 வருடங்களுக்குமுன்னர் கேள்விப்பட்டு இருக்கக்கூட முடியாதவை யாக இருக்கலாம். ஆகவே ஒழுக்கத்தை மாணவருக்கு கற்றுக்கொடுப்பதிலும் பயிற்றுவிப்பதிலும் திருத்தமானதும் உயர்வானதுமான வழிமுறைகள் இன்று தேவையாக உள்ளன. பழைய முறைகள் பயனளிக்கும் என்று நான் கருதவில்லை.

இன்னொருபுறத்தில் பெரியவர்களின் அல்லது வளர்ந்தவர்களின் முதிர்ச்சி யான நடவடிக்கைகளும் ஒழுக்க நடத்தைகளும் ஒழுக்க விபரிப்புக்களும் தான் சரியாக செயற்படவேண்டும். பாடசாலை ஆசிரியர்களைவிட இவர்கள் தான் மாணவர்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருப்பவர்கள். பள்ளிக்கூடத்தை விட அதிகமான காலத்தை ஒரு மாணவன் பெற்றோர்களோடும் குடும்ப அங்கத்தவர்களோடும் செலவிடுகின்றான். ஒழுக்க மற்றும் பண்பாட்டு விடயங் களை பெரியவர்கள்தான் மாணவர் களுக்கு கடத்துகின்றனர். மாணவர்களின் மனதில் பதியவைக்கின்றனர். இந்தக் கருத்தினுடைய முக்கியத்துவம் சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும்.

அதாவது பெற்றோர்களின் பங்கு மாணவனின் ஒழுக்க வாழ்வைப் பொறுத்தவரை மிக முக்கியமானது என்பதுதான் இங்கு வலியுறுத்தப்படு கின்றது. இன்னும் சொல்லப்போனால் பெற்றோர்கள்தான் தமது பிள்ளை களுக்கு நேரடியான முன்மாதிரிகளாக இருக்கக்கூடியவர்கள். ஒழுக்கத்தை பிள்ளைக்கு ஊட்டி வளர்ப்பவர்களும் அவர்கள்தான்.

அடுத்ததாக வீட்டுக்கு வெளியே உள்ள சுற்றாடல் வீட்டின் நிலையை விட வேறுபட்டதாக அல்லது மோச மானதாக இன்று மாறியுள்ளது. வன்முறை, மோசமான வீடியோ படக்காட்சி வசதிகள், பீடா வெற்றிலை, போதைவஸ்துப் பாவனை, தூள் வகைகள் என்பவற்றிற்கும் பிள்ளை இலகுவில் தன்னை இழக்கின்றது. இது பாடசாலையினாலும் பெற்றோரினாலும் கூட கையாளப்படமுடியாத அளவு ஒரு பாரிய சமூகத் தீங்காக மாற்றம் அடைந்துள்ளது. அநேகமான இடங்களில் இதனுடைய தாக்கம் இருப்பது பற்றி ஆய்வுகள்மூலமாகவும் பத்திரிகைச் செய்திகள், இணையத்தளங்கள் மூலமாகவும் நாம் அறிந்து வருகின்றோம். இது பாடசாலையின் ஒழுக்கக் கட்டமைப்பையும் குடும்பங் களின் இயல்பான நெறிமுறையான அமைப்பையும் உடைத்தெறிகின்றது.

பல்வேறுவிதமான முறைகேடான செயல்கள் இவற்றின் விளைவாக இளம் சந்ததியினரை தாக்கிவருவது பற்றி கவலைக்குரிய உதாரணங்கள் பல எமது கவனத்திற்கு வந்துள்ளன. போதைவஸ்து, மோசமான வீடியோ, பீடா பாவனைகள் என்பவற்றை ஒரு பிள்ளைக்கு பெற்றோர் பழக்குவதில்லை. ஆனால் இதை பிள்ளைதான் வாழும் சமூகத்தில் இருந்து அல்லது வீட்டுக்கு வெளியே இருந்து கற்றுக் கொள்கின்றது. ஆகவே வீட்டுச் சூழல் சரியாக இருந்தாலும் பாடசாலை சூழல் ஒழுங்காக இருந்தாலும் சமூகத்தில் காணப்படும் இத்தகைய தீயவழிமுறைகள் மாணவர்களையும் இளைஞர்களையும் நிச்சயம் பாதிக்கும்.

இந்த மாதிரியான தீயகேடான விடயங்களை பெற்றோர்களும் சமூகமும் கண்டிக்காததில் இருந்தும் இவற்றைத் தூட்டிக்கழித்து வருவதில் இருந்தும் சிறுவர்களும் இளைஞர்களும் இவற்றிற்கு பலியாகின்றனர். அதிகமான பெரிய பாடசாலைகளில் வயதுவந்த மாணவர்கள் வன்முறை விடயங்களில் அக்கறையுள்ளவர்களாக இருப்பது மறைக்கப்படக்கூடிய ஒரு விடயம் அல்ல. வன்முறை, வயதை மீறிய பாலியல் தொடர்பு, ஏமாற்று, போதை வஸ்துப் பாவனை, பெற்றோருக்கும் பாடசாலைக்கும் கட்டுப்படாத நிலை போன்ற பிரச்சினைகளால் இளம் மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகள் பல இடங்களில் சீர் குலைந்திருப்பதோடு அது சமூகத்தின் கவலையாகவும் மாறியிருக்கின்றது.

மாணவர்களின் நடை உடை முதல் சிகையலங்காரம் வரைகூடிய கவனத்துடன் செயற்பட்டு பாடசாலை மாணவர்கள் சீருடை என்னும் வரைமுறைகளுக்கு அமைவாக செயல்படுவதற்கு பாடசாலைகளுடன் ஒத்துழைக்கவேண்டும்.

அதாவது பாடசாலை மாணவர்களது சீருடைகளை தைக்கின்ற தையல் கடைக்ககாரர்கள் சீருடைகளை தைக்கின்றபோது பொதுவான ஒரு முறையை கடைப்பிடிக்கவேண்டும். அண்மைக்காலங்களில் தென்னிந்திய சினிமா ஹீரோக்களுக்கு இணையாக தங்களை காட்டிக்கொள்ள பெருமளவில் எத்தனிக்கின்றனர். மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களை அஜித் விஜய், சூர்யா, தனுஷ் என பாவனை பண்ணிகொள்ளும் அளவுக்கு தென்னிந்திய சினிமா மாணவர்களது சீருடை மற்றும் சிகையலங்காரம் என்பவற்றில் செல்வாக்கு செலுத்தி நிற்கிறது. இந்த நிலையை மாற்ற ஒவ்வொருவரும் அதாவது மாணவர் களது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் பொதுவான ஒன்றினை பின்பற்றி சீருடைகளை தைப்பதன் மூலம் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளில் ஒரே முறையில் சீருடை அணியும் பழக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைக்கவேண்டும்.

அதேபோன்று பாடசாலை மாணவர் களது சிகையலங்காரம் என்பதும் மாணவர்களது தோற்றப்பாட்டை மாற்றிவிடும் அளவுக்கு அல்லது மாணவர்களிடையே வேறுபாட்டினை அல்லது ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகின்ற அளவுக்கு ஒவ்வொரு மாணவரது சிகையலங்காரமும் காணப்படுகிறது.

சிகையலங்கார நிலையங்களில் இப்பொழுது இருக்கின்ற தென்னிந்திய சினிமா ஹீரோக்களதும் மற்றும் கிரிகெட் உதைபந்தாட்ட வீரர்களது சிகையலங்காரங்களுக்கு ஒப்பான முறை யில் தங்களது சிகையலங்காரமும் இருக்கவேண்டும் என வற்புறுத்தியே தங்களது சிகையலங்காரத்தை மேற்கொள்கின்றனர். சில பாடசாலை மாணவர்கள் தங்களது முடிக்கு வர்ணம் பூசிவருவதையும் நாம் அன்றாடம் பாடசாலைகளில் காணுகின்றோம்.

எனவே இந்த நிலையை மாற்றி பாடசாலை மாணவர்களுக்கென பொதுவான சிகையலங்காரத்தை மேற்கொள்ள சிகையலங்கரிப்பாளர்கள் அனைவரும் முன்வரவேண்டும். இதனூடாக பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு சீருடை மற்றும் சிகையலங்காரம் என்பவற்றினூடாக மாணவன் தன்னை மாணவன் என்று உணரும் தன்மைக்கு ஆளாக்கவேண்டியது இன்றைய சமூகத்தின் தலையாய கடமையாகும்.

# மாற்றம்தான் ஏமாற்றமல்ல!

இந்த வார சிறுகதை

வாணிஸ்ரீ சிவகுமார்

"தனக்கு ஐந்து ஆண் பிள்ளைகள்" என்ற நினைப்புத்தான் மாம்சா மரைக்காயரின் ஒரே சந்தோசம். மகா சந்தோசம். தனது ஆண் வாரிசுகளின் எண்ணிக்கை பற்றிய மகிழ்ச்சியானது, சில சமயம் மமதை கலந்த மயக்கமாகக் கூட இருந்திருக்கிறது, மரைக்காயருக்கு.

பொன் அம்பாரி பூட்டி, வைர முக படாம் தரித்த யானைகளை ஓட்டிச் செல்கிற கம்பீரத்துடன்தான் பிள்ளை களை பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டுபோவார், மாம்சா.

கலண்டர்கள் பல கரைந்துபோனதில் பையன்கள் எல்லாரும் இளைஞர்கள் ஆகிவிட்டார்கள்.

தனது மளிகைக் கடைக்கு சாமான் வாங்க வருகின்ற தனது பால்ய சிநேகிதர் எவரேனும், "கால் கிலோ புளி கொடுங்க" என்று சொல்லிவிட்டு, "பையனுங்களெல்லாம் என்ன பண்றாங்க?" என்ற வார்த்தையைக் கோர்த்துவிட்டால் போதும். மகிழ்ச்சி மண்டைகொண்டு விடும் மரைக்காயருக்கு.

"மூத்த பையன் பாலி டெக்னிக் முடிச்சிட்டு அபுதாபில இருக்கான். ஒயில் கம்பெனி. அமெரிக்கன் கம்பெனி" ரெண்டாவது பையன் யூனானி டாக்டருக்குப் படிக்கிறான்.. இது ஆறாவது வருசம். ரெண்டு பையனுங்க எம்.டெக்.., கடைசிப் பையன் பி.இ. கடைசி வருசம்! என்று வாக்கியத்தை முடிக்கப்போகையில் ஏற்படும் மகிழ்ச்சி உந்துதலில், எடைக்கு மேல் இருபது கிராம் அளவுக்குக் கூடுதலாகப்போகும் புளிப் பத்தையைக் கூட பிய்த்தெடுக்க மறந்துபோகும் மரைக்காயருக்கு. அப்படி ஓர் ஆனந்தம். ஐப்பசி மாத அடைமழையில் வெள்ளம்.

ஆறு குளமெல்லாம் நிரப்பிக்கொண்டு பாய்வது போல், தனக்கு ஆண்மக்கள் ஐவர் என்ற நினைப்பு வரும்போதெல்லாம் மனது தனது கொள்ளளவைத் தாண்டி மகிழ்ச்சிக் கூத்தாடும் அவருக்கு.

காரணம் அவருடைய அனுபவக் கஷ்டம்தான். மாம்சா மரைக்காயருடன் கூடப் பிறந்த ஐவரும் பெண்கள். மாம்சாதான் மூத்தவர். போதுமான வசதி என்ற நிலை மாறி ஓரளவு கஷ்டம் என்ற நிலைக்கு வந்துவிட்டது குடும்பம். ஐந்தாவதும் கடைசியுமான தங்கச்சியைக் கட்டிக் கொடுக்க வேண்டிய நிலையில் அத்தனை வாசலும் அடைபட்டுப் போய்விட்டன. கொடுக்கல், வாங்கல் சாத்தியமற்றுப் போனது.

"கடையை வித்துடலாமாடா தம்பி" என்று பெற்றவர்கேட்டதும், கண நேரமும் தயங்காமல், "ஆமா வாப்பா. வித்துட்டு வேலையை முடிங்க" என்று வார்த்தைகள் வெளிப்பட்டன, மாம்சாவிடமிருந்து அந்த சமயம்.

"யா அல்லாஹ்! என் பையனுக்கு அத்தனையும் ஆணாய்ப் பொறக்கணும்" என்று மனமுருகிப் பிரார்த்தித்தார் ஆதம்ஷா, மாம்சாவின் வாப்பா, தன்னுடைய துன்பம் தன் பிள்ளைக்குத் தொடரக்கூடாதென்று.

அவருடைய பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டதன் அடையாளமாக மாம்சாவுக்கு அடுத்தடுத்து பிறந்த ஐந்தும் ஆண் மக்கள்.

"என் தங்கச்சி அஞ்சுபேரையும் கரையேத்தறதுக்கு எங்க வாப்பா பட்ட கஷ்டத்துக்கு நிவாரணம்தான் நமக்குக் கிடைச்சிருக்கிற அஞ்சும் ஆண்டி" என்று மனைவியிடம் தன் மனநிலையைப் பதிவு செய்து வைத்திருந்தார் மாம்சா.

ஆனால் இந்த மனமகிழ்ச்சிக்கு தற்போது பங்கம் வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது மரைக்காயருக்கு.

காரணம், "நம்ம ஊர்ல ஒளிமுகம்மது ரொம்ப நல்ல புள்ள. அவனுக்குப் பொறந்து இருக்கிற அஞ்சும் பொண்ணு. அதுல ஒண்ணை நீ உன்னோட முதல் பையனுக்குக் கட்டணும்" என்று மரணத் தறுவாயில் "வசியத்" செய்துவிட்டு மரித்துப் போயிருந்தார் மாம்சாவின் வாப்பா.

உண்மைதான். அந்த நடுத்தரமான கடற்கரைப்பட்டினத்தில் ஒளிமுகம்மது போல் இன்னொருவர் இல்லை என்றே சொல்லலாம். அத்தனை நியாயமானவர். மாம்சாவின் பள்ளித் தோழர். பழைய பாட்டில், பிளாஸ்டிக், பேப்பர் கடை வைத்திருப்பவர். முதல் பெண்ணுக்கு மட்டும்தான் நிக்காஹ் முடிந்திருந்தது. அவரிடம் இன்னும் நான்கு பெண்கள் பாக்கி.,

வாப்பாவின் கட்டளைப்படியே தனது மூத்த பையனுக்கு ஒளி முகம்மதுவின் இரண்டாவது பெண்ணைத் திருமணம் செய்ய ஆயத்தமானார் மாம்சா. சென்ற முறை பையன் அபுதாபியிலிருந்து வந்தபோதே நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது. அடுத்த பயணம் ஊருக்கு வந்ததும் நிக்காஹ் என்பதாக உடன்பாடு.

இந்த இடத்தில்தான் மாம்சா மரைக்காயரைத் தாக்க முற்பட்டது அதிர்ச்சி அலை..

ஆம்!

நிச்சயதார்த்தம் முடிந்து அபுதாபிக்கு விமானம் ஏறப்போகிற தருணத்தில், "பொண்ணு வீட்டிலிருந்து பணம், நகை எதுவும் வாங்கக் கூடாது. சுருக்கமாச் சொல்றேன். அவுங்க வீட்லேர்ந்து ஒரு குண்டுசிகூட நமக்கு வேணாம். இன்ஷா அல்லாஹ் நான் திரும்பி வரும்போது பத்து பவுண் கொண்டாந்து மஹர் கொடுத்து அந்தப் பெண்ணை நிக்கா பண்ணிக்குவேன்" என்று பையன் சொன்னதும் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டது போலிருந்தது மரைக்காயருக்கு.

தனது தங்கைமார்களுக்கு சீர், செனத்தி என்று கொடுக்க எதையெல்லாம் வாங்கியதையும், விற்கக்கூடாதவற்றை எல்லாம் விற்றதையும் எண்ணிப் பார்த்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி அது.

"அதைக் கொடு இதைக் கொடுன்னு நம்ம கேட்கப் போறதில்லே. ஆனா அவுங்களா தம் பெண்ணுக்கு கொடுக்கிறதை வாணாம்னு சொல்ல இவன் யாரு?" வீட்டுக்குத் திரும்பியதும் தனது மனதிலிருந்த ஆதங்கத்தை மனைவியிடம் கொட்டினார் மாம்சா.

நபீசா, மாம்சா மரைக்காயருக்கு கிடைத்த மனைவி என்பதைவிட "மதி மந்திரி" என்பதே சரி. நகைச்சுவை உணர்வும் அதிகம். "நச்"சென்று கேட்கும் துணிச்சலும் மிகுதி நபீசாவுக்கு. "பட்டென்று கேட்டாள்:

"பையனைப் பெத்த உங்களுக்குப் பொண்ணு வீட்டிலேர்ந்து எதுவும் எதிர்பார்ப்பு இருக்கா?"

"இல்லே அதுக்கில்லே"


"பின்னே எதுக்கு?"

"….."

மனைவிக்குப் பதில் சொல்ல மரைக்காயரிடம் வார்த்தை இல்லை. ஆனால், மனசுக்குள் இருந்துகொண்டே இருக்கிறது ஓர் அரிப்பு. அதாவது, "மத்த நாலு பயவளும் இப்படித்தான் செய்வானுகளோ?" என்று.

இந்த இம்சை போதாதென்று இன்றைய நிகழ்வு ஒன்று மாம்சாவின் மனதில் ரணத்தை ஏற்படுத்திவிட்டது.

வேறொன்றுமில்லை. மாம்சா மரைக்காயருக்கு கடைக்கு அடுத்த தெருவில்தான் இருக்கிறது சம்பந்தியாகப் போகிற ஒளி முகம்மதுவின் பழைய பாட்டில் கடை. தெருவடிக்குப்போய் பழைய பொருட்களை திரட்டிக்கொண்டு விற்கிற சைக்கிள்காரர்கள் பொழுதடையத் தான் வருவார்கள். அதுவரை ஒளி முகம்மது கடையில் சும்மாதான் உட்கார்ந்திருப்பார்.



மரைக்காயருக்கு அவசரமாக கூத்தாநல்லூர் போய் வரவேண்டிய வேலை. கடையைச் சாத்திவிட்டுப் போக விரும்பாத மாம்சா, சம்பந்தியிடம் போய், "கடையில் பையன் இருக்கான். சித்தே கடையை வந்து பார்த்துக்குங்க" மதியத்துக்குள்ள வந்துடுவேன் என்று வேண்டுகோள் விடுத்தார்.

"அடடே" இன்னிக்கு சரக்கு ஏத்த லொறிவருதே என்றார் ஒளிமுகம்மது, பளிச்சென்று.

சற்றும் எதிர்பாராத பதில். சம்பந்தி யிடம் தனது முதல் கோரிக்கையே மறுதலிக்கப்பட்டதில் மரைக்காயருக்கு பலத்த ஏமாற்றம். பொழுது எப்போது போகும் என்றாகிவிட்டது.

இரவு பத்துமணிக்கெல்லாம் கடையைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்த மரைக்காயர் செய்த முதல் வேலை, சம்பந்தி ஒளி முகம்மது தன்னுடைய வேண்டுகோளை நிராகரித்தது பற்றி நீட்டி முழக்கி மனைவியிடம் புகார் செய்ததுதான்.

"ஒரு குண்டூசியைக்கூட எதிர் பார்க்காம அவுங்க வீட்டுப்பெண்ணை ஏத்துக்கிற நமக்கு ஒரு ரெண்டு மணிநேரப் பொழுதுக்கு கடையைப் பார்த்துக்கக்கூட மனசு இல்லாத சம்பந்தி என்ன சம்பந்தி" என்று தன் ஆதங்கத்தைச் சொல்லி முடித்தார் மாம்சா. கணவர் சொன்னதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நபீசாவுக்கு அவரது "உண்மையான மனக்குறை" என்னவென்று புரிந்துவிட்டிருந்தது. மௌனம் காத்தாள்.

"என்ன குட்டெ! நான் பாட்டுக்கு சொல்லிக்கிட்டிருக்கேன். நீ பேசாம இருக்கே" என்றார் மனைவியின் பதிலை எதிர்பார்த்த மாம்சா.

சரி என்று பட்டால் அதை சொல்லத் தயங்காத நபீசா பளீரென்று சொன்னாள்:

"உங்க பிரச்னை சம்பந்தி வந்து கடையைப் பார்த்துக்கலையே என்பதல்ல"

"பின்னே?" திகைப்புடன் கேட்டார்.

"நீங்களே சொன்ன மாதிரி ஒரு குண்டுசி கூட வாங்காம பொண்ணு எடுக்கிறோமேங் கறதுதான்" "என்ன குட்டெ"

"ஆமாங்க. நான் கவனிச்சிக்கிட்டுதான் வர்ரேன். உங்க மனசுக்குள்ள மறுவிக்கிட்டு இருக்கிறது அதுதான். காலையில எந்திரிச்சு குளிச்சிட்டு தலையைத் தொவட்டியும் தொவட்டாமையுமா கடைக்கு ஓடறதும், ஊர் மொத்தமும் அடங்கினப்புறம் கடையைப் பூட்டிட்டு வர்ரதுமாக இருக்கியளே தவிர நாட்டு நடப்பு தெரியல உங்களுக்கு" என்று கணவரை நேருக்கு நேராய்ப் பார்த்தாள் நபீசா!

"என்ன தெரியலேங்கிறே எனக்கு?" குற்றத்தை ஒப்புக் கொள்ள தயாராகிவிட்ட ஒரு குற்றவாளியின் குரலைப் போல் ஒலித்தன மாம்சாவின் வார்த்தைகள். "பேப்பர் வாங்கறீங்களே" அதை என்னைக்காவது எடுத்து படிக்கிறீங்களா?"

"நான் எங்கே படிக்கிறேன். நீ தான் படிக்கிறேன்" "இப்ப நானே படிக்கிறேன். கேட்டுக்குங்க" என்ற நபீசா தன் வீட்டுக்கு வரும் தினசரியின் வெள்ளிக் கிழமைக்கான இணைப்பை எடுத்து வாசிக்கலானாள்.

"எனது மகனுக்குத் திருமணம் தடைப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அவனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?" "என் மகனுக்கு முப்பது வயதாகிறது. எப்போது திருமணம் நடக்கும்?" "எனக்கு எப்போது திருமணம் நடக்கும். எப்படிப்பட்ட பெண் மனைவி யாக அமைவார்?"

"எனது திருமணத்துக்காக ஐந்து வருடமாக முயற்சி செய்கிறேன். எப்போது எனக்கு மனைவி அமைவார்?" "எனது சகோதரருக்கு ஆறு ஆண்டு களாகத் திருமண முயற்சி செய்கிறோம். எப்போது அவருக்குத் திருமணம் நடக்கும்?"

வாசிப்பதை நிறுத்திக் கொண்ட நபீசா, கணவரின் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த தினசரி இணைப்பை சற்றே தணித்து, "இது மட்டும் இல்லீங்க. இந்தப் பேப்பர் முழுக்கவும் மகனுக்கு எப்போ பொண்ணு கிடைக்கும்ங்கறதுதான் முக்கிய கேள்வி. ஒரே கவலை"

"என்ன குட்டெ தலைகீழாய்ச் சொல்றே" "தலைகீழாய்த் தாங்க ஆயிடுச்சு" பொண்ணுக்கு நல்ல பையனைத் தேடி அலைஞ்ச காலம் போயி பையனுக்கு நல்ல பொண்ணு கிடைக்குமான்னு தவிக்கவுட்டுட்டான். புள்ளையை பெத்தவங்க அடிச்ச லூட்டியையும் பொண்ணைப் பெத்தவங்க பட்ட கஷ்டத்தையும் பார்த்துட்டு அல்லா அப்படியே தலை கீழா மாத்திட்டான்ல"

"இப்போ பணம் காசு பெரிசு கெடயாது.. அதான் தெருவுக்குத் தெரு பணப் பெட்டியை வச்சு அட்டையைச் சொருகி அள்ளிக்கிட்டுப் போங்கன்னு வச்சுட்டானே" பொண்ணு கெடைக்குறது தான் கஷ்டம்" நபீசா சொல்லிக் கொண்டேபோக தானும் ஒருமுறை அந்த தினசரியின் இணைப்பை எடுத்து வாசித்துப் பார்த்த மாம்சா மரைக்காயர் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார். இப்படியொரு மாற்றம் நிகழ்ந்திருப்பது மெய்யாலுமே அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

"ஒண்ணு சொல்லவா குட்டெ" என்றார் மனைவியைப் பார்க்காமல் மோட்டு வளையைப் பார்த்தபடி. "சொல்லுங்க" என்றாள் நபீசா.

"எப்படிப் பார்த்தாலும் என்னை விட ஒளிமுகம்மது நல்ல ஆள்தான். நாம ஒண்ணும் யாருக்கும் கெடுதி நினைக்கிற ஆள் கிடையாது. இருந்தாலும் வெறுப்பு, கசப்பு பாராட்டுவோம். ஆனா ஒளி முகம்மதுக்கு எந்தக் குறையும் கிடையாது"

"சொல்ல நெனச்சதைச் சொல்லுங்க" என்று ஊக்குவித்தாள் நபீசா.

"அப்பேர்ப்பட்ட நல்ல மனுசனுக்கு அஞ்சு பொண்ணு பொறந்திருக்கு.. நமக்கு அஞ்சும் ஆணா கிடைச்சிருக்கேன்னு ரொம்ப நாளா குழப்பம். அது இப்பதான் தெளிவா ஆகி இருக்கு" என்ற மாம்சா மரைக்காயர் நெடுநேரம் சிந்தனை வயப்பட்டவராக வானத்தை வெறித்தபடி மௌனித்திருந்தார்.

அவருடைய மௌனம் உடைபடும் வரை தானும் பொறுமையாகக் காத்திருந்தாள் நபீசா.

"மாற்றம்தான்.. நமக்கு ஒண்ணும் ஏமாற்றம் கிடையாது" என்றார் மாம்சா, மனைவியின் முகம் பார்த்து.




# பெண்ணுக்கே உரியவை



அரவணைப்பு என்பது வாழ்க்கைக்கு ஆதாரமானது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனைகூறி, வாழ்வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண். இப்படிப் பிறருக்கு உதவி செய்துகொண்டு, அந்த உதவிசெய்யும் குணத்தையே தான் வாழ்வதற்கும், பயன்படுத்திக் கொள்வதுதான் பெண்ணின் அடிப்படையான சிறப்பு குணம்.

உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என ஆணுக்கு வலியுறுத்தப்பட்டதை போலவே, பெண்ணுக்கும் பிறருக்கு உதவும் நிலையிலும் இருக்கவேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது. திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும்போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடுதான் இணைந்து போகவேண்டும் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டுதான் தற்காலத்துப் பெண்ணும் செல்கிறாள்.

புதிய கணவனுக்காக எதையும் விட்டுக்கொடுக்கும் நிலையையும், கணவனின் கருத்துகளோடு ஒத்துப்போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தன் கணவனின் விருப்பமே தன் விருப்பம், அவன் நோக்கமே தனது நோக்கம், அவனது இலட்சியமே தனது இலட்சியம் எனக்கருதி, அவனோடு தன்னை இரண்டற இணைத்துக் கொள்கிறாள். தனது கணவன் ஆறுதலாக, சுகமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரு சூழலை பெண் உருவாக்கி தனது நிலைப்பாட்டை உறுதிசெய்து கொள்கிறாள்.

இதன்மூலம் கணவன் தன்னை மீண்டும் மீண்டும் நாடிவரும் நிலையை உண்டாக்குகிறாள். தனது மென்மையான எண்ணங்களை வெளிப்படுத்த இயலாதவனாக ஆண் இருந்தபோதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்களையும் குறிப்பால் அறிய கற்றுக்கொள்கிறாள். ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன், காதலுடன் செய்யவேண்டும் என்று பெண் எதிர்பார்ப்பாள். வாழ்க்கையில் அரவணைப்புக்கு அடுத்து அவள் விரும்புவது காதலிப்பதையும், காதலிக்கப்படுவதையும் தான். உடல்ரீதியாகத் தொடுவது, பற்றுவது, தழுவுவது, மன ரீதியாக உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வது, செயற்படுவது ஆகிய ஒவ்வொன்றையும் தனது தாயின் உணர்வின்மூலம் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகப் பெறுகிறாள். ஆண் குழந்தை தனது தாயிடம் இருந்து விலகிச் செல்வதைப் போல், பெண் குழந்தை செல்வதில்லை. ஒவ்வொரு செயலையும் தாயிடம் இருந்து கற்றுக் கொள்கிறது. வாழ்நாள் முழுவதும் அவளது இந்த இயல்பு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. ஆணின் இதயத்தில் மூடப்பட்ட மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தி காதலுக்கும் நெருக்கத்துக்கும் அவள் காலங்காலமாக ஓர் இணைப்பு பாலமாக இருந்துவருகிறாள். இதனால் உணர்வுரீதியாக அனைவரையும் கவரும்வகையில், ஆணைவிட பெண் ஒருபடி மேலே போய்விடுகிறாள். ஆண்களிடம் இல்லாத பெண்களின் சிறப்புக்குணம் இது.

## முகப்பொலிவிற்கு சிவப்பு சந்தனம்

சிவப்பு சந்தனத்தில் சருமத்திற்கு தேவையான அனைத்து சத்துக்களும் ஏராளமாக நிறைந்துள்ளன. எனவே இவற்றைக் கொண்டு தினமும் முகத்திற்கு மாஸ்க் போட்டுவந்தால், சருமத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

• உங்கள் சருமம் ஆரோக்கியமான முறையில் காட்சியளிக்க வேண்டுமானால், சரும செல்களுக்கு போதிய ஊட்டச்சத்துக்களை வழங்க வேண்டியது அவசியம். அச்செயலை சிவப்பு சந்தனம் சிறப்பாக செய்யும். எனவே 1-2 கரண்டி சிவப்பு சந்தனப் பொடியை தண்ணீர சேர்த்து பேஸ்ட் செய்து, தினமும் முகம், கை, கால்களுக்கு தடவி வர, உங்கள் சருமம் நன்கு ஆரோக்கியமாக காட்சியளிக்கும்.



• உங்கள் முகம் எப்போதும் பொலிவிழந்து சோர்வாக காணப்படுகிறதா? அதைத் தடுக்க சிவப்பு சந்தனத்தைப் பயன்படுத்துங்கள். அதற்கு ஒரு பௌலில் 2 மேசைக்கரண்டி தயிர் அல்லது பாலை ஊற்றி, அதில் 1 மேசைக்கரண்டி சிவப்பு சந்தனப்பொடி மற்றும் 1/2 கரண்டி மஞ்சள் தூள்சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 1/2 மணிநேரம் ஊறவைத்து கழுவவேண்டும்.

• பருக்களால்வந்த தழும்புகள் முக அழகைக் கெடுக்கும். அதனை சிவப்பு சந்தனம்கொண்டு எளிதில் போக்கலாம். அதற்கு 4 மேசைக்கரண்டி தேங்காய் பாலில், 2 கரண்டி பாதாம் எண்ணெய் மற்றும் 4 தேக்கரண்டி சந்தனப்பொடி சேர்த்து கலந்து தினமும் முகத்திற்கு தடவிவந்தால், சருமத்தில் உள்ள தழும்புகள் விரைவில் மறையும்.

(தொடரும்)

# உங்கள் உடல் மொழி உங்களை பற்றி என்ன சொல்கிறது?

**பிடித்த நபர்**

உங்களுக்கு பிடித்த நபர் ஒரு நபருடன் பேசும்போது உங்கள் கால்கள் அகண்டு அல்லது கோணலாக இல்லாமல் நேராக இருக்கிறது எனில், அவர் உங்களுக்கு பிடித்த நபராக இருப்பார்கள். உங்களுடன் பேசும்போது யாரேனும் அப்படி இருந்தால், அவர்களுக்கு உங்களை பிடித்து இருக்கும், அல்லது உங்கள்மீது மரியாதை வைத்திருப்பார்கள்.



***


**வேறுதிசையில்**

ஒரு நபருடன் பேசும்போது உங்கள் கால்கள் வேறுதிசையில், எதிர்த்திசையில் திரும்பிக்கொள்கிறது எனில், அவர்கள்மீது உங்களுக்கு கோபம் இருக்கும் அல்லது பிடிக்காத நபராக இருப்பார்கள்.



***


பொறுமையிழந்து மிகவும் வேகமாக பேசுவோர் அல்லது கைகளை வேகமாக ஆட்டி, ஆட்டி பேசுவோர், மாறி, மாறி செய்கைகள் செய்துகொண்டே இருப்பவர்கள் பொறுமை இல்லாத நபர்களாக இருப்பார்கள்.



***

**ஆர்வமின்றி**

தோள்களை தொங்கவிட்டு அமர்ந்திருப்பது நீங்கள் ஆர்வமின்றி இருக்கிறீர்கள் என்று வெளிகாட்டும் உடல்மொழியாகும். மேலும், மன அழுத்தத்துடன் இருக்கும்போது தானாகவே தோள்கள் இறங்கி காணப்படுகிறது.



***

**கருணை**

பேசும்போது அடிக்கடி இதயத்தை தொட்டு, தொட்டு பேசும் உடல்மொழி கொண்ட நபர்கள் கருணையுடன் இருப்பவர்கள்.



***

**பொய்**


கூறுபவர் பேசும்போது அதிகமாக மூக்கின் அருகே கைகளைக் கொண்டு போய் பேசும் உடல்மொழி நீங்கள் பொய் கூறுகிறீர்கள் என்று வெளிப்படுத்தும் அறிகுறி ஆகும்.



***

**தடுமாற்றம்**

பேசும்போது அடிக்கடி புருவங்களை உயர்த்தி, தலையை ஆட்டிக்கொண்டே பேசுவது, நீங்கள் எதையோ கூற வந்து தடுமாறுகிறீர்கள் அல்லது கூறவரும் செய்தியை சரியாக கூற தயங்குகிறீர்கள் என்று வெளிப்படுத்தும் உடல்மொழியாக இருக்கிறது.



***

**கைகட்டி**


கைகட்டி பேசுவது நமது பண்பில் தவறான அணுகுமுறை என்று கூறப்படுகிறது. ஆனால், மேற்கத்தியம் மரியாதை என்கிறது. உண்மையில் கை கட்டி பேசுவது சொல்புத்தி என வெளிப்படுத்தும் உடல்மொழி எனப்படுகிறது.



***


கைகளை மேசைமீது ஊன்றி வைப்பது

கைகளை மேசைமீது ஊன்றி அமர்ந்து இருப்பது நீங்கள் தன்னம்பிக்கை இன்றி அல்லது பதட்டத்துடன் இருப்பதை வெளிப்படுத்தும் உடல்மொழி. சிலர் இதை ஸ்டைல் என்ற பாணியில் எண்ணுகிறார்கள்கள்.





# பாப்பா முரசு



## சிறுவர் கதை




கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தை குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு ஆந்தை குஞ்சுகள் இருந்தன. தன் குஞ்சுகளை பேணி பராமரித்து வளர்த்தது தாய் ஆந்தை. குஞ்சுகள் வளரவளர அம்மாவிடம் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தன.

ஒரு நாள், "அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இரை தேடும் வேளையில் ஊரே உறங்கி கொண்டிருக்கிறது. இது ஏன்?" என்றது.

நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால் தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம்," என்றது தாய் ஆந்தை.

ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படி படைத்துவிட்டார்?" என்று கேட்டது இன்னொரு ஆந்தை குஞ்சு. கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரிதான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்," என்றது தாய் ஆந்தை.

"அப்படி என்ன தவறு செய்தார்?" என்று கேட்டன குஞ்சுகள்.

ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்த காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்து கொண்டு காட்டில் டாக்டராக இருந்த குயில் டாக்டரிடம் சென்றனர்.

குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. அதன் பிறகு டாக்டருக்கு பணம் கொடுக்க வேண்டும் இல்லையா? ஆனால், இவர்கள் இருவரும் கொடுக்கவில்லை. எனவே, குயில் டாக்டர் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டது.

இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் டாக்டர். ஏதுடா தொல்லையாப்போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து தின்பதுமாக இருந்திருக்கிறார்.

பகல் முழுவதும் மரப்பொந்துகளில் படுத்து நன்கு தூங்குவது... இரவில் எழுந்து வெளியே செல்வது... இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை குயில் டாக்டரால். அதனால் ஆத்திரமடைந்த குயில் டாக்டர், காக்காவை பிடித்து நன்கு திட்டியிருக்கிறது.


அந்த திருட்டு காக்கா கடுமையாக வேலை செய்தாவது டாக்டரின் பணத்தை கொடுத்திருக்க வேண்டியதுதானே... அப்படி கொடுக்கவில்லை. இதனால் கோபம்கொண்ட குயில் டாக்டர், இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார்தான் காவல் காக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.

அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டு சென்றுவிடுவர். அது குயிலின் முட்டை என்பது தெரியாமலே காக்கை இனம் வளர்த்துக்கொண்டு வருகிறது.

"நம்முடைய இனத்தார் பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண் தெரியாமல் போய்விட்டது. இதுதான் கதை," என்றது தாய் ஆந்தை. "அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் காலம் காலமாக பலரை பாதிப்பதை புரிந்துகொண்டோம். இனிமேல் நாங்கள் ஒருகாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவேமாட்டோம்," என்றனர். செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.

## வாரம் ஒரு திருக்குறள்

### உட்பகை




**"செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி."**

செப்பின் இணைப்பைப் போல புறத்தே பொருந்தி இருந்தாலும், உட்பகை உண்டான குடியில் உள்ளவர் அகத்தே பொருந்தி இருக்கமாட்டார்.

குறள் : 887

# சீனப்பெருஞ்சுவர்!



### காவல் கோபுரம்!

பெருஞ்சுவர்களில் ஆங்காங்கே காவல் கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒரு கோபுரத்திற்கும் இன்னொரு கோபுரத்திற்கும் இடையே உள்ள தூரம் ஓர் அம்பு பாயும் தூரம் என்கிறார்கள்! காவலர்கள் செல்லப் படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. பெருஞ்சுவர் தொடங்கும் "ஜியோங்" கணவாயில் யுவான் மன்னர் ஓர் அழகிய நுழைவுவாயில் கட்டியிருக்கிறார். அதன் வளைவில் கலைநிறைந்த சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த வாயில் இப்போதும் பராமரிக்கப்படுகின்றது.

### எவ்வளவு நீளம்?

உலக அதிசயம் எனக் கருதப்படும் இந்தப் பெருஞ்சுவரின் நீளம் 6000 கி.மீ. முதல் 7000 கி.மீ வரை இருக்கலாம் எனக் கருதிக்கொண்டிருந்தார்கள். 1980இல் சுவரை அளந்தார்கள். மலைகள் இடிபாடுகள் காரணமாக சரியாக அளக்க முடியவில்லை. 6350 கி.மீ. நீளம் என்று உத்தேசமாகச் சொன்னார்கள்.

2006இல் சுவரை அளக்க மீண்டும் முயற்சி நடந்தது. இதற்கு நில அளவைக்காரர்களை நியமிக்கும்படி பீஜிங் அரசு சுற்றறிக்கை அனுப்பியது. மாநிலவாரியாக அவர்கள் அளந்து கூட்டியபோது 6400 கி.மீ. வந்தது. அதன்பேரில் பெருஞ்சுவரின் நீளம் 6400 கி.மீ. என்று முடிவு செய்யப்பட்டது. இது சென்னையிலிருந்து டெல்லிக்கு நேராகச் சென்றுவிட்டுத் திரும்பும் தூரம் ஆகும்.

தற்போது கிடைத்துள்ள ஆதாரபூர்வமான தகவலின்படி சீனப்பெருஞ்சுவற்றின் நீளம் 8,851.8 கி.மீ (5,500.3மைல்) என்று தெரிய வந்துள்ளது!

அதுமட்டுமல்ல! நிலவிலிருந்துகூட சீனப் பெருஞ்சுவர் தெரிவதாக ஒரு வதந்தி உலவியது! ஆனால் முழுச் சுவரும் சுமார் 160கி.மீ தூரத்திலிருந்து தெரிய ஆரம்பித்துப் பின் 320 கி.மீ. (சுமார் 99 கி.மீ முதல் 199 கி.மீ வரை) வரை தெரிந்து பின் மனிதப் பார்வைக்கு மறைந்துவிடும் என்பதே ஆதாரபூர்வமான உண்மை!

### பத்தாயிரம் சுவர்!

மனிதன் கட்டிய மிகப்பெரிய கட்டடம் சீனப்பெருஞ்சுவர்தான்! அதைப் பத்தாயிரம் சுவர் என்று சீனர்கள் சொல்வார்கள்! பெரியது எதையும் ஆயிரம், இரண்டாயிரம் என்று எண்களைச் சேர்த்துக் கூறுவது சீனர்களின் வழக்கம்! பெரிதினும் பெரிதான பெருஞ்சுவரை "பத்தாயிரம் சுவர்" என்று அவர்கள் பெருமிதத்துடன் அழைக்கின்றனர்!

இந்த அதிசயச் சுவரை 1987ஆம் ஆண்டு உலகக் கலைச் செல்வங்களில் ஒன்றாக உலக நாடுகள் சபை (யுனெஸ்கோ) அறிவித்தது!

நாம் வாழும் இந்த பூமியில் மனித ஆற்றலின் அதிசயிக்கத்தக்க சாதனை இது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை! **(முற்றும்)**

## தெரியுமா?

*தற்போது வாழும் முதுகெலும்புடைய உயிரினங்களில் மிகவும் பழமையான உயிரினம் ஆமை.

*வயிற்றில் பல் கொண்ட பறவையின் பெயர் கிவி.

*கறுப்பு விதவை என்ற அடைமொழியால் குறிக்கப்படுவது சிலந்தி. இது 8 கால்களைக் கொண்டது.

*விலங்கியல் அறிஞர்கள் தூக்கணாங்குருவியை கட்டடக் கலைஞன் என்று அழைக்கிறார்கள்.

*முதலையால் சுமார் 6 மணிநேரம் வரை மூச்சுத் திணறாமல் தண்ணீருக்குள் இருக்க முடியும்.

*கிராம்பு என்பது காயோ, கனியோ அல்ல, ஒரு மரத்தின் மொட்டு.

*எறும்பு 100 நாட்கள் வரைகூட தண்ணீரை மட்டுமே குடித்து உயிர் வாழும். தலை துண்டிக்கப்பட்டாலும் 20 நாட்கள் உயிருடன் இருக்கும்.

*புழு, பூச்சிகளிலேயே மிக அதிகமான கால்களைக் கொண்டது மண்புழுதான். இதற்கு, சுமார் 1,200 கால்கள் உள்ளன.

*பறவை இனங்களிலேயே பென்குயின் ஒன்றுதான் நீந்துவதற்குத் தன் சிறகுகளைப் பயன்படுத்துகிறது.

*கடல் உயிரினங்களில் மோப்பசக்தி கொண்டது சுறா மீன்.

**தொகுப்பு : கலவை பா. வரதன்**



## நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்

இந்திய ரூபாய் நோட்டுகள் நாசிக் நகரத்தில் அச்சிடப்படுகிறது என்பது தெரியும். இந்திய நாணயங்கள் எங்கே தயாரிக்கப்படுகின்றன என்பது தெரியுமா?

டெல்லி, மும்பாய், கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் தயாரிக்கப்படுகின்றன. எந்தக் காசு எந்த நகரத்தில் தயாரிக்கப்பட்டது என்பதற்கும் ஒரு குறி இடப்படுகிறது. நாணயங்களின் அடியில் தயாரிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டிருக்கும். அத்துடன் ஒரு குறியும் இடம் பெற்றிருக்கும். அந்தக் குறியை வைத்து அந்த நாணயம் எந்த ஊரில் தயாரிக்கப்பட்டது என்பதை அறியமுடியும்.

நாணயத்தில் உள்ள ஆண்டுக்குக் கீழே ஒரு புள்ளி இருந்தால் அது டெல்லியிலும், டைமண்ட் வடிவம் இருந்தால் அது மும்பாயிலும், நட்சத்திர வடிவம் இருந்தால் அது ஹைதராபாத்திலும், எந்தக் குறியீடும் இல்லாமல் இருந்தால் அது கொல்கத்தாவிலும் தயாரிக்கப்பட்டது ஆகும்.

## எண்ணிப்பார் ஏழு வேறுபாடு



# வாழ்நாள் சாதனையாளர் செங்கை ஆழியான்

ஈழத்து இலக்கியத்தில் தனக்கென ஓரிடம் பிடித்தவர் கலாநிதி.க.குணராசா என்ற இயற்பெயரையுடைய செங்கை ஆழியான். 60களில் தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்த செங்கை ஆழியானின் பேனா கடந்த 28 பெப்ரவரி ஓய்ந்துவிட்டது. மண்ணுலம் மிகப்பெரிய ஒரு படைப்பாளியின் மரணம் கண்டு ஏங்கிநின்று எதிரொலி தரமறுக்கின்றது.

செங்கை ஆழியான் என்ற புனை பெயரால் பரவலாக அறியப்படும் க.குணராசா 1941 ஆம் ஜனனித்தார். மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க.குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

நீலவண்ணன் என்றபெயரிலும் ஆக்கங்கள் வரைந்தார்.

இவர் கந்தையா அன்னம்மா தம்பதிகளின் எட்டாவது குழந்தையாக வண்ணார்பண்ணையில் பிறந்தார். யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்றார்.

இவர் எழுதிய வாடைக் காற்று புதினம் திரைப்படமாக தயாரிக்கப்பட்டு, தரமான படைப்பு எனப் பேசப்பட்டது. இவர் பல நூல்களை எழுதி வெளியிட்டார். இதில் சிறுகதைகள் உள்ளிட்ட வரலாற்று ஆய்வு நூல்களும் அடங்குகின்றன. இந்த நிலையில், ஈழநாடு செய்தித்தாளில் அவரது தொடர் கதையான கிடுகுவேலி வாசகர்கள் மத்தியில் பிரபல்யமானது.

"Proligic Writers" என ஆங்கிலத்தில் ஒரு தொடருண்டு. "எழுதிக்குவிப்போர்" என தமிழில் அர்த்தம் கொள்ளலாம். ஈழத்து எழுத்தாளர்களில் இவருக்கு இது பொருந்துவதுபோல் வேறு யாருக்கும் பொருந்தாது. இவரைப் பற்றி எழுதுவதென்றால் எத்தனையோ நாட்களும் பக்கங்களும் வேண்டும்.

இதுவரை கிட்டத்தட்ட 150-க்கு மேற்பட்ட சிறுகதைகளும் 40-க்கு மேற்பட்ட நாவல்களும் எழுதியிருக்கிறார். இவரது படைப்புகள் இலங்கையிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் மட்டுமல்ல, தமிழகத்தின் பிரபலமான ஆனந்தவிகடன், குமுதம், கலைமகள், கணையாழி, சுபமங்களா போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்திருக்கின்றது. இவரது "ஷெல்லும் எழு இஞ்சிச் சன்னங்களும்" என்ற சிறுகதையை மறைந்த எழுத்தாளர் சுஜாதா தினக்குரல் பேட்டியில் மிகவும் சிறந்த கதை. இப்படியான கதைகளை நம்மவர்களால் எழுதமுடியாது எனச் சொல்லியிருந்தார் குறிப்பாக கதையின் முடிவு.

நாவல்களில் இவர் சரித்திர நாவல், சமூக நாவல், நகைச்சுவை நாவல், துப்பறியும் நாவல் என சகல பிரிவுகளிலும் தன் தனித்துவ எழுத்தால் பலரைக் கவர்ந்தவர்.

நான் முதல் முதல் வாசித்த நாவல் இவரது நகைச்சுவை நாவலான "ஆச்சி பயணம் போகின்றாள்". யாழ்ப்பாணத்தில் கிணற்றுத்தவளையாக இருந்த பொன்னம்மா ஆச்சி கதிர்காமம் முருகன் கோவிலுக்கு கண்டி ஊடகச் செல்லும் பயணக் கதையே அது. முக்கியமான மூன்றே மூன்று பாத்திரங்களை வைத்துக்கொண்டு இவர் ஆச்சி சென்ற பாதையூடாக வாசகர்களையும் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்றார். இந்த கதைக்கு ஓவியர் "சௌ" வரைந்த படங்கள் இன்னும் மெருகூட்டின என்றால் மிகையில்லை.

அடுத்து யாழ்ப்பாணத்தவர்களின் பட்டம் விடும் கலையை வைத்து இவர் எழுதிய இன்னொரு நாவல் "முற்றத்து ஒற்றைப் பனை". கொக்கர் மாரிமுத்தர் அம்மான், பொன்னு ஆச்சி, சூலாயுதம் என்கின்ற வேலாயுதம், அலம்பல் காசியர் என கதையில் வரும் பாத்திரங்களை நிஜவாழ்க்கையிலும் பலர் கண்டிருப்பார்கள். இன்னொரு நகைச்சுவை நாவலான "கொத்தியின் காதல்" ஒரு பேயின் காதல் கதையைச் சொல்கின்றது. "ஆச்சி பயணம் போகின்றாள்", "முற்றத்து ஒற்றைப் பனை" போல "கொத்தியின் காதல்" ஏனோ அதிகம் பேசப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் மழை நேரம் மட்டும் ஓடுகின்ற ஆறான வழுக்கியாறை கதைக்களமாக வைத்து இவர் எழுதிய "நடந்தாய் வாழி வழுக்கியாறு" என்ற குறுநாவல் நகைச்சுவையாக பல சமூக அவலங்களைக் காட்டுகின்றது.



இவரின் சமூக நாவல்கள் பெரும்பாலும் சாதிக்கொடுமைகளுக்கு சமூக அடக்குமுறைகளுக்கும் எதிரானதாகவே அமைந்துள்ளது. "வாடைக்காற்று" மீனவர் சமுதாயத்தின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த நாவலாகும். இதுபின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. கதையின் களம் நெடுந்தீவு என்ற யாழ்ப்பாணத்தின் ஒரு தீவுக் கிராமம் ஆகும். கிடுகுவேலி, பிரளயம் போன்றவையும் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான கதைகளே.

இவரின் முக்கியமான வரலாற்றுப் படைப்பாக "குவேனி" என்ற நாவலைச் சொல்லமுடியும். இலங்கையின் மூத்த தலைவியான குவேனி பின்னர் இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட விஜயனை மணம்முடித்து உருவாகிய இனமே சிங்கள இனம் என்பதை அந்தக் கதையில் வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறார். அடிப்படையில் இவர் ஒரு புவியலாளன் என்பதால் பெரும்பாலும் இவரது கதைகளின் களங்கள் பலராலும் உணரக்கூடிய வகையில் விபரிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர். குவேனியில் இதனை நன்கு உணரமுடியும்.

யானை என்ற இவரது நாவல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஒரு காட்டை கண்ணுக்கு முன்னே நிறுத்துகின்ற கதை அது, காட்டாறும் காடுசார்ந்த கதையே ஆகும்.


கங்கைக்கரையோரம் என்ற நாவலில் பல்கலைக்கழக வாழ்க்கையை அழகாகச் சொல்லியிருக்கிறார். அங்கே ஏற்படும் காதல்கள், ராகிங் பிரச்சினைகள் என சகலதையும் பேராதனைப் பல்கலைக் கழகச் சூழலில் விபரித்திருக்கிறார். இந்த நாவலை வாசிக்கும்போது பேராதனை தெரிந்தவர்கள் அந்தக் கட்டடங்கள், காதலர்கள் சந்திக்கும் பூங்கா, சிறிய குளம், குறிஞ்சிக் குமரன் ஆலயம் என சகலதும் நினைவில் வரும்.

சமகால விடயங்களை வைத்து எழுதிய கொழும்பு லொட்ஜ், மரணங்கள் மலிந்த பூமி, போரே நீ போ, வானும் கனல் சொரியும், ஒரு மைய வட்டங்கள், தீம் தரிகிட தித்தோம், ஓ அந்த அழகிய பழைய உலகம், இந்த நாடு உருப்படாது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கடல்கோட்டை, நந்திக்கடல், கந்தவேள் கோட்டம். போன்ற நாவல்கள் வரலாற்று நாவல்களாகும். அதேநேரம் இவர் 76 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை மையப்படுத்தி எழுதிய 24 மணிநேரம், யாழ்ப்பாணம் கோட்டையின் வரலாற்றை எழுதிய களம் பல கண்ட கோட்டை போன்ற வரலாற்று ஆவணங்களாகவே பாதுகாக்கப்படவேண்டியவை.

இவற்றைவிட இவர் பல பாடனூல்களும் எழுதியுள்ளார். குறிப்பாக சமூகக்கல்வி, புவியியல் நூல்கள். இவரது எழுத்து வெற்றியின் இரகசியம் வாசிக்கும் வாசகனை கதை நடக்கும் களத்துக்கும் காலத்திற்கும் கொண்டு செல்வதுதான். இதேபோல் எழுதியவர் மறைந்த எழுத்தாளர் டானியல். இன்றும் ஈழத்தின் எழுத்தாளர்களில் முடிசூடா மன்னனாகத் திகழ்கின்றார் செங்கை ஆழியான்.

இந்தப் பெரிய பொக்கிசப் படைப்பாளி இயற்கை எய்திய செய்திகேட்டு இன்று படைப்புலகம் மாத்திரமல்ல வாசிப்பு மயப்பட்ட ரசனை உலகமே இன்று ஏங்கி நிற்கின்றது.



## விந்தையான மரங்கொத்திப் பறவை

மரம்கொத்திப் பறவை ஒரு வினாடிக்கு 22 முறை மரத்தைக் கொத்துகிறதாம். இதில் கூடுதல் வியப்பான செய்தி என்னவென்றால் அது மரத்தோடு மோதுகின்ற வேகம் 1200 புவி ஈர்ப்பு அலகு விசை ஆகும். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் மனிதன் தரையில் விழுகின்றபோது அவனுடைய தலை கீழே தரையில் மோதுகின்ற விசையின் வேகம் 80 புவிஈர்ப்பு அலகு விசை. அதற்கே நம் தலையில் ஏற்படுகின்ற வலியால் நாம் எந்த அளவுக்கு துடித்துப் போகிறோம்! இந்தப் பறவைக்கு இப்படி ஒரு ஆற்றல் எப்படி கிடைத்தது? அறிவியலாளர்கள் ஆய்வுசெய்து பார்த்ததில் அதன் மண்டையோட்டினுடைய அமைப்பு நான்கு அடுக்குகளாக உள்ளன. முதல் இரண்டு அடுக்கு நெகிழ்வுத் தன்மை கொண்டதாக உள்ளது. மூன்றாவது அடுக்கு பஞ்சு போன்று மிகவும் மென்மையாக இருக்கிறது. நான்காவது அடுக்கில் மூளைக்கு செல்லும் வழியில் நீர் தேங்குவது போன்ற பகுதி உள்ளது. மரங்கொத்தியின் உடலமைப்பு அதன் தேவைக்கேற்ப உருமாற்றம் பெற்றிருக்கின்றது.



# மருத்துவம்

# சிகரெட்டால் வரும் நோய்கள்



அமெரிக்க புற்றுநோய்த் தடுப்பு அமைப்பின் உதவியுடன் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில், புகையிலையால் இறப்பவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம் என்றும் தெரியவந்துள்ளது. அமெரிக்க துணை கண்டத்தில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் புகைப் பழக்கத்தாலும், அதனால் ஏற்படும் நோய்களாலும்

சுமார் 4 லட்சத்து 80 ஆயிரம் பேர் பலியாகி இருப்பது தெரிய வந்தது.

இங்கிலாந்தில் இந்த எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம். இதுதவிர உலக ஐக்கிய சுகாதார அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் புகையிலையால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் அறுபது இலட்சம் பேர் பலியாவதாக கண்டறியப்பட்டுள்ளது. புகை பிடிப்பவர்கள் மட்டும் அல்லாமல், அந்த புகையை சுவாசிப்பவர்கள் எண்ணிக்கையும் இதில் அடங்கும்.

ஆனால் வாஷிங்டன் பல்கலைக் கழக அறிக்கையின்படி, இது மிகவும் குறைந்த அளவிலான மதிப்பீடு ஆகும். இப்போது புகையிலையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள மேலும் ஐந்து நோய்களை கணக்கில்கொண்டு பார்த்தால் இந்த எண்ணிக்கை பல மடங்கு உயர வாய்ப்பு உள்ளது என்கிறார்கள். இந்த ஆய்வை நடத்தியவர்களில் ஒருவரான மருத்துவர் எரிக் ஜேக்கப்ஸ் கூறுகையில், “இந்தக் கணக்கின்படி ஒவ்வொரு ஆண்டும் புகையிலையால் இறப்பவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு சுமார் அறுபது ஆயிரம் அதிகமாகும்” என்கிறார்.

இதே ஆய்வின் அடிப்படையில் உலக அளவிலான எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், சுமார் 7 இலட்சத்து 80 ஆயிரம் பேர் கூடுதலாக புகைப்பிடிக்கும் பழக்கத்தால் மரணம் அடைகின்றனர். இது மிகவும் ஆபத்தான முன்னேற்றம். இங்கிலாந்து மருத்துவ ஆய்வு இதழில் வெளியிடப்பட்ட, இந்த ஆய்வில் பங்கெடுத்தவர்கள் அனைவரும் சுமார் 55 வயதுக்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண்கள் ஆவார்கள். 10 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்ட ஆய்வில், ஆய்வு நடக்கும்போதே 1 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிக மானோர் மரணம் அடைந்தார்கள்.

புகைபிடிக்கும் பழக்கம் இருந்தவர்களின் இறப்பு விகிதம் மற்றவர்களைவிட சுமார் 3 மடங்கு அதிகம். இதுதவிர 17 சதவீதம் பேர் இதுவரை புகையிலையுடன் அதிகார பூர்வமாக இணைக்கப்படாத மேலும் ஐந்து நோய்களால் இறந்தது கண்டறியப்பட்டது. இந்த நோய்கள், கணக்கெடுப்பின்போது சேர்க்கப்பட வில்லை. ஆராய்ச்சியாளர்கள் தனிக்கவனம் எடுத்து ஆராய்ச்சி நடத்தியதில், புகைப்பழக்கத்தால் ரத்த நாள சிதைவு, குடல் புண், இருதய நோய்கள், தொற்றுநோய்கள் மற்றும் சுவாசம் சம்பந்தமான பல நோய்கள் வரும் வாய்ப்புகளை இருமடங்கு பெருக்குவதாக கூறி உள்ளனர்.

இந்த பழக்கம் இருப்பவர்கள், குடலுக்கு சரியாக இரத்தம் செல்லாததால் ஏற்படும் ஒருவிதமான அரிய நோயால் பாதிக்கப்பட்டு மரணம் அடையவாய்ப்புகள் 6 மடங்கு அதிகம் என்பதையும் கண்டறிந்தனர். இதுவரை புகையிலையால் ஏற்படும் நோய்கள் என்று நிருபிக்கப்படாத கர்ப்பப்பை மற்றும் மார்பக புற்றுநோய் ஆகியவையும் புகையால் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# டெங்கு காய்ச்சல்

பெயர் : டெங்கு
வரலாறு: சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு
வைரஸ்: ப்(க)லேவி
காலப்பகுதி : ஜுன் - ஜுலை, நவம்பர் - டிசம்பர்
குடும்பம் : ஆபோ வைரஸ்
வயது : எவ்வயதினருக்கும்
காவி : ஈடிஸ் ஈஜிப்டை, ஈடி.எஸ்.எல்ப்போ பிகட்டஸ் - நுளம்புகள்

காவியின் தோற்றம்: ஈடிஸ் ஈஜிப்டை

இதன் உடலில் மற்றும் கால் பகுதிகளில் வெள்ளைப்புள்ளி, கோடுகள் டிஸ் எல்ப்போ பிகட்டஸ் இதன் தோள் பகுதியில் வெள்ளை நிறத்திலான அரிவாள் போன்ற இருகோடுகள்.

காவியின் நேரம்: காலை 7 மணி முதல் 10 மணி
பிற்பகல் 3 மணி முதல் 5 மணி

நோய் அறிகுறி: *மூட்டு மற்றும் தசைகளில் தொடராக வலி
*அதிக காய்ச்சல்
*தொண்டை அடைப்பு
*கண்களின் கீழ்ப்பாகம் வீங்கி வலி
*கடுந் தலைவலி
*வாந்தி
*உடம்பில் சிவப்புக் கொப்புளங்கள்

அறிகுறிக்கான காலம் :5 அல்லது 6 நாட்களின் பின் 5 - 15 நாட்கள் சாதாரண காய்ச்சல்.

தீவிரமான நிலை: * மூக்கு, கண், பல், முரசுகளிலிருந்து இரத்தம் வெளியேறல்.
*இரத்த வாந்தி
*மலத்துடன் இரத்தம்
*சிறுநீருடன் இரத்தம்
*உடல் வெளிறல்
* நாடித்துடிப்பு அதிகரித்தல்
* உடல் நீலநிறமாதல்

சிகிச்சை:* நீர்ச்சத்துடன் கூடிய எலக்ட்ரோலைட் தெரபி
* நல்ல ஓய்வு
* தண்ணீர்கூட அருந்தலாம்
* அவசரத்திற்கு பரசிட்டமோல்
* தகுந்த வைத்தியரின் ஆலோசனை

நுளம்பைத் தடுப்பதற்கான வழி : * தேங்கும் பொருட்களான டயர்கள், வெற்றுப்போத்தல், சிரட்டை, வெற்றுக்கோப்பை, வெற்று இளநீர் போன்றவற்றை அகற்றல்.
* நீர்த்தொட்டி, பூச்சாடிகளில் இருக்கும் நீரை ஒதுக்கல்.

நோயாளிக்கு : * நல்ல ஓய்வு
* உடனே பரசிட்டமோல் எடுத்தல்
* அஸ்பிரின் மருந்துகளை தவிர்த்தல்
* அதிகளவு நீராகாரம் எடுத்தல்
* தீவிரமானால் ஜீவனி எடுக்கலாம்

தடுப்பதற்கான வழி : * வீடுகளில் மாலை நேரத்தில் ஜன்னல்களைமூடிவிடல் * வீடுகளைச் சுற்றியுள்ள காண்களில் நீர்தேங்கிவிடாது வழிந்தோடச் செய்தல்.

தொகுப்பு : தவா

# எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்

11. மஞ்சளை அரைத்து அத்துடன் சிறிது பன்னீரைக் கலந்து பூசிக்கொண்டு குளித்தால் தேவையில்லாத இடங்களில் இருக்கும் உரோமங்கள் உதிர்ந்துவிடும்.

12. வெள்ளை வெங்காயத்தை நெயில் வறுத்து, பனாங்கற்கண்டு சேர்த்து காலையிலும் மாலையிலும் ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டால் வயிற்றின் சுற்றளவு குறையும்.

13. நெருப்பு அல்லது சுடுநீர் பட்ட இடத்தில பெருங்காயத்தை அரைத்து பூசினால் எரிச்சல் குறையும். கொப்பளமும் ஏற்படாது.

14. குழந்தைகளுக்கு கஞ்சி காய்ச்சும் போது சிறிது சோயா பீன்ஸ் மாவைக் கூட்டிக்கொள்ளுங்கள். இதனால் அதிக அளவு புரதச்சத்து கிடைக்கும்.

15. பல் ஈற்றில் புண் கண்டால் படிகாரத்தையும், கடுக்காயையும் பொடி செய்து நீரில் கரைத்து வாய் கொப்பளித்து வந்தால் புண் ஆறும்.

16. உறங்கச் செல்லுமுன் ஒரு டம்ளர் வெந்நீர், அரை மூடி எலுமிச்சம் பழத்தைவிட்டு இரண்டு தேக்கரண்டி தேன்விட்டுக் கலக்கிக் குடித்தால் நல்ல உறக்கம்வரும்.

17. கண்டங்கத்திரி என்ற கத்தரிக்காய் உள்ள விதையுடன் சிறிது மஞ்சள் வைத்து அரைத்து தடவினால் உடலில் ஏற்படும் வீக்கம் குறையும்.

18. செம்பருத்தி பூக்களை காலையில் இரண்டு மூன்று தினசரி உட்கொண்டால் மலச்சிக்கல் விலகும்.

19. முருங்கைப் பிஞ்சு உடல் உஷ்ணத்தைத் தணிக்கும். தாதுவை விருத்தி பண்ணும். லேசான காய்ச்சல் தணியும். நாவில் ருசி அறியும் உணர்வை உண்டு பண்ணும்.

20. முருங்கை இலைச்சாற்றைப் பிழிந்து சமஅளவு தேன் கலந்து சாப்பிட்டால் நீர்க்கோவை நீங்கும். இதைக் குழந்தைகளும் பெரியவர்களும் உட்கொள்ளலாம்.

21. பூண்டு பற்களை அம்மியில் வைத்து அரைத்து எலுமிச்சம் பழச் சாற்றில் கலந்து தலைக்குத் தேய்த்து ஊறவைத்து குளித்தால் பேன் ஒழியும்.

22. உணவில் அடிக்கடி கொள்ளுப் பயிரை சேர்த்துக்கொண்டால் உடல் பருமன் குறையும்.

23. நான்கு நாட்கள் தொடர்ந்து பப்பாளிப் பழத்தை வாயில்போட்டு மென்று சாப்பிட்டுவந்தால் பல்வலி, பல்லில் இரத்தம் வடிதல், பல் ஈறுகளில் வரும் நோய் அத்தனையும் குணமாகும்.

24. காலையில் சாதம் வடித்த கஞ்சியை எடுத்து ஆறவைத்து ஒரு கரண்டி நெய்யில் கொஞ்சம் சீரகம் கலந்து குடித்தால் இடுப்பு வலியும், வெள்ளைபடுதலும் நிற்கும்.

25. சுரைக்காய் மூளை பலம் பெறவும், மனக்கவலையை போக்கவும், சிறுநீர் கோளாறுகள் நீங்கவும், உடலில் உள்ள கெட்ட நீரை போக்கி உடல் இளைக்கவும் செய்யும்.

26. பசி உண்டாக இஞ்சி, சீரகம், மிளகு, திப்பிலி, சதகுப்பை, கிராம்பு ஆகியவைகளை இடித்து துளசி சாறு விட்டு அரைத்து மாத்திரையாக்கி சாப்பிட பசி உண்டாகும். கீரிப்பூச்சியை வெளிப்படுத்தும்.




## விளக்கு மட்டுமா சிவப்பு?

ஆனால் கவரிமான் ஜாதியாகவே வாழ்ந்துவிட்ட சாவித்திரி அக்காளைப் போல் நாங்கள் தற்கொலைசெய்து கொள்ளவில்லை. முதலில் கலசம் விழுந்தது. பிறகு கோபுரம் விழுந்தது. கட்டடத்துக்குச் செங்கல்களும் ஒவ்வொன்றாக விழுந்தன.

ஆயினும் நாங்கள் இருப்பது கோவில்தான் என்ற எண்ணம் எங்களைவிட்டு நீங்கவில்லை. எங்கள் குடிப்பிறப்பு எங்களுக்கு அந்தத் தைரியத்தைக் கொடுத்தது.

ஒரு விதவை, ஒரு கன்னிப் பெண், மனைவியை இழந்த ஒருவர், இரண்டு பிரம்மச்சாரிகள், நகர நாகரிகத்தில் நாதியற்றுக் கிடந்த இந்தக் குடும்பத்தை யார் ஏறெடுத்துப் பார்க்கப் போகிறார்கள்? இருப்பினும் நம்பிக்கையிலேயே எங்கள் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அவள்தான் தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டாளே. அவளை நிம்மதியாகவாவது எரிக்கவிட்டார்களா? உயிரோடு இருப்பவர்களை வாட்டி எடுக்கும் சட்டம், செத்துப்போனவர்களுக்காக எவ்வளவு பச்சாதாபப்படுகிறது.

செய்தி தெரிந்த அரை மணி நேரத்தில் பொலிசார் எங்கள் வீட்டில் கூடிவிட்டார்கள். 'சடலத்தை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்த வேண்டும்' என்றார்கள்.

காரணம், 'அது கொலையா அல்லது தற்கொலையா?' என்று கண்டுபிடிக்க வேண்டுமாம்.

'தற்கொலைதான்' என்று நிச்சயமாகத் தெரிந்தால்கூட சட்டம் தன் சடங்குகளைச் செய்தாக வேண்டுமாம்.

நாங்கள் பிறந்தபோது, 'இது உண்மையான பிரசவம்தானா' என்று கண்டுபிடிக்க அந்தச் சட்டம் வரவில்லை. நாங்கள் வளர்ந்தபோது, ஆண்கள் எல்லாம் ஆண்கள்தானா, பெண்கள் எல்லாம் பெண்கள்தானா, என்று கண்டுகொள்ள அந்தச் சட்டம் வரவில்லை.


மணமுடிக்க முடியாமல் தவித்த போது, எங்களுக்காக மாப்பிள்ளைப் பார்க்க அந்தச் சட்டம் வரவில்லை. ஒருத்தி விதவையானபோது, அவளது எதிர்காலத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள அந்தச் சட்டம் துணிய வில்லை. ஒருத்தி மடக்கிக்கொண்டு செல்லப்பட்டபோது அவளைக் காப்பாற்ற அந்தச் சட்டத்தில் இடமில்லை.

அதுமட்டுமல்ல, அவளைக் கெடுப்பதற்குத் துணைபோகவும் சில காவலர்களை நியமித்திருந்தது.

அவள் தற்கொலைசெய்து கொண்டவுடனே, சட்டம் சத்தியப் பிரமாணம் செய்தபடி எங்கள் வீட்டுக்கு வந்துசேர்ந்தது. அந்தச் சடலத்தை அறுத்து, குடலை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்புவதில் அது மிகவும் அக்கறை காட்டியது.

தூக்குத் தண்டனைக் கைதி கூட, தானாகச் செத்துவிடக் கூடாதாமே, உங்கள் சட்டத்தின்படி? சர்க்கார் சொல்லுகிற போதுதான் சாகவேண்டுமாமே?

நல்லது. எங்கள் வாழ்க்கையின் எந்தப் பாகத்திற்கும் பொறுப்பேற்றுக் கொள்ளாத சட்டம். செத்த பின்பு கத்தியை வைக்கவாவது ஓடி வந்தது குறித்து அதற்கு நன்றி சொல்லவேண்டியதுதான். அறுத்து முடித்துப் பரிசோதனை செய்யப்பட்ட



# சமூகத்தை எப்படிச் சந்திக்கவேண்டுமோ, அப்படிச் சந்திப்பது ஒன்றே வாழ்வதற்கு வழி

சடலம் மண்டும் எங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டபோது, லேசாக நாற்றமடிக்கத் துவங்கியிருந்தது. உடனடியாக அதற்கான சடங்குகளைச் செய்து உதவி ஒத்தாசையில்லாமல், கூலிக்கு ஆள் பிடித்துக்கொண்டு போய்க் கொளுத்தினோம்.

ஆனால் வேடிக்கை பார்க்க நிறையப்பேர் வந்திருந்தார்கள். கிராமத்தில் சொந்தக்காரர்கள் வேடிக்கை பார்த்தார்கள். இங்கே அந்நியர்கள் வேடிக்கை பார்த்தார்கள். அவ்வளவுதான்.

பாவம், என் அத்தான்! எந்த ஜென்மத்தில் செய்த வினையோ நாங்கள் அனுபவித்தோம். ஆனால், எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ எங்களோடு துன்பத்தைப் பகிர்ந்துகொள்ள அவர் கிடைத்திருந்தார்.

சாவித்திரி அக்காவின் மரணத்திற்குப் பிறகு எங்கள் குடும்பத்தோடு உலக பந்தம் அறுபட்டுப் போய்விடுமோ என அவர் பயந்திருந்தார். அவரது பயம் நியாயம்தானே? இனி எந்தக் காரணத்தைக் கொண்டு அவர் எங்களோடு தங்கமுடியும்?

தன்நிலை பற்றி அவர் எங்களிடம் பேசவில்லை. கேள்வி கேட்கவில்லை. நானேதான் அதை ஆரம்பித்தேன். எங்கள் குடும்பத்தில் இப்போது நல்லது கெட்டதை முடிவு செய்யவேண்டிய பொறுப்பில் நான்தான் இருந்தேன். திக்குத்திசை தெரியாமல் இருந்த சுலோசனா அக்காவும், திருப்பதியும், கண்ணனும் ஒரு யோசனைகூடச் சொல்லக் கூடியநிலையில் இல்லை.

அவர்கள்மீது குற்றம் இல்லை. அவர்கள் என்ன, மந்திரியாவதற்காக பயிற்சியளிக்கப்பட்டார்கள்? இல்லை, அவர்கள் இராஜதந்திரம் தெரிந்தவர்களா? நாவன்மை மிக்க மேடைப் பேச்சாளர்களா?

தாய் - தகப்பன் செய்த பாவத்திற்கு மேலும் மூன்று அடையாளச் சின்னங்கள், அவ்வளவுதான், நான் அத்தானிடம் சொன்னேன்.

"எதற்கும் நீங்கள் கவலைப் படாதீர்கள், இந்தக் குடும்பத்தில் நீங்கள் பிறக்காத பிள்ளை. எங்களுடனேயே இருங்கள். வாழ்ந்தால் எல்லோரும் வாழ்வோம். மடிந்தால் அனைவரும் மடிவோம்."

வாழ்வதற்குத்தான் இந்த நாட்டில் வழியில்லையே தவிர மரணத்துக்குச் சரணம்பாட மருந்துகளா இல்லை? வந்தால் கடைசியாக என்ன வரும்? சாவுதானே? அந்தத் துணிச்சலில் என் அறிவு செம்மையாக வேலைசெய்தது.

அன்று முழுவதும் அவர் அழுது கொண்டே படுத்திருந்தார். சமையல் ஏது, சாப்பாடு எது? மூலைக்கு மூலை ஒரு படுக்கை.

நான் டிபன் காரியரை எடுத்துக் கொண்டுபோய், பக்கத்து ஓட்டலில் ஒரு சில பலகாரங்கள் வாங்கிவந்தேன். ஒவ்வொன்றாக எழுப்பி ஊட்டினேன்.

எங்களுக்கு உணவுக்கும், உறக்கத்திற்கும் இடையே இறைவன் போட்டுவிட்ட குறுக்குக்கோட்டில் சாப்பாடா செல்லும்?

கடிகாரம் நேரத்தைக் காட்டியதால், வயிறு பசியைக் காட்டாவிட்டாலும், 'வாழ்ந்தாக வேண்டுமே' என்பதற் காகச் சாப்பிட வேண்டிவந்தது.

"புண்ணியவாதிகள் போக வேண்டியவர்கள் எல்லாம் போய்விட்டார்கள். இனி அழுது என்ன செய்வது? எல்லோரும் எழுந்து குளியுங்கள்" என்றேன்.

வேதனையின் முடிவில் விரக்தி, விரக்தியைத் தொடர்ந்து ஒரு ஆறுதல். எல்லோரும் ஒவ்வொருவராகக் குளித்தார்கள்.

தண்ணீர் உடம்பைத்தானே கழுவுகிறது? ஆத்மாவில் படிந்துள்ள அவலத்தை அது எப்படிக் கழுவப் போகிறது?

ஆனால் ஒன்று - அன்றே என்னுடைய சுயதரிசனம் ஆரம்பமாகிவிட்டது. 'சமூகத்தை எப்படிச் சந்திக்கவேண்டுமோ, அப்படிச் சந்திப்பது ஒன்றே வாழ்வதற்கு வழி' என்று நான் முடிவு கட்டிவிட்டேன்.

'அப்படியென்றால், அப்பொழுதே வழுக்கி விழத் தயாராகிவிட்டாயா?' என்று கேட்கிறீர்களா? இல்லை துடுக்காக நடந்துகொள்வது என்று முடிவு கட்டினேன்.

அடக்கம்தானே எங்களை அழித்துவிட்டது. 'பண்பாடு பண்பாடு' என்று பார்த்துத்தானே பெண்பாடு பெரும்பாடு ஆகிவிட்டது? 'கொஞ்சம் தலைதூக்கி நடக்கத்துவங்கினால், மற்றவர்கள் பயப்படுவார்கள்' என்று நினைத்தேன்.

எங்கள் குடும்பத்தில் நானே ஒரு ஆண்பிள்ளையாக மாறினேன்.

அன்று மாலை ஆறு மணிக்கு, "எல்லோரும் கடற்கரைக்குப் போவோம். வாருங்கள்" என்று அனைவரையும் அழைத்துக்கொண்டு, இரண்டு வாடகை, கார்களில் ஏறினோம்.

நான் ஏதும் நினைக்கவில்லை. ஆனால் அத்தான் ஏறி உட்கார்ந்ததும் நானும் அவர் அருகில் உட்கார்ந்து விட்டேன்.

அதற்கு எந்த உள்நோக்கமும் இல்லை. ஆனால், அவர் அமைதியடையவேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருந்தது.

மூத்த மைத்துனிதான் பக்கத்திலே உட்காரக்கூடாதே தவிர, இளையவள் உட்காரலாம் அல்லவா?

கடற்கரைக் காற்று இதமாக இருந்தது. நல்லவேளை, அது வசதி உள்ளவர்களை மட்டும் தழுவவில்லை. எங்களையும் தாலாட்டிற்று.

உலகத்தின் இரண்டாவது பெரிய கடற்கரை மெரீனா. அதன் பரப்பளவைப்போல மனித மனத்தின் பரப்பளவும் இருக்குமானால், இந்தக் காற்று அங்கேயும் வீசியிருக்கும் அல்லவா? கடுகு உள்ளங்களால் பட்ட அவதியை கடற்கரைக் காற்றில் மறந்தோம். சிறிதுதூரத்தில் ஏதோ ஒரு சினிமாப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதை வேடிக்கை பார்க்க ஒரு பெருங் கூட்டம் கூடியிருந்தது.

நான் பார்த்தவரையில் பொலிஸ் காரர்கள் செய்த ஓர் உருப்படியான வேலை அந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியதுதான்.

(விளக்கு எரியும்)

# வாராந்த செய்திக்கொத்து

## மஹிந்தவை தோல்வியடையச் செய்த பசில்!




தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் தோல்விக்கு பசில் ராஜபக்ஸதான் காரணம் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் கடந்த காலங்களின்போது மஹிந்த ராஜபக்ஸ தலைமையில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றன. அந்த இரண்டு தேர்தல்களிலும் மஹிந்த ராஜபக்ஸ தோல்வியையே தழுவினார். இதற்கு காரணம் பசில் ராஜபக்ஸவின் சில தவறான செயற்பாடுகளே என நாமல் ராஜபக்ஸ என்னிடமும் சில கட்சி உறுப்பினர்களிடமும் தெரிவித்ததாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

## ஒரு மூடை உரத்திற்கு 2,500 ரூபா கட்டுப்பாட்டு விலை! ஜனாதிபதி அறிவிப்பு



விவசாயிகளுக்கு வழங்கப்படும் சகலவகையான உரவகைகளினதும் ஐம்பது கிலோகிராம் மூடை ஒன்றுக்கு 2,500 ரூபா உச்ச விலையை நிர்ணயிப்பதற்கு ஜனாதிபதி குறித்த தரப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அத்துடன், கிழங்கு மற்றும் பெரிய வெங்காயங்களின் இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதற்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். நாடெங்கிலுமுள்ள விவசாய சமூகத்தினர் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு குறித்த சகல தரப்பினரதும் பங்குபற்றுகையுடன் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இந்த ஆலோசனைகளை வழங்கினார். இதுவரையில் 50 கிலோ கிராம் உரமூடையொன்று 2750 ரூபா 3400 மற்றும் 3500 என்ற விலைகளில் விற்பனை செய்யப்பட்டுவந்தது. மேலும், உரக்கொள்வனவின்போது விவசாய சமூகத்தினர் முகங்கொடுத்துவந்த பல்வேறு அசௌகரியங்களைக் கவனத்திற்கொண்டு ஜனாதிபதி இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

## சிறுநீரக வங்கியொன்றை நிறுவுமாறு கோரிக்கை!



நாட்டில் சிறுநீரக வங்கி ஒன்றை ஏற்படுத்து வதற்கு கட்டளையிடுமாறு கோரி, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்வர்ணா போபிட்டிய மன்றத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவில், சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அதிகாரிகளை கட்டளையிடு மாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த மனுவில், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பி.ஜீ.மஹிபால ஆகியோர் பிரதிவாதிகளாகக் பெயரிடப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அறிவிக்க வேண்டும்! கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலதாமதமின்றி நடத்துமாறு, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் இன்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை சந்தித்து கலந்துரையாடியபோதே, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் எதிர்வரும் மார்ச் 31ம் திகதியுடன் நிறைவடையவுள்ளநிலையில், அந்த காலப்பகுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அறிவிக்கவேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

## சுமந்திரனின் யோசனையை நிராகரித்த விக்னேஸ்வரன்!



யாழ்.நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையினர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஆலோசனைக்குழுவை நியமிக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட யோசனையை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நிராகரித்தார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

## வித்தியா படுகொலையில் திடீர் திருப்பம்! மேலும் இருவர் அதிரடி கைது



புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பாக மேலும் இருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அதே பகுதியை சேர்ந்த மாப்ளே என செல்லமாக அப்பகுதி மக்களால் அழைக்கப்படுபவரும், மற்றுமொருவரான சூரியின் மகன் என்பவருமே கைதாகியுள்ளனர். இவ்விரு சந்தேக நபர்களின் கைது தொடர்பாக அவர்களது உறவினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இவர்களை கடந்த இரு தினங்களிற்கு முன்னர் கொழும்பில் இருந்து சென்ற குற்றப்புலனாய்வு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

## ஒரு தமிழக மீனவர் கூட கைதுசெய்யப்படாத நிலை ஏற்படும்! துணை உயர்ஸ்தானிகர் நடராஜன்



எதிர்வரும் காலத்தில் ஒரு இந்திய, தமிழக மீனவர்கூட இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்படவில்லை என்ற அடிப்படையில் எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ஏ.நடராஜன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்திய அரசாங்கமும் தமிழக அரசாங்கமும் ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. எனவே இந்திய தமிழக மீனவர்கள் இலங்கையின் கடற்பகுதிக்குள் இழுவைப் படகுகளுடன் பிரவேசிக்கும் சம்பவங்கள் குறைய வாய்ப்புண்டு என்று யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ஏ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

## ராஜபக்ஷவினர் போன்று நாங்கள் விவசாயிகளின் மானியத்தில் கொள்ளையடிக்கவில்லை! -ரவி கருணாநாயக்க



ராஜபக்ஷ குடும்பத்தைப் போன்று இந்த அரசாங்கத்தில் எவரும் விவசாயிகளின் மானியத்தொகையில் கொள்ளையடிக்கவில்லை என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். நிதியமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க, ராஜபக்ஷ அரசாங்கத்தில் 350 ரூபா பெறுமதியான உரப்பை ஒன்றில் 150 ரூபா கமிஷனாக பெறப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கத்தில் யாரும் அப்படி கமிஷன் பெறுவதில்லை.

கடந்த வரவு - செலவுத்திட்டத்தின் பின்னர் ஒரு உரப்பையின் பெறுமதி 2500 ரூபா வீதம் மதிப்பிடப்பட்டு ஒரு போகத்துக்கு பத்து உரப்பைகளுக்கான 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இது நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், விவசாயிகளிடம் இருந்து யாரும் கமிஷன் பெறுவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சி உருத்திரபுரத்தில் தோன்றிய டைனோசர்



கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் டைனோசர் விலங்கு வடிவில் மரத்தின் ஒரு பகுதி காணப்படுகின்றது. இதனை அப்பகுதி மக்கள் பார்வையிட்டு செல்கின்றனர். குறித்த மரம் வெட்டப்பட்டநிலையில் இவ்வாறான விலங்கு வடிவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பலரதும் கவனத்தை ஈர்த்துள்ள இம்மரம் அப்பகுதி மக்களின் பொழுதுபோக்கு மையமாக திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பறை மேளக்கூத்தும் அதன் இன்றைய நிலையும்



(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இத்தன்மையானது பறைமேளத்தின் தனித்துவம் என்றே குறிப்பிடவேண்டும். அதேபோன்று மரணவீடுகளிலும் பறை அடிக்கப்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. இப்பண்பாடானது இன்று மருவிக்கொண்டுவருகின்றது. இத்தன்மைகளிலிருந்து பறைமேளக் கலையை வாழும் கலையாக தக்கவைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று பறைமேளம் பறையர் சாதியினரது பாரம்பரிய கலை வடிவமாக இருந்தாலும் அது தொழில்முறைசார் கலையாகவும், அவர்களது வாழ்வியலை வளப்படுத்திச் செல்கின்றது. பறைமேளக்கலையை சமூகத்தில் இருந்து ஒதுக்கினால் அவர்களது குடும்ப நிலையும் பாதிக்கப்படும். இவ்வாறான சவால்களை நீக்கும்விதத்தில் பறை மேளக்கூத்தினை வளர்த்தெடுக்க வேண்டும்.

இன்றைய அரங்கச்சூழலில் பாரம்பரியங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அந்தவகையில் பறைமேளக் கூத்தினுடைய மரபுத்தன்மைகள் மாற்றமடையாமல் ஆற்றுகைகள் இடம் பெறுதல்வேண்டும். ஆனால் இன்று பழந்தோர் மட்டங்களிலே நவீனத்துவ சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு பாரம்பரியக் கலைகளை மாற்றுவது ஒரு மனம் வருந்தத்தக்க செயற்பாடாகவே அமைகின்றது. கடந்த 2011 பங்குனி 25, 26, 27ஆம் திகதிகளிலே யாழ்ப்பாணத்திலே இடம்பெற்ற இசை விழாவிலே பல கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இவ்விழாவில் பறைமேளக்கூத்தானது மட்டக்களப்பு விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவக நாடகத்துறை மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சொர்ணாலி என்ற வாத்தியக்கருவி வாசிக்கப்படவில்லை. அத்தோடு உடையமைப்பு பாரதநாட்டிய பாணியில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அத்தோடு இதன் ஆட்டமுறைகள் கூத்துடனும், கண்டிய நடனங்களுடனும் தொடர்பு பட்டனவாகவே இருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் பாரம்பரியத் தன்மை களினை மீறுவதாகவே இருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளும் பறைமேளக்கூத்திற்கு சவாலாகவே அமைகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் பாரம்பரியக் கலைகளினை முன்னெடுப்பதில் பிரதேச செயலகத்திற்கு பங்குண்டு. கடந்த 2010ஆம் ஆண்டிலே இப்பிர தேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட மக்கள் கலை இலக்கிய விழாவில் பறைமேளக்கூத்தும் ஆடப்பட்டது. இது களுதாவளைப் பிரதேசத்து பரசு ராமன் மூப்பனாரின் மாணவர்களால் ஆடப்பட்டதாகும். இவ்வாறான கலைச் செயற்பாடுகள் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதேபோன்று கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை யினர் 2001இல் நடாத்திய நாடக தினவிழாவில் பறைமேளக்கூத்தும் ஆற்றுகை செய்யப்பட்டது சிறப்பான அம்சமாகும்.

பறைமேளக்கூத்தில் பாண்டித்தியம் பெற்ற மூப்பனார்கள் இளம்சமுதாயத் தினருக்கு பறைமேளக்கலை தொடர் பான அறிவு புகட்டுதலையும், எதிர்கால கலைச் செழுமை பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறுதல் வேண்டும். இவ்வாறு எதிர்காலத்தில் பறைமேளக்கலையை வாழும் கலையாக வளர்த்தெடுக்க மூப்பனார்கள் அர்ப்பணிப்புடன் செயற் படுதல் அவசியமாகும். அதேபோன்று சமூக உருவாக்கமானது சாதி ஏற்றத் தாழ்வுகள் அற்ற, சாதிவேறுபாடுகளை மதிக்கக்கூடியதாக இருக்குமாயின் பறையர்களுக்கு நிலையான சமூக அந்தஸ்து வழங்கப்படும். இத்தோடு பறை மேளக்கலைஞர்களையும், மூப்பனார்களையும் வருடாவருடம் கௌரவிப்பதன் மூலமாகவும் பறைமேளக்கூத்தினை வளர்த்தெடுக்கலாம்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் பாரம்பரியக் கலைகளை பேணப்பட வேண்டிய தேவைகள் இருப்பதனால் இதனை உணர்ந்து வளர்ந்துவரும் இளம் சமுதாயம் சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. இருப்பினும் பறைமேளக்கலையானது அதன் பாரம்பரியத்தன்மையிலிருந்து விலகிச் செல்லாமல் இன்றைய கல்வித்திட்டங்களிலும், பல்கலைக்கழக மட்டங்களிலும் அறிமுகப்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது ஆற்றுகை செயற்பாடுகளை மேம்படுத்தி வாழும் கலையாக மிளிரவிடவேண்டிய தேவை உள்ளதனால் இதனை உணர்ந்து ஆய்வாளர்களும் கலைஞர்களும் செயற்படுதல் அவசியமாகும்.

# பிராந்திய ஒருமைப்பாடு!


பிராந்திய ஒருமைப்பாடு என்ற பதத்திற்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும், அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு சர்வதேச அரசியலில் விளக்க மளிக்கப்படுகின்றது. ஒருமைப்பாடு என்ற பதம் வெவ்வேறு தேசிய அரசுகளின் எல்லைகளுக்கு அப்பால் சென்று, அரசியல் ஐக்கியத்திற்கான தேவையினை வலியுறுத்தி நிற்கின்றது. ஆயினும், 1960 களில்தான் பிராந்திய ஒருமைப்பாடு என்பது ஒரு கற்கைநெறியாகச் சர்வதேச அரசியலுக்குள் வளரத்தொடங்கியது.

ஒருமைப்பாடு என்ற பதத்தினை சட்டரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் நிலைநிறுத்தமுடியும் என்ற சிந்தனை சமஸ்டி முறை பற்றி ஏற்கனவே நிலைத்திருந்த சிந்தனையூடாகவே உருவாகியிருந்தது. சமஸ்டி முறையினை ஆதரிப்பவர்கள் ஒருமைப்பாடு என்பது சர்வதேச சமூகத்தின் முன்நோக்கிய பாய்ச்சல் என்பதைவிட தூரஇலக்கு எனக்கூறுகின்றார்கள். சுவிற்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் சமஸ்டி முறையில் இணைந்து கொண்ட சுதந்திரமான பிரதேசங்கள் இணைவுக்குப் பின்னர் தாம் ஏற்கனவே வைத்திருந்த இறைமையினை தொடர்ந்தும் எவ்வாறு பாதுகாத்துக்கொண்டனவோ அவ்வாறே உலகநாடுகளுக்கிடையிலான சமஸ்டி முறைமையின் ஒருமைப்பாடு ஏற்படுத்தப் படலாம். அதேநேரம், உலகளவு, பிராந்திய அளவு, ஆகிய இரண்டையும் கருத்திலெடுத்தே உலக சமஸ்டி முறை பற்றி யோசிக்கமுடியும் எனக் கூறுகின்றார்கள். ஆனால் நடைமுறையில் உலகத்தினை சமஸ்டி முறைக்குள் கொண்டுவருவது சாத்தியமற்றதும், கற்பனையானதுமாகவே இருந்தது.

ஒருமைப்பாடு தொடர்பாக தொடர் பாடல் அணுகுமுறை ஒன்றினை கால்டுச் (Karl w. Deutsch) முன்வைக் கின்றார். உள்குடியேற்றம், கல்விமான்கள் பரிமாற்றம், உல்லாசப் பிரயாணிகள், வர்த்தகம் போன்ற சர்வதேச விவகாரங்கள்மூலம் ஒருமைப்பாட்டிற்கான வழிவகைகளை உருவாக்கமுடியும். சமூக, அரசியல் ஒருமைப்பாட்டிற்கு அல்லது பாதுகாப்பான சமுதாய உருவாக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கூறிய சர்வதேச விவகாரங்கள் தலைமை தாங்கமுடியும். எனவே பாதுகாப்பான சமுதாய உருவாக்கத்திற்கான ஒருமைப்பாட்டினை டூச் இரண்டாக பிரிக்கின்றார். முதலாவது ஒன்றிணைக்கப்பட்ட தன்மைகொண்டது. மற்றையது பன்மைத் தன்மை கொண்டதாகும்.

ஒன்றிணைக்கப்பட்ட சமுதாய பாதுகாப்பிற்கு சிறந்த உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவினைக் கூறிக் கொள்ளலாம். இங்கு சமஸ்டி அரசாங்க முறையின்கீழ் பல அரசுகள் ஒன்று சேர்ந்து இயங்குகின்றன.

பன்மைத் தன்மைவாய்ந்த சமுதாயப் பாதுகாப்பில் மையப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரம் இருக்காது. ஆனால் தேசிய அரசியல் பிரதேசங்கள் தமக்கிடையில் உள்குடியேற்றம், கல்விமான்களின் பரிமாற்றம், உல்லாசப் பிரயாணிகள், வர்த்தகம்போன்ற தொடர்பாடல்களைத் தமக்குள்கொண்டிருக்கும். ஆனால், தமது எல்லைப் பிரதேசங்களை பலப் படுத்தவேண்டும் என்றோ தமக்குள் ஒருவருடன் ஒருவர் சண்டையில் ஈடுபட வேண்டுமென்றோ எதிர்பார்ப்பதில்லை. பன்மைத் தன்மை வாய்ந்த சமுதாயப் பாதுகாப்பானது, இயற்கையாக உள்ள பாரிய நிலப்பரப்பை கொண்டதாகவும் இருக்கும். உதாரணமாக, அமெரிக்கக் கண்டம், ஐரோப்பாக் கண்டம் போன்ற வற்றைக் கூறலாம். ஆனால் அரசியல் ஐக்கியத்திற்கான பாதை ஆயுதப் பலத்தினூடாக பெறப்பட்டிருப்பதை




வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள முடிகின்றது. தேசிய, பிரதேச அல்லது சர்வதேச மட்டத்தில் அரசியல் நடிகர் களுடையுடைய தோற்றம் சிக்கலானதும், அசாதாரணமானதாகவும் உள்ளது. இந்நிலையில் தொடர்பாடல் அணுகு முறையும், சமஸ்டி முறைமையும் ஒருமைப்பாடு பற்றி சிந்திக்க வைத்துள்ளது எனலாம்.

ஒருமைப்பாட்டு அணுகுமுறையினை அடிப்படையாகக்கொண்டு, பிராந்தியங் களை வரைவிலக்கணப்படுத்தும்போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பொதுவாக அவுஸ்ரேலியா, அமெரிக்கா ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா போன்ற கண்டங்கள் தொகுதியான நிலப் பரப்பினைக்கொண்டு பிராந்தியங்களாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன. துரதிஸ்டவசமாக பிராந்தியம் ஒன்றை வரைவிலக்கணப்படுத்தும்போது அப்பிராந்திய மக்களுக்கு இருக்க வேண்டிய பிராந்திய உணர்வு இங்கு இல்லாமல் இருப்பது பெரும் சிக்கலாக உள்ளது. உதாரணமாக ஐரோப்பாக் கண்டத்தின் கிழக்குப் பகுதி அரசுகள் சோசலிச அரசுகள் என அழைக்கப்பட்டன. ஆபிரிக்க கண்டத்தின் வடபகுதி (அரபுமொழி பேசும் இஸ்லாமிய சமய மக்கள் வாழும் பகுதி) மத்திய கிழக்குப் பிராந்தியம் என அழைக்கப்பட்டது.

பிராந்தியங்கள் பின்வரும் வகையில் ஒழுங்கமைக்கப்டுகின்றன.

**1. புவியியல் தன்மை:-**

கண்டங்கள், உபகண்டங்கள், தீவுக் கூட்டங்கள் போன்றவற்றின் புவியியல் வதிவிடங்களை அடிப்படையாகக் கொண்டு அரசுகளின் தொகுதி தீர்மானிக் கப்படுகின்றன. உதாரணமாக ஐரோப்பா, ஆசியா, போன்றவற்றை கூறலாம்.

2. இராணுவ, அரசியல் தன்மை:-

இராணுவக் கூட்டுக்கள், சித்தாந்தம், அரசியல் தன்மை போன்றவற்றின் அங்கத்துவத்தை அடிப்படையாகக்

**தனபாலசிங்கம் கிருஸ்ணமோகன்**

கொண்டு தேசிய அரசுகளின் தொகுதி தீர்மானிக்கப்படுகின்றது. உதாரணமாக கம்யூனிச முகாம் நாடுகள். முதலாளித்துவ முகாம் நாடுகள், மூன்றாம் மண்டல நாடுகள் நேட்டோ, வோர்சோ போன்ற வற்றைக் கூறலாம்.

**3. பொருளாதாரம்:-**

தெரிவு செய்யப்பட்ட பொருளாதார உற்பத்தியில் முன்னணி வகிக்கும் தேசிய அரசுகளை உள்ளடக்கிய பிராந்தியம்.

**4. சர்வதேச விவாகாரங்கள்:-**

உள்குடியேற்றம், உல்லாசப் பிரயாணம், வர்த்தகம், தொடர்பாடல் போன்ற மக்களின் பொருட்கள், சேவைகளின் பரிமாற்றத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்ட தேசிய அரசுகள் உள்ள தொகுதி. உதாரணமாக கிழக்கு ஐரோப்பா சோவியத் யூனியனின் சந்தையாக இருந்தது.

இவற்றைவிட மொழி, சமயம், கலாசாரம், சனத்தொகை, காலநிலை போன்ற விடயங்களும் பிராந்தியங்களை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பிராந்திய ஒழுங்கமைப்பு பற்றிய சிந்தனை இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே அபிவிருத்தியடைந்திருந்தது. பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் பின்வரும் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

## பிராந்திய பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் - நேட்டோ, வோர்சோ

பொருளாதார பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் - ஐரோப்பிய சமூகம், பரஸ்பர பொருளாதார உதவிக்கான சங்கங்கள், இலத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக நிலையம்.

பல்நோக்குச் செயற்பாடு கொண்ட பிராந்திய ஒழுங்கமைப்புக்கள்

கலாசார, இராணுவ, பொருளாதார, அரசியல் விடயங்கள் முதன்மையாகக் கொண்டு இவைகள் உருவாக்கப் படுகின்றன. ஐக்கிய அமெரிக்க ஒழுங்கமைப்பு, அரபு லீக்.

## பொதுநலவாய நாடுகள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான கெடுபிடி யுத்த சூழ்நிலையும், உலக கூட்டுப்பாதுகாப்பிற்கான கனவின் சிதைவும் பிராந்திய பாதுகாப்பு ஒழுங்கமைப்பு அபிவிருத்தியடைந்து வந்தமைக்கு முதன்மையான காரணி களாகும். ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு ஒப்பந்தம்செய்யும் மனோ பாவத்தின் வளர்ச்சியினால் 1940-களிலும், 1950-களிலும் அனேக பிராந்திய பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக நிறுவனமயப்படுத்தப்பட்டு 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நேட்டோ ஒழுங்கமைப்பை யும், 1982ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நேட்டோ ஒழுங்கமைப்பையும், 1952 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அன்சுஸ் (ANZUS) (அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா) ஒழுங்கமைப்பையும், 1954ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிட்டோ (SEATO) ஒழுங்கமைப்பையும் கொள்ளமுடியும். இவ் அமைப்புக்கள் அனைத்தும் நகரும் உலக அதிகாரம் என வர்ணிக்கப்படக் கூடியளவிற்கு தென்கிழக்காசியா, ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் ஐக்கிய அமெரிக்காவினால் தனது பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டவை களாகும். இவற்றைவிட 1955ஆம் ஆண்டு பிரித்தானியா தலைமையில் உருவாக்கப்பட்டு பக்தாத் (Baghdad Pact) என அழைக்கப்பட்டதுடன், 1959ஆம் ஆண்டிற்கு பின்னர் சென்டோ (CENTO) என அழைக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்கா மறைமுகமானதாகவே இணைந்துகொண்டது. அதேபோல சோவியத் யூனியன் பிரதிநிதித்துவம் வகிக்கும் கண்டத்திற்கு அவசியமான பிராந்திய பாதுகாப்பினை வோர்சோ என்ற பெயரில் 1955 இல் நிறுவிக்கொண்டது.

உலகம் முழுவதையும் இராணுவக் கூட்டுக்குள்ளாக்கியது போன்று உருவாக்கப்பட்ட கூட்டுக்களை பிராந்திய பாதுகாப்பிற்கான ஒழுங்கமைப்புக்கள் என வேறுபட்ட பரிமாணங்களில் வகைப்படுத்தி கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். உதாரணமாக, இப்போது தொழிற்படாது இருக்கும் சீட்டோ அமைப்பில் பங்கேற்று இருந்த தேசிய அரசுகளின் தலை நகரங்களுக்கிடையே ஆகக்கூடுதலாக 11,500 மைல்கள் இடைவெளி காணப்பட்டு இருந்தன. அதேபோல நேட்டோ அமைப்பில் பங்கேற்றிருந்த தேசிய அரசுகளில் தலைநகரங்களுக்கிடையே ஆகக் கூடுதலாக 5,500 மைல் இடைவெளி காணப்பட்டிருந்தன. OAS அமைப்பில் பங்கேற்றிருந்த அரசுகளுக்கு இடையே ஆகக்கூடுதலாக 5,300 மைல்கள் இடைவெளி காணப்பட்டிருந்தன. வோர்சோ அமைப்பில் பங்கேற்றிருந்த தேசிய அரசுகளின் தலைநகரங்களுக்கு இடையே ஆகக் கூடுதலாக 3,900 மைல்கள் இடைவெளி காணப்பட்டிருந்தன. ஈரானிய புரட்சியை தொடர்ந்து 1979 மார்ச்சில் செயலிழந்த சென்ரோ அமைப்பில் பங்கேற்றிருந்த தேசிய அரசுகளின் தலைநகரங்களுக்கு இடையே ஆகக் கூடுதலாக 3,700 மைல்கள் இடைவெளி காணப்பட்டிருந்தன. (பூமியின் மொத்த சுற்றளவு ஏறக்குறைய 25,000) மைல்கள் இதில் சீட்டோ என்ற பிராந்திய ஒழுங்கமைப்பு ஏறக்குறைய பங்கினை தனக்குள் எடுத்திருந்தது. எவ்வாறாயினும் உலக யுத்தத்தின் பின்னர் சோவியத் யூனியனின் இராணுவ பாதுகாப்பினை அல்லது ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ பாதுகாப்பினை ஏற்றுக் கொண்ட தேடிச் செல்கின்ற சிறிய தேசிய அரசுகளினதும், தந்திரோபாய நிலையில் பக்கம் சாராத தேசிய அரசுகளினதும் விருப்பத்துடன் இருதுருவ அதிகாரங்களையும், சித்தாந்தங்களையும் பிரதிபலிக்கின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட பாதுகாப்பு கூட்டுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

இப்பாதுகாப்பு பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் வல்லரசுகளுக்கு இடையிலான பதட்டத்தினை அல்லது கெடுபிடியை ஒவ்வொரு நிமிடமும் உறுதியாக்கக்கூடிய நிறுவனங்களாகவே காணப்பட்டிருந்தன. ஆனாலும் இப்பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் தமது முதன்மையான நோக்கங்களாகிய பரஸ்பர தந்திரோபாய அந்தஸ்தினை பேணிக்கொள்வது, வல்லரசகளுக்கிடை யிலான நேரடி யுத்தத்தினை தவிர்ப்பது என்பவற்றில் பெற்றிருந்தமையினை மறுக்கமுடியாது எடுத்துக்காட்டுக்களாக உலக யுத்ததிற்கு பின்னர் கிழக்கு, மேற்கு ஐரோப்பாவை பின்னணியாக கொண்ட கொரியா வியட்னாம் ஆப்கானிஸ் தான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட முரண்பாடுகளும். மூன்றாம் மண்டல நாடுகளில் ஏற்பட்ட அரபு - இஸ்ரேல் இந்தோ - பாகிஸ்தான், இந்தோ - சீன முரண்பாடுகளும் தந்திரோபாய செயற்பாடு களாலும், அணுகுண்டின் அச்சுறுத்தலாலும் பெரும் யுத்தங்களாக மாறாமல் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன.

அதேபோல காலனித்துவத்திற்கு எதிரான யுத்தம் அல்லது தேசிய விடுதலைப் போராட்டம், உள்நாட்டு யுத்தம், இராணுவப் புரட்சி போன்ற முரண்பாடுகளும் தந்திரோபாய செயற்பாடு களாலும், சிறப்பாக கையாளப் பட்டிருந்தன. ஆயினும், பிராந்திய பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் மூன்றாம் அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தன. குறிப்பாக OAS இல் அங்கத்துவம் வகிக்கும் எல்சல்வடோர் கொண்டுராஸ் ஆகிய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளும், நேட்டோவில் அங்கம் வகிக்கும் கிரேக்கம் துருக்கி ஆகிய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளும் வோர்சோவில் அங்கம் வகிக்கும் செக்கொஸ்லேவேக்கியா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடு களும் பிராந்திய பாதுகாப்பு ஒழுங்கமைப்பிற்கு பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியிருந்தன.

# வாரமொரு காரம்



# ஒல்லாந்தர் கோட்டைக்குள் ஒரு சில துஸ்பிரயோகங்கள்!

யாழ்.நகரில் உள்ள ஒல்லாந்தர் கோட்டைப்பகுதியின் உள்புறமும் வெளிப்புறமும் சிறுவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்கள் தமது பெற்றோர்களின் வழிநடத்தலில் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலைக்கு சென்று கல்வி கற்றலை முடித்துக்கொண்டு தமது குடும்பத்தாருடன் சிறிய பொருட்களை மாலைநேரத்தில் விற்பனை செய்துவருகின்றனர். சில சிறார்கள் அனாதரவாகவும் நின்று வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் பாடசாலைக்கு செல்லாது தொடர்ச்சியாக வியாபாரத்திலும் ஈடுபட்டுவருகின்றனர்.

மறுபுறத்தில் காதல் எனும் பெயரில் இடம்பெறும் சீரழிவுகளும் இவ்விடத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றன. பிரத்தியேக வகுப்புக்களிற்கு செல்வதாகக் கூறிக்கொண்டு பெற்றோரையும் மற்றோரையும் ஏமாற்றும் பல செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இளம்வயதில் பல துன்பியல் சம்பவங்களெல்லாம் மேலோங்கிக் காணப்படுகின்றன. இதனால் ஒரு வயதுக் குழுவினர் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க அதனை வியாபாரத்தில் ஈடுபடும் இந்தச் சிறுவர்களும் பார்த்து பல சீரழிவுச் சிந்தனைகளிற்கு உட்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கில் கடந்த கால கோர யுத்தம் பொதுமக்கள் மத்தியில் கசப்பான சிந்தனைகளை தோற்றுவித்ததோடும் தற்போது யுத்தம் நிறைவடைந்தநிலையிலும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரிதளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேற்றப்பட்டு அகதிகளாகவும் வேறு இடங்களில் தஞ்சம்புகுந்து வாழ்ந்து வருகின்றவர்கள் தமது வறுமையை போக்க வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை பெற்றோர்கள் மட்டுமில்லாது கல்வி கற்றலில் மற்றும் சமூக பண்புகளில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. ஒரு பிள்ளையை ஒழுக்கங்கள் நிறைந்த மாணவனாகவும் எதிர்காலத்தில் நற்பிரஜையாகவும் ஆக்கவேண்டியதும் இவர்கள் கையில்தான் இருக்கின்றது. குறிப்பாக பெற்றோர்கள் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிறுவர்களின் எதிர்காலத்தை



கருத்திற்கொண்டும் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்பவும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

தற்போது மலர்ந்திருக்கும் நல்லாட்சி அரசாங்கம் மற்றும் உரிய அதிகாரிகள் சிறுவர்கள் விடயங்களை கவனத்தில் எடுத்து சிறுவர் குடும்பங்களின் எதிர்கால நலனுக்காக சிறப்பான முறையில் வாழ்வாதார தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் முன்வர வேண்டும்.

**பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை பெற்றோர்கள் மட்டுமில்லாது கல்வி கற்றலில் மற்றும் சமூக பாண்புகளில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் இன்றியமை யாதது ஒரு பிள்ளையை ஒழுக்கங்கள் நிறைந்த மாணவனாகவும் எதிர்காலத்தில் நற்பிரஜை ஆக்கவேண்டியதும் இவர்கள் கையில்தான் இருக்கின்றது. குறிப்பாக பெற்றோர்கள் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.**

# இந்தவாரம் உங்கள் பலன்

(03.03.2016 தொடக்கம் 09.03.2016 வரை)

## மேடம்

தான் உண்டு தன்வேலை உண்டு என்று இருக்கும் நீங்கள் மற்றவர்களின் நடவடிக்கைகளை நன்கு அறிந்துகொள்வதில் வல்லவர். இந்த காலகட்டத்தில் எதிர்பாராத செல்வம் சேரும். உத்தியோகஸ்தர்கள் புதிய பொறுப்புகள் பெற்று நன்மை அடைவார்கள். குடும்ப ஸ்தானத்தை ராசிநாதன் செவ்வாய் மற்றும் சனிபார்க்கிறார்கள். அதேவேளையில் ராசியை குரு பார்ப்பதும் மிக அருமையான அமைப்பாகும். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டிற்கு தேவையான பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். பிள்ளைகளுடன் சந்தோஷமாகப் பொழுதை கழிப்பீர்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த செல்வசேர்க்கை உண்டாகும்.

## இடபம்

குணத்தில் சாந்தமாக இருக்கும் அதே வேளையில் யாரேனும் தேவையற்று சீண்டினால் பொறுக்காமல் பாய்ந்துவிடும் உங்களுக்கு, இந்த காலகட்டத்தில் ராசிநாதன் தர்ம ஸ்தானத்தில் அமர தர்மகர்மாதிபதி சனி, சப்தம விரயாதிபதி செவ்வாயுடன் இணைந்து ராசியை பார்க்கிறார். மனதில் நிம்மதி உண்டாகும். ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 9ல் சஞ்சாரம் செய்வதால் உதவிகேட்டு வருபவர்களுக்கு தயங்காமல் செய்வீர்கள். இரவில் நல்ல உறக்கம் வரும். மற்றவர்களுக்கு ஆலோசனை கூறும் நிலை உருவாகும். கணவன், மனைவிக்கிடையே அன்பு நீடிக்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள். காரியத்தடை நீங்கும்.

## மிதுனம்

எதிலும் நேரிடையாக ஈடுபடாமல் மறைமுகமாக காரியம் சாதித்துக் கொள்ளும் திறமை உடைய உங்களுக்கு ராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் தைரியாதிபதி சூரியன் - கேதுவுடன் இணைந்திருக்கிறார். ராசி நாதன் இருக்கும் வீடு அவருக்கு நட்பு வீடாகும். குரு ராசிநாதனைப் பார்க்க சனி - செவ்வாய்க்கு கேந்திரம் பெற்றிருக்கிறார். இந்த காலகட்டத்தில் மனக்கவலை நீங்கி தைரியம் உண்டாகும். ராசிக்கு 9இல் ராசியாதிபதி புதன் சஞ்சரிப்பதால் எதிலும் இலாபத்தை பார்க்கலாம். நன்மைகள் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்தக் காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள்.

## கடகம்

இனிமையான பேச்சும், குளுமையான பார்வையும் உடைய உங்களுக்கு இந்த காலகட்டத்தில் குரு ராகு தனஸ்தானத்தில் இருக்க - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் செவ்வாய், சனி - சப்தமஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது என அமைப்பு இருக்கிறது. ராசியை சுக்கிரன் பார்க்கிறார். எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்துமுடிப்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். அடுத்தவரிடம் பொறுப்புகளை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் ஸ்தானத்தை குரு பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்கவேண்டியிருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்கும். நிலுவை பாக்கிகள் வசூலாகும்.

## சிங்கம்

எதைக்கண்டும் அஞ்சாமல் நிமிர்ந்து நிற்கும் உங்களுக்கு தைரியமே பலம். ராசியில் குரு ராகு - சுகஸ்தானத்தில் செவ்வாய், சனி - ரண ருண ஸ்தானத்தில் சுக்கிரன் - சப்தம ஸ்தானத்தில் ராசிநாதன் சூரியன், புதன், கேது என கிரகங்களின் சஞ்சரிக்கின்றன. இந்த காலகட்டத்தில் ராசியை சனி பார்த்தாலும் குரு சஞ்சாரம் இருப்பதால் முயற்சிகளுக்குப் பிறகு வெற்றி கிடைக்கும். உடல்நலம் சிறக்கும். விரோதம் மறைந்து நட்பு ஏற்படும். வீண்செலவு குறையும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும்.

## கன்னி

வெளிப்படையாக பேசுவது போல் இருந்தாலும் சில விஷயங்களை மறைத்து விடும் உங்களுக்கு இந்த காலகட்டத்தில் ராசியாதிபதி புதன் ராசிக்கு ஆறாம் இடத்தில் சூரியன், கேது சேர்க்கைபெற்று, செவ்வாய் - குரு பார்வை பெறுகிறார். பெரியோர் ஆதரவு, எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவு-வதால் சமூகத்தில் மரியாதையும் கிடைக்கும். தூரதேச பிரயாணங்கள் அமையும். சுபநிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெறும். வழக்குகள் சாதகமாகும். ஆரோக்கியக் குறைபாடு நீங்கும். தொழில் ஸ்தானத்திற்கு ராசிநாதன் புதன் கோணம் பெறுகிறார். பெண்களின் செயல்களுக்கு மற்றவர் ஆதரவு கிடைக்கும். நன்மதிப்பை பெறுவீர்கள்.

## துலாம்

அளவான பேச்சும், அதிக நண்பர்கள் இல்லாமல் இருந்தாலும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் ஆர்வம் காட்டும் துலா ராசியினரே. இந்த காலகட்டத்தில் ராசிநாதன் சுக்கிரன் கேந்திரம் பெற்றிருக்கிறார். லாபஸ்தானத்தில் இருக்கும் குரு தைரிய ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் சப்தமஸ்தானம் ஆகியவற்றை தனது அருட்பார்வையால் நிறைக்கிறார். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். ஆனாலும், கவனமாக எல்லோரிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக இருப்பதும் அன்பாக பேசுவதும் நல்லது. நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

## விருச்சிகம்

சொன்னாற்போல இருக்கவேண்டும். அது சுட்டாற்போலும் இருக்க வேண்டும் என்று திறமையாக பேசும் குணமுடைய உங்களுக்கு இந்த காலகட்டத்தில் ஏழரைச் சனியின் பிடியில் இருந்தாலும் ராசிநாதன் செவ்வாய் உட்பட ஏனைய கிரகங்களின் சாரம் அனுகூலமான பலன்களை தருகிறது. மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் தடை, தாமதம் நீங்கும். உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக காணப்படுவார்கள். சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கணவன், மனைவிக்கிடையில் மனக்கசப்பு மாறும். குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டி, அவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். மனநிம்மதி உண்டாகும். உறவினர்கள் வருகை இருக்கும். பெண்கள் எந்த ஒரு செயலையும் மிகவும் அக்கறையுடன் செய்து முடிப்பீர்கள்.

## தனுசு

யார் எந்த பிரச்சினை என்று வந்தாலும் அவர்களுக்கு தகுந்த ஆலோசனை கூறி சிக்கலை தீர்க்கும் குணமுடைய உங்களுக்கு இந்த காலகட்டத்தில் தனஸ்தானத்தில் சுக்கிரன், தைரிய ஸ்தானத்தில் சூரியன், புதன் - கேது, பாக்கியஸ்தானத்தில் ராசிநாதன் குரு - ராகு, விரய ஸ்தானத்தில் செவ்வாய், சனி என கிரக சஞ்சாரம் இருக்கிறது. ராசிநாதன் குரு நல்ல பலன்களை அளிக்கும் எல்லா ஸ்தானங்களையும் பார்க்கிறார். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச்செலவுகள் இருக்கும். பணவரத்து திருப்தி தரும். உங்களுக்கு யாராவது உறுதுணையாக இருப்பார்கள்.

## மகரம்

சோம்பேறியாக இருப்பது கூடாது எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் உங்களுக்கு இந்த காலகட்டத்தில் யோகாதிபதி சுக்கிரன் ராசியில், தனஸ்தானத்தில் சூரியன், புதன் - கேது அஷ்டம ஸ்தானத்தில், குரு - ராகு லாபஸ்தானத்தில், ராசிநாதன் சனி, செவ்வாய் என கிரகங்கள் வலம் வருகின்றனர். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். சுபகாரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பயணங்களின் போதும் வாகனங்களை பயன்படுத்தும் போதும் கவனம் தேவை.

## கும்பம்

எவ்வளவு வேலை என்றாலும் சளைக்காமல் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு இந்த காலகட்டத்தில் ராசியில் சூரியன், புதன் - கேது, சப்தம ஸ்தானத்தில் குரு - ராகு, தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - சனி, விரய ஸ்தானத்தில் சுக்கிரன் என கிரகநிலை இருக்கிறது. நீண்ட வருடங்களுக்குப் பிறகு காலசர்ப்ப யோகம் பெறுகிறீர்கள். குரு அனுகூலம் பெறுவதால் எல்லா காரியங்களும் சுமுகமாக முடியும். மனத்துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்துமுடிப்பீர்கள். செலவு அதிகரிக்கும். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் ஸ்தானத்தை ராசிநாதன் சனி, தைரிய தொழிலாதிபதி செவ்வாயுடன் பகிர்ந்துகொள்கிறார்.

## மீனம்

சிக்கனம் வீட்டைக் காக்கும் என்பதை நன்கு உணர்ந்து எதிலும் ஆடம்பரம் காட்டாமல் அமைதியாக இருக்கும். உங்களுக்கு இந்த காலகட்டத்தில் ராசிநாதன் குரு ஆறாமிடத்தில் ராகுவுடன் இணைந்திருக்கிறார். ராசிநாதன் ராசிக்குள் மறைந்திருந்தாலும் அவர் பார்வையால் சிறப்பான பலன்களைப் பெறப்போகிறீர்கள். ஜனனகால சந்திரனுக்கு மற்ற கிரகங்கள் அனைத்தும் அனுகூலமாக இருக்கிறார்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். சாதூரியமாகப் பேசி காரிய வெற்றி அடைவீர்கள். பணவரத்து அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.





## தலைகீழ் வீடு...

தாய்வானின் தாய்பே நகரிலுள்ள பூங்காவொன்றில் தலைகீழான தோற்றத்தில் வீடொன்று கட்டப்பட்டு உள்ளது. வீட்டின் வெளிப்புறத் தோற்றம் மட்டுமல்ல அதன் உள்ளேயும் அனைத்தும் தலைகீழாக இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிசய வீட்டை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் வியப்புடன் பார்த்து செல்கின்றனர்.




## பரம்பரை...



ஜப்பானின் எல்லைக்குட்ட யமனஷி பகுதியில் அமைந்துள்ளது நிஷியாமா ஒன்சென் கீயன்கன் (Nishiyama Onsen Keiunkan) ஹொட்டல். சுமார் 1311 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 705 ஆம் ஆண்டில் புஜிவாரா மஹிட்டோ என்பவரால் இந்த ஹொட்டல் கட்டப்பட்டது. உலகின் பழமையான ஹொட்டலாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ள இந்த ஹொட்டலில் மாமன்னர்கள், சாமுராய்கள் மற்றும் ராஜ பரம்பரையை சேர்ந்த பலர் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1300 ஆண்டுகள் கழிந்தநிலையிலும் இன்னும் இந்த ஹொட்டல் சுற்றுலா பயணிகளை ஈர்த்துவருகிறது.



## இரத்தினக் கல்...



அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட லூகேப்பா டயமன்ட் கம்பனி எனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரத்தினக்கல் அகழ்வின்போது இந்த 404 கரட் வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளை வைரக்கல்லானது, அங்கோலாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரக்கல்லாகும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மதிப்பு சுமார் 2 கோடி அவுஸ்திரேலிய டொலர்கள் (சுமார் 200 கோடி ரூபா) என மதிப்பிடப்பட்டுள்ளதாக லூகேப்பா டயமன்ட் கம்பனியின் தலைவர் மைல்ஸ் கென்னடி தெரிவித்துள்ளார்.

## சுண்டுக்குளி மகளிர் பாசையூர் சென். அன்ரனிஸ் யாழ்.கோட்ட வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப்பிரிவில் பாசையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.பாடசாலை அணியும் 17 வயது, 19 வயதுப் பிரிவுகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணிகளும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.









இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அந்புதன் அச்சகத்தில் டீ.டீ என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மார்ச் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.